
ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

10—8—34.



மெல்பேர்ன் நகரிலிருக்கும் ஒரு தெருவின் தோற்றம்.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.


மலர் கச. சென்னை, பவ௵ ஆடி௴ 26௳ வெள்ளி (10-8-1934) இதழ் கூ.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடி லாது
சொந்தவர சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்நிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க!

அடிகள் தவம்

காந்தி யடிகள் இவ்வாரம் தவங் கிடக்கின்றார். ஒருவாரம் உண்ணாமை மேற்கொண் டிருக்கின்றார். இன்று விரதத்தின் நடு நாள். அடிகட்கு உண்ணா விரதம் புதுமையான ஒன்றல்ல. ஆனால், இம்முதுமைப் பருவத்தில் அடிக்கடி அடிகள் இப்படி விரதம் எடுப்பது அவர் அடியார்கட்குப் பெருந் துயரத்தைத் தருகிறது. அடிகள் இன்ன தவத்தால் "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" உயர்கின்றார். நாடு இந்நிகழ்ச்சி கண்டு கலங்குகின்றது. முன்னே அடிகள் இருபத்தொரு நாட்கள்கூட உண்ணாதிருந்தும் அதிகக் களைப்படையாதிருந்தது உண்மை. இப்போது அத்தகைய நிலையில் அடிகள் உடல் இல்லை.

தவந் தொடங்கச் சில நாட்கள் முன்னர் தொடர்ந்த நீண்ட பிரயாணத்தாலும் இடை யீடில்லா வேலையாலும் பெரிதும் தளர்ந்து உடல் வெம்மையும் உற்றார் அடிகள். எனினும் ஒழுங்குப்படி நடாக்கப் பெரிதும் பயின்றவர் அடிகளாதலின் குறித்தவாறு உண்ணாமை தொடங்கி விட்டார். வேளை தவறாது உண்டுண்டு பழகி ஒரு வேளை உணவு குறையினும்



வாடி வதங்கும் இவ்வுலக மக்கள் தொடர்ந்து பல நாட்கள் உண்ணாமை மேற்கொள்வதன் சிரமத்தை அறியாதிரார். இச்சிரமத்தை வேண்டுமென்றே தலைமேற் போட்டுக்கொண்டு பழுத்த கிழ உடலை, உலகம் போற்றும் பெரியார் நலிவு செய்வது ஏன் என்பதை மக்கள் சிந்தித்தல் வேண்டும்.

அந்தோ! தீண்டாமை விலக்கில் ஈடுபட்ட நாள்தொட்டு எத்துணை முறைதான் உண்ணா விரதம் கொள்வது! இன்னும் தீண்டாமை வேண்டும் என்று கருதுவோர் இருந்து ஆங்காங்கு செய்யும் தொல்லை காரணமாகவே யன்றோ அடிகள் உடல் கரைகின்றது. கருணை உருவம் இப்படியா வருந்துவது! "அன்னை திருப்பணியேற்ற அதனால், ஐயோ! அருள் வடிவத் திருமேனி எழில் வருந்தப், பன்னரிய துன்பமெலாம் வலிய ஏற்றுப் பன்னெடுநாள் சிறையிருந்த" கொடுமை போதாவா? வெளியே வாழும் போதும் பொன்புரையும் திருமேனி போன்றவரும் வினையேயோ நடைபெறல் வேண்டும்.

அடிகள் தீண்டாமை விலக்குக்கு மாறான கருத்துடன் கலகம் விளைத்தோர் தாக்கப்பட்ட காரணமாக அடிகள் உடல் ஒரு வாரம் உணவு கொள்ளாது வாடுகின்றது. இந்த உயர் தகைமையை அடிகளையன்றி யாரிடம் காண முடியும் இவ் உலகில். இத்தவத்தின் காரணமானோர் இதனை உணர்கின்றனரா? கருணை உருவம் கரைகின்றதை—கல்விக் கடல் காய்கின்றதை—சாந்த வடிவம் தளர்கின்றதை—சபர்மதி வாழ்வு சருகு போல்வதை—சுடர்த் திரு

மேனி சுருங்குவதை—தூய்மை உடலம் துண்ணென்பதை இந்தியர் உளம்பொருந்த உணர்கின்றனரா? உணர்ந்தால் அவர்க்குரிய கடன்—அவ்வுணர்ச்சியைக் காட்ட அவர் மேற்கொள்ள வேண்டிய கருமம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் இன்னதெனத் தெளிவாக இருக்கிறதே. அது தீண்டாமையைப் பூண்டோடு அறுத்தல் என்ற ஒன்று என உரைக்கவும் வேண்டுமா? காந்தியடிகளின் இத்தவத்தைத் தீண்டாமை விலக்கு இயக்கத்தின் கடைசித் தவ விரதமாக ஆக்க முயல வேண்டுவது இந்தியர் கடமை. இத்தவத்தைத் தீண்டாமைக்குச் செய்யும் ஈமக் கடனாக்க நாடு முந்துவதாக! அடிகள் தவ விரதம் இனிது நிறைவேறுக! அடிகள் வாழ்க! வாழ்க!! பன்னெடுநாள் வாழ்க!!!

"இலகுபுவி தனில்முன்னுள் எண்ணற்றோர்
அறம்வளர்த்தார்; எனினும், உன்போல்
உலகீன்றோர் நிறமனைத்தும் ஒருசேரக்
கலருசெயல் உடைமை பூண்ட
பலர்புகழும் பெருமையுளார் இலை! சரதம்!
பாரதர்தம் வாழ்வே!! காந்தி!!!
நிலவிடுக! நீவுலகில்! நெடுங்கடலோ
டிரவிமதி நிற்கு மட்டும்!"

இடி முழக்கம்

காந்திஜியைக் கொல்ல சதி?

லண்டனில் வெளியாகும் "டெய்லி எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கில தினசரி, காந்திஜீ கல்கத்தாவுக்கு விஜயம் செய்த போது அவரது மோட்டார்காரின் மீது வெடிகுண்டெறிந்து அவரை அழித்துவிட வங்காளப் பயங்கர இயக்கக்காரர்கள் முயன்றார்களென்று கூறி, கல்கத்தாப் போலீசார் மேற்படி பயங்கர இயக்கக்காரர்கள் சதி வெற்றிகரமாக முடியாவண்ணம் பொறுப்பாக தடைசெய்துவிட்ட தற்காப்பு முறையைப் பாராட்டுகிறது. மேலும் அது எழுதுகையில்,

"இப்போது காந்திஜீயை இகழ்கின்றவர்களும், மோட்டாரில் குண்டெறிய முயல்பவர்களும் அவரது உயிரைக்குடிக்கச் சதி செய்பவர்களும் சில வருடங்கட்கு முன்பு அவரைப் புனிதரென்றும், இந்தியாவைச் சாசுவதமான சொர்க்க வாழ்வுக்கு வழி காட்டுபவரென்றும் நினைத்துக் கவுரவித்தவர்களாவர்" என்கின்றது.

டெய்லி எக்ஸ்பிரசின் கூற்றைக் காணும் இந்தியர்கள் நகைப்பும் எரிச்சலும் கொள்ளாமலிருக்க முடியாது. பரத கண்டத்தில் வாழும் 35 கோடி மக்களில் ஒருவராவது வங்காளத்தில் காந்திஜீயைக் கொலைசெய்ய ஓர் சூழ்ச்சி நடைபெற்றதென்பதை அறியார். ஆங்கிலப் பத்திரிகைகள் அடிக்கடி இவ்வாறு பொய் மூட்டைகளைக் கட்டி இங்கிலாந்தில் பரப்புவது உண்டு. இதனால் இந்தியர்கள் மேலும் காந்திஜீ மீதும் இழிவான எண்ணத்தை உற்பத்தி செய்துவிடலாமென்பது கருத்துப்போலும். இது உண்மையானால் மேற்படிப் பத்திரிகை தம் தப்புப் பிரசாரத்தால் இந்தியர்—ஆங்கிலேயர் மனஸ்தாபத்தை அதிகரித்ததாகவே முடியுமென்பதை உணரல்வேண்டும்.

பட்டம் பெற்றவர் பரிசு

ஆகஸ்டு இரண்டாந் தேதி சென்னை பீப்பில்ஸ் பார்க்கில் கழுத்து நறுக்கப்பட்டு ஓர் வாலிபர் கிடந்தார். மரண விசாரணையின்போது ஆளடையாளம் கண்டு பிடிக்கப்பட்டதில் கொலையுண்ட வாலிபர் பெயர் டி. வி. ஸ்ரீநிவாசன் என்றும் ஜி. டி. எ. பரீக்ஷை தேறியிருக்கின்றாரென்றும் நெடுநாள் வேலைக்குப் பார்த்துக் கிடையாததால் வாழ்க்கையில் வெறுப்புற்று க்ஷவரக் கத்தியால் கழுத்தை அறுத்துக் கொண்டாரென்றும் தெரிந்ததாம். ஜூரிகள் தற்கொலை செய்து கொண்டதாக அபிப்பிராயம் கூறினர். பட்டதாரிகள் இவ்வாறு தற்கொலை செய்து கொள்வதான செய்தி இந்தியர்கட்குப் புதிதல்ல. எத்தனையோ ஆண்மையும் திறமையும் புத்தி சாதுரியமுமுடைய நம் வாலிபர்கள் தற்காலப் படிப்பைக் கற்ற காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டச் சுழலில் சிக்கி, வேறு காலந் தள்ளுவதற்கான மார்க்கங்களையும் கண்டுபிடிக்க முடியாமலாகிக் கடைசியில் தற்கொலைக் காளாகின்றார்கள். இப்படியே கலாசாலைப் படிப்பினால் சேர்ந்து கொண்டிருப்பதானால் உயிர்ச் சேதத்திற்கு யார் ஜவாப்தாரி? காலம் தள்ளுவதற்குத் தகுந்த முறையில் படிப்பைத் திருத்தி யமைக்கவோ வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க முயலவோ செய்யவேண்டுவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடமையல்லவா?

இதற்கென் சொல்கிறார்?

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் டில்லி சட்ட சபையில் ஒரு நாள் தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் வரக் கொஞ்சம் நேரமாயிற்றாம். அதுவரையிலும்—சுமார் ஒரு மணி நேரம்—திரு. எம். சி. ராஜா அவர்கள் தலைமை வகித்துச் சபையை நடாத்தினராம். அதுபோது மெம்பராக விருக்கும் சனாதன சிரேஷ்டர் கனம் கிருஷ்ணமாச்சாரியார் கூட்டத்திலேயே அமர்ந்திருந்தாராம். தீண்டாமை, ஜாதிபேதம், உயர்வு தாழ்வு, பிராமண ஆதிக்கம், முதலிய ஒரு பெரிய ஜாபிதாவைப் பிரசாரம் செய்து வரும் கனம் கிருஷ்ணமாச்சாரியார், ஒரு ஹரிஜனர் தலைமை வகிக்க அதன் கீழ் உறுப்பினரா யிருப்பதென்றால் சாஸ்திரம் சம்மதிக்குமா வென்பது தெரியவில்லை. தன் மனதை யெல்லாம் பிடித் தடக்கிக் கொண்டு ஒரு மணி நேரத்தைக் கழித்துவிட்ட ஆச்சாரியார் அதேபோல் ஆலயப் பிரவேசத்திலும் இருந்துவிடுவது பெரியதல்லவே?

ஒருபுறம் பிளவு!

பரோடா சமஸ்தானத்தில் பேட் என்ற ஓரிடமிருக்கிறது. அதில் சங்க தீர்த்தமென்ற ஓர் நீர் நிலையுண்டு. அதில் நீண்டநாளாக இந்துக்களும் முஸ்லிம்களும் ஸ்நாநம் செய்து வந்தார்கள். ஆனால் இந்துக்கட்கு அது ஓர் புண்ய ஹைந்தவ தீர்த்தமென்பது கருத்தாம். ஆதலால் மகமதியர் அந்த நீர் நிலையை உபயோகப் படுத்துவதை உள்ளூர ஆக்ஷேபித்து வந்தார்களாம். சமீபத்தில் பரோடா கமிஷனர் ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். அதில் "முஸ்லிம்கள் சங்க தீர்த்தத்தை உபயோகப் படுத்துவது இந்துக்கள் மத உணர்ச்சியைப் புண்படுத்தி வருவதால் இனிமேல் அக்குளத்தில் முஸ்லிம்கள் குளிக்கக்கூடாது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஓர்பால் இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உற்பத்தி செய்ய முயற்சி நடக்கையில் இன்னொருபால் இந்து-முஸ்லீம் வேற்றுமை ஏற்படுத்தப்படுதற்கு இது ஓர் உதாரணமல்லவா?

உபவாசத்திற்கு முன் மகாத்மா அறிக்கை

அனைவரும் உபவாசம் நடத்துவதற்கில்லை

காங்கிரஸ் ஊழியர்களுக்கு எச்சரிக்கை

மகாத்மாஜியின் உண்ணாவிரத ஆரம்ப தினத்திற்கு முன் தினமான ஆகஸ்டு 6ல் அவர் மௌன விரதம் அனுஷ்டிக்கையில், ஓர் அறிக்கை வரைந்தார். அவ்வறிக்கையின் விவரம் வருமாறு:—

"நாளை (செவ்வாய்க் கிழமையிலிருந்து நான் ஏழு தினங்கள் உண்ணா விரதம் அனுஷ்டிக்க விருப்பதால், ஹரிஜன ஊழியர்கள் அதிகமான ஆத்ம பரிசுத்தத்தின் மூலமும், தங்கள் முன்னுள்ள வேலையில் அதிகமான சிரத்தை செலுத்துவதன் மூலமும் நம் நோக்கம் ஈடேற உதவிசெய்ய வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன்.

இவ்வியக்கத்தில் நம்பிக்கை கொண்டவர்களாயும், பொறுமையுடன் உழைத்து வந்து ஆத்ம பரிசுத்தமும், ஒழுக்கமும் பெற்றவர்களாயுமுள்ள ஊழியர்கள் இடைவிடாது முயற்சிசெய்து வந்தாலன்றி தீண்டாமைப் பேயைக் கொன்றொழிப்பதற் கில்லை.


யார் வேண்டுமாயினும், எந்த சமயத்திலும் உண்ணா விரதம் அனுஷ்டிக்கலாமெனக் கருதுவது தவறென்பதை அனைவரும் உணர்வாராக. நம்பிக்கையின்றி உபவாசம் நடத்துவதால் பேராபத்தான விளைவுகளும் ஏற்படக்கூடும். இத்தகைய புனிதமான கருவிகள் யோக்கியதை யற்றவர்களால் உபயோகிக்கப் படுகையில் அபாயகரமானவை யாகிவிடும்.

காங்கிரஸ் வாதிகளுக்கு எச்சரிக்கை

காங்கிரஸ் வாதிகள் காங்கிரஸ் ஊழியர்கள், இவர்களுக்கும் நான் ஒரு எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றேன். சென்ற மாதத்தைப்போல் அடுத்த ஏழு தினங்களிலும், அவர்களைப் பற்றி நான் சிந்தித்து வருவேன். சில இடங்களில் காங்கிரஸ் தேர்தல்களில் காட்டப்பட்ட மாச்சரியத்தையும், காங்கிரஸ் ஊழியர்கள் ஓட்டுகள் சேகரிக்க ஒழுங்கற்ற முறைகளைக் கையாண்டு, வழக்கமாகக் கதராணிவது பற்றிய விதியைத் துஷ்பிரயோகப் படுத்திவந்ததையும் கண்டு நான் அடைந்துள்ள வெறுப்பும் பீதியும் கொஞ்ச நஞ்சமன்று. இத்தேர்தல்கள் நேர்மையாக, அஹிம்சா தர்ம முறைப்படி நடைபெற வேண்டுமெனத் தெளிவாக விதிக்கப்பட்டிருக்கிறது. எனினும், இத்தேர்தல்களில் நேர்மை, அஹிம்சா தர்மம் இரண்டும் காணப்படவில்லை. எனது உபவாசத்திற்கும், இவ்வொழுங்கற்ற முறைகளுக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லையாயினும், நான் எவ்வளவு மனவேதனையுடன் இவ்வார்த்தைகளை வெளியிட்டிருக்கிறே னென்பதைக் காங்கிரஸ் ஊழியர்கள் அறிந்து இப் பிராயச்சித்த வாரத்தில், ஆத்மபரிசோதனையின் மூலமும் காங்கிரஸ் தனது அடிப்படையான கொள்கைக்கொத்த ஸ்தாபனமாக விளங்குமாறு செய்வதென உறுதிகொள்வதன் மூலமும், அவ்வூழியர்கள் எனது மனவேதனையைத் தணிக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

காங்கிரஸ் பரிசுத்தம் பெற்று விளங்குமாறும் நான் பிரார்த்தனை செய்துவருவேன். இம் மாபெரும் தேசிய ஸ்தாபனம் பரிசுத்தமுறுவதால் ஹரிஜன இயக்கமும் வலுவடையும். ஏனெனில் காங்கிரசும் தீண்டாமையை ஒழிக்கும் வேலையை மேற் போட்டுக்கொண்டிருக்கிறது.

இறுதியாக, நாளை நான் துவக்கவிருக்கும் இச்சிறிய பிராயச்சித்தம் வெற்றிகரமாக நடந்தேற கடவுளைப் பிரார்த்திக்குமாறு, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள நண்பர்கள், எம் மதத்தினராயினும் சரி, எந்த ஜாதியினராயினும் சரி, அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்."



சமீபத்தில் திருச்சியில நடைபெற்ற சிதம்பரம்—ரங்கம்மாள் மறுமணம். தம்பதிகள் மலர் மாலைகளுடன் மேஜை அருகில் நிற்கிறார்கள்.

ரயில் போக்கு வரவு

மதராஸ்-எழும்பூர்

மேயின் லேன்.

வண்டிப் பெயர்	புறப் படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35

கார்டு லேன்.

வண்டிப் பெயர்	புறப் படும் நேரம்	வரும் நேரம்
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப் படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
„ எக்ஸ்பிரஸ் ...	மாலை 1 0	மாலை 2 10
„ பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
„ „	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
„	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளுமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

எந்நாட் கண்ணி.

ராய. சோ.

உரிமை ஆக்கியோனுடையது.



பாயிரம்.

அறுசீர் விருத்தம்.

சாலிவா கனசகமான் டாயிரத்தெண்
ணூற்றின்மேற் சார்ந்து நின்ற
நாலினே டொருபத்து நான்கொன்றுங்
கீரசவில் ஆடி நான்காம்
ஏனுநாள் எழில்ராய வேலூர்ச்சீர்ச்
சிறையதனில் எந்நாட் கண்ணி
கோவினன் காரைநகர் ராயசொக்க
லிங்கனுயர் கொள்கை மேவ.

பூதான் அளப்பரிய புண்ணியத்தால் பெறுபாத
மாதா அரசெய்தி மகிழுநாள் எந்நாளோ ? (உக)

வசையின்றி வாழ்ந்திந்த வையகத்தில் எல்லோரும்
பசியாமல் உண்டுடுத்திப் படருநாள் எந்நாளோ ? (உஉ)

அலகிலாப் பெரும்பொருளும் அதிகாரம் போன்றனவும்
நிலையிலா என்றுணர்ந்து நேர்பெறுநாள் எந்நாளோ ? (உங)

கொத்தடிமை நீங்கியெங்கள் கோகிலப்பொன் மாதரார்
ஒத்தநலம் பெற்றோங்கி ஒளிருநாள் எந்நாளோ ? (உச)

எக்குலத்தில் எந்நாட்டில் எம்மதத்தில் இருந்தாலும்
மிக்கசெயல் பூண்டாரை மேவிடுநாள் எந்நாளோ ? (உரு)

தேமாங் கனிபோலச் செப்புமொழி கண்டுநனி
ஏமாந்த சோணகிரி ஏறுநாள் எந்நாளோ ? (உசா)

பல்லோரும் ஏத்தும் பாந்தஇந்தப் பூவுலகில்
எல்லோரும் இன்புற் றிருக்குநாள் எந்நாளோ ? (உஎ)

பிறந்தார் இறந்திடுதல் பெரிதும் உறுதியெனும்
சிறந்த அறமுணர்ந்து சீர்பெறுநாள் எந்நாளோ ? (உஅ)

வைத்த பெருநிதியம் வாழ்வரசு மண்ணிழந்து
செத்த முடிமன்னர் திறமுணர்நாள் எந்நாளோ ? (உகூ)

முடிசூடி அரசாளும் மொய்ம்புள்ள மன்னவரும்
படிமீது மிடிகூறும் பண்புணர்நாள் எந்நாளோ ? (ஙo)

பிறர்க்குரியார் நலந்துய்க்கப் பேணலிரு சாரார்க்கும்
மறக்கரிய இன்னலெனும் மாண்பறிநாள் எந்நாளோ ? (ஙக)

பிறப்பில் உயர்விழிவு பேசும் அறிவோடு
சிறப்பில் சிறுமனிதர் திருந்துநாள் எந்நாளோ ? (ஙஉ)

ஆணுயர்வு பெண்ணிழிவென் றறையும் அறியாமைக்
கோணல் மனிதருயர் குணம்பெறுநாள் எந்நாளோ ? (ஙங)

இருவர் இணைந்துபெறும் இல்வாழ்வுக் கறிகுறியா
ஒருவர் பெறுந்தாலி ஒழியுநாள் எந்நாளோ ? (ஙச)

சின்னஞ் சிறுவயதில் திருமணங்கள் செய்தில்லின்
மன்னும் அறங்கெடுக்கும் மாசொழிநாள் எந்நாளோ ? (ஙரு)

இத்தரையில் எல்லா எழிலார் இளையாரும்
புத்தகமும் கையுமாப் பொலியுநாள் எந்நாளோ ? (ஙசா)

தேவர் குறள்போன்ற சீர்மையற நூலொன்று
யாவர் செயவல்லார் என்றுணர்நாள் எந்நாளோ ? (ஙஎ)

வேந்தன் இளங்கோ விரித்ததமிழ்ச் சிலம்பினிமை
மாந்தி இறுமாந்து மகிழுநாள் எந்நாளோ ? (ஙஅ)

உம்பர் அமிழ்தினிதென் றுரைத்திடுவார் உண்மையினில்
கம்பர் தமிழறியார் கண்டறிநாள் எந்நாளோ ? (ஙகூ)

கடமை தனைப்புரியும் கருணை செறிஅறிஞர்
உடைமை தனைப்பெற்றே உயருநாள் எந்நாளோ ? (சo)

காந்திஜி சுற்றுப்பிரயாணம்

முற்றுப் பெற்றுவிடவில்லை


காந்திஜியின் ஹரிஜனச் சுற்றுப்பிரயாணம் ஜுலை 29-ந்தேதியோடு காசியில் முடிவுபெற்றது. இந்தப் புண்ணிய காசியென்னும் திருப்பதியில்தான் மக்களெல்லாம் சமம் என்ற உண்மை, கடவுளால் ஆதி சங்கரருக்குப் போதிக்கப் பட்டதென்பது கதை.

ஆனால் காந்திஜியின் சுற்றுப்பிரயாணம் முடிவு பெறவில்லையென்ற எண்ணம் நமக்கிருந்து வருகின்றது. சாரீர சம்பந்தமாக வார்தா ஆஸ்ரமத்தில் சென்ற நவம்பர் மாதத்தில் குறிப்பிட்ட பிரயாணம் முற்றுப் பெற்றதுண்மை. ஆனால் காந்திஜி இதுகாறும் செய்யப்பட்டவைகளால் திருப்தி யடைந்து விட்டாரா? அன்றி, இனிமேல், தான் செய்திருக்கும் வேலைகளை நம்பிக்கொண்டு சும்மா விருக்கலாமென்று கருதுகிறாரா? இந்தக்கேள்விகட்கு ஒரே ஒரு விடைதானிருக்கக்கூடும். காந்திஜியின் இருதயம் இன்னும் நாடு முழுதுமிருக்கும் ஹரிஜனர்களிடமே இருந்து வருகிறது; இன்னும் அவர் எவ்வாறு ஹரிஜனர்களின் வாழ்க்கையை விளக்கமுறச் செய்யலாமென்றே யோசித்துக்கொண்டிருக்கிறார். இந்த நிலைமையை எண்ணியே நாம் காந்திஜியின் பிரயாணம் முடிவு பெறவில்லை என்று கூறினேம். எப்பொழுது தீண்டாமை அது உடைய பற்பல உருவங்களுடன் அழிந்து ஒரு பழங் கதையாக மாறுகிறதோ அதுவரையிலும் காந்திஜியின் மனம் சாந்தியடையப் போவதில்லை.

ஆனால் காந்திஜி சென்று பார்வையிட்ட இடங்களி லெல்லாம் அவருடைய கருத்து வெற்றிபெற்று விட்டது. வாசகர்கள், காந்திஜியின் சுற்றுப் பிரயாணம்செய்ய நினைத்தது ஜாதி இந்துக்களின் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி செய்வதற்கேயாகும் என்பதை அறிவார்க ளன்றோ? காந்திஜி சென்றவிடங்களி லெல்லாம் ஆயிரக்கணக்கில் வந்து குழுமிய ஜனத் தொகையைப் பார்த்தால், யார்தான் காந்திஜியின் கருத்துச் சாதிக்கவில்லை என்று கருதுவர்! வசூலான பணம் 8 லட்சம். இந்தத் தொகையைப் பார்த்தால் எதிர்கால வேலைக்குப் போதுமானதல்ல. என்று தோற்றும். என்றுலும் காந்திஜி எங்கும் கூறியவாறு, ஜாதி இந்துக்கள் கொடுத்த பணத்தினுல், அவர்கள் (ஜாதிஇந்துக்கள்) ஹரிஜனர்கட்கு உதவி செய்யத் தயாராக விருக்கிறுர்கள் என்பதும் மனம் மாறி விட்டார்கள் என்பதும் வெளியாவது திருப்தி தருவதாகும். காந்திஜி சீர்திருத்தத்தைப் பெரிதும் வேண்டுபவர்களே கூட்டங்கட்கு வரவும் பொருள் வழங்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டாரன்றோ? அதனைக்கேட்ட பின்னரும் எத்தனை லக்ஷம்பேர் வந்துகூடி பணம் கொடுத்திருக்கின்றனர்!


காந்திஜி நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் தனிமையாக ஜாதி இந்துக்கள் அதிகமாய்த் தங்களை தீண்டாமை யொழிப்பு விஷயத்தில் அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தீண்டாமை விலக்கு என்பது உண்மையில் இந்து மதத்தினைச் சீர்திருத்தம் செய்வதும் எனவே நாட்டைச் சீர்திருத்தம் செய்வதுமாகும். ஆதலால் நம் ஒவ்வொருவருடையவும் கடமை மிகமிக அதிகமாகப் பாடுபட்டுத் தீண்டாமை முற்றிலும் ஒழிவது வரையிலும் வேலை செய்யவேண்டும். இருவர் சரீரம் தொட்டுக்கொள்வதில் வெறுப்புக் காண்பிப்பது, பிறரிடமிருந்து கிடைக்கும் உணவை அருந்த மறுப்பது, இந்து அலயங்கட்குள் சிலரை நுழையவிடாது தடைசெய்வது போன்றவைகள், உண்மையில் ஒருவன் காண்பிக்கும் மமதை, தற்பெருமை, உயர்வு ஆகியவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாம். ஆதலால் நாம் அத்தகைய கெட்ட எண்ணங்கள் மனதில் புகாது அழிக்க வேண்டும். அவ்வாறு தீய எண்ணங்கள் நசுக்கப்பட்டு விட்டால் நம்மிடத்தில் தரும சிந்தனை, சகோதரத்துவம், அன்பு ஆகியவை அரும்பும். இந்த மேலான குணங்களை யன்றோ மனிதன் அடைய ஆசைப்படுகின்றுன்? காந்திஜீ இக்குணங்களால் நம்மைத் தூய்மைப்படுத்தவே நம்வாயிலண்டைவந்து நமக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போயிருக்கிறுர். ஆகவே காந்திஜியின் சுற்றுப் பிரயாணத்தின் கருத்தை விளக்கி நடைமுறையில் காண்பிக்கவேண்டுவது நம் கடனும்.

—"ஹரிஜன்" தலையங்கம்.



சென்னைச் சட்டசபை ஆரம்பித்ததும், அதன் தலைவர் திரு. B. ராமச்சந்திர ரெட்டி அவர்கள் ஆக்டிங் கவர்னர் சர். உஸ்மான் அவர்கட்கு ஒரு உபசார விருந்து நடத்தினர். படத்தில் சட்டசபை, நிர்வாகச் சபைகளின் மெம்பர்களும் கவர்னரும் காணப்படுகின்றனர்.

—P. P. B.



இலக்கியப்பகுதி

நற்றாய் இரங்கல்

ராய. சோ.


‘நற்றாய் இரங்கல்’ என்பது பழய துறைகளுள் ஒன்று. ‘நற்றாய் இரங்கல்’ என்றால் நல்ல தாய் வருந்துதல் என்பது பொருள். தாய் வருந்துதல் என்பதால் அவ்வருத்தம் மகள் பொருட்டு என்பது கிடைக்கின்றது. தன் மகள் செயல் தனக்குப் பிடிக்காமை காரணமாகப் பெற்ற தாய் வருந்தும் முகத்தால் பாடப்படுவது இது. இத்துறையில் வரும் பொருள், பண்டை நாளில் காதல்கொண்ட ஒருவனோடு வீட்டை விடுத்து வெளியேறி நேரிய முறையில் காதல் வாழ்வு பூணப் போந்த தம் அருமை மகள் பிரிவுக்குத் தாய் இரங்குவதாகவே பெரிதும் விளங்கக் காண்கின்றோம்.

காதல் வயப்பட்டோர் எந்தச் சமூகத் தடையையும் பொருட்படுத்தாது மணமாற்றியே தீரவேண்டுவது இயற்கையென இன்று சீர்திருத்தக்காரர் செப்பும் சீரிய கொள்கை பண்டைத் தமிழரால் பெரிதும் கையாளப்பெற்றது என்பதை அறியப் பலர் வியப்படைவர். இன்றிருக்கும் தமிழ் நூல்களுள் காலத்தால் எல்லாவற்றிற்கும் முற்பட்டதும் விழுமிய பொருள்கள் பல பொதிந்ததும் என அறுதியிட்டுரைக்கத் தக்க ‘தொல்காப்பியம்’ என்னும் இலக்கண நூலில் பொருளதிகாரத்தில் ‘களவியல்’ என்னும் பெயரால் நமது காதற்கொள்கை கூறப்படுகிறது. இடைக்காலத் தமிழர் அதனைக் கைவிட்டு மண சம்பந்தத்தை இன்றிருக்கும் சீர்கேடான நிலைக்குக் கொணர்ந்து விட்டனர்.

இன்று, அக்கொள்கையை—தொல்காப்பியரின் பழய களவியல் முறையை—இன்றைய உலகில் அறிவாளிகள் பலரும் உடன்படும் சிறந்த காதலமைப்பை—இயற்கையோடிணைந்த பெரு வாழ்வைச் செவ்வனே செய்கையில் நடாத்திக் காட்டுவோர் பர்மிய சகோதரர். இவ் உண்மையைப் பர்மாவில் வாழும் தமிழ் மக்கள் நன்கு அறிவர். அன்னார் இருவர் காதல்கொண்டு விட்டாரானால் அக்காதலைத் தடை செய்யவல்ல எப்பொருளும் கிடையாது. தாய் தந்தையர், மக்கள் காரியத்தில் தலையிடுவதில்லை. காதலால் கட்டுண்ட இருவர் ஒருங்குகூடிச் சிலகாலம் தங்கள் வீடுகளை விடுத்து வேற்றிடம் சென்று வாழ்ந்து இரண்டறக் கலந்து விடுகின்றனர். பின்னர்தான் பெற்றோருங்கூட அதனை அறிகின்றனர். இம்முறையை மாறுபட்ட முறையிற் பழகிய, அறிவு நுணுக்கமற்ற சிலர் வெறுக்கலாம். இதுதான் பழந் தமிழ்ப் பெரியோர் கொள்கையும் நல்லொழுக்க வாழ்வுக் கேற்றதும்.

இம்முறைபற்றிக் காதல் காரணமாக ஒருவனோடு சென்றுவிட்ட மகளுக்குத் தாய் வருந்தும் முறையிற் பாடப்படும் கட்டளைக் கலித்துறையே நற்றாய் இரங்கல். சான்றாக யான் வேலூர்ச் சிறையில் இம்முறைபற்றிப் பாடிய காதற் கலித்துறை யந்தாதியின் நற்றாய் இரங்கல் ஒரு செய்யுளை இங்கு தருகின்றேன்.

(பின் பக்கம்)



புராண விநோதம்

(வைசம்பாயனன்)

பாரதத்திலே சராசந்தன் என ஒரு வீரன் இருந்தான். அவன் மகா பொல்லாதவன். பெரிய சாணக்கியனை "பொங்கோதப் பாற்கடலான் இவன் என்று யாரும் புகல்கின்ற வசுதேவன் புதல்வ"னாகிய மாயக் கிருஷ்ணனை விரட்டி விரட்டி யடித்து ஊரைவிட்டே ஓட்டிவிட்டான் சராசந்தன் என்றால் அவனைக் கண்டாலே பயப்படவேண்டாமா? ஓரிடத்துக் கண்ணனைப்பற்றி, வில்லிபுத்தூரார் பிறர் வாக்கில் வைத்து "சண்டமுகில் உருமனைய சராசந்தன் தனக்கஞ்சி, வன்துவரை அரணாக வடமதுரை கைவிட்ட, திண்திறல் மாதவன்" எனக் கண்ணனது திண்மையை அலங்கரிக்கின்றார். "கற்கொண்டு கன்மழை காத்த கள்வ"னின் சம்பம் சராசந்தனிடம் பலிக்கவில்லை. எனவே மதுரையை விட்டுக் குதிகால் முதுகில் அடிபடத் துவாரகைக்கு ஓடிவந்துவிட்டான். அதுமுதல் அவன் மேல் காட்டமாகவே இருந்தான். முரட்டு வீமனைக்கொண்டு சராசந்தனைத் தொலைக்க ஏற்பாடு செய்தான். மாறுவேடம் பூண்டு வீமனையும் அவன் தம்பியாகிய சூரனையும் உடன் கொண்டு சராசந்தனுடைய "எண்ணில் காவற், கிரிவிரச நகரெய்திக் கிரித்தடந்தோள் மகதேசன் கிளரும் கோவில், கரி விரசும் கோபுரப் பொற் திருவாயில் புகுந்"தான் கண்ணன். சராசந்தன் இலேசானவனா? இவர்களைக் கண்டு பிடித்து விட்டான். பல நாள்கள் போர் நடந்தது. வீமனால் சராசந்தன் கொல்லப்பட்டான். ஆனால் திரும்பவும் பிழைத்து விட்டான். ஆகவே இப்போதும் அவன் இருக்கிறான் என எண்ணி யாரும் பயந்து விடாதீர்கள். பாரத காலத்திலேயே அவன் போய்விட்டான் என்பது நிச்சயம். கடைசியாக இரண்டாகக் கிழித்துத் தலை கீழாக மாற்றி வீமனால் வீசப்பட்டு அவன் மாண்டு விட்டான். அவன் செத்துப் பிழைத்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? அதுதான் விநோதமானது. சுருக்கமாகச் சொல்கிறேன். அவன் பிறக்கும் போதே இரு பாதியாகக் கிழிந்து பிறந்தான். பயந்து பெற்றோர் வெளியே போட்டு விட்டனர். சரை என்ற ஒருத்தியால் அவ்விருகூறும் பொருத்தப்பட்டவுடனே அவன் உயிர் பெற்றெழுந்து விட்டான், ஆகையினாலேதான் 'சராசந்தன்' எனப் பெயரிடப்பட்டது. சரையினால் பொருத்தப் பெற்றவன் சராசந்தன். ஆ! ஹா! அந்தச் சரை இப்போது இருந்தால் கொலிங்களத்துக்கு அனுப்பி, உடலங்களைப் பொருத்தி உயிர்தரச் செய்யலாமே! அநியாயமாக அவளும் போய் விட்டாள் பாரதப் புத்தகத்துக்குள். இனி அதற்கு வருந்தி என் செய்வது! "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ" ஓ! தவறிச் சொல்லிவிட்டேன். சரை மட்டும் சாகாதிருந்தால் மால்டார் வந்துவிடுவர்.

* * *

திருதராட்டிர வேந்தனுக்கு இரண்டு கண்ணும் குருடு. துரியோதனனுடைய கொடுமையைக் கூறுமிடத்து வில்லிபுத்தூரார் "விழியிலான் மகன்—குருடன் மகன்—கண்ணிலா அருளிலிதன் காதல் மைந்தன்—கண்ணிலான் பெற்றெடுத்தோன்" என்பன வாதி சொற்றொடரை அடிக்கடி கூறுவர். திருதராட்டிரன் மனைவி காந்தாரி யென்பாள் தன் கணவன் கண்டு இன்புற முடியாத இவ்வுலக அழகைத் தானும் கண்டு களித்தலாகா தெனக் கருதித் தனது கட்புலனை இழந்தாள்! உலகைக் காணுதலைத் தானும் ஒழித்தாள்! தன்னிரு கண்களையும் பட்டாடையால் கட்டி மூடிவிட்டாள். இதுவன்றோ இரண்டறக் கலந்த காதல்! பழய சம்பிரதாயப்படி ஓமம் வளர்த்துச் சடங்கு செய்யப்படுபவர்களும் கணவன் மனைவி இருவரும் தங்கள் தங்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வதாகவே விவாக காலத்தில் மந்திர மூலம் ஓதுகின்றனர். புதிய சீர்திருத்த முறைப்படி மண மாற்றி ஒப்பந்தம் செய்து உறுதிமொழி கூறுபவர்களும் ஒருவர் சுகத்தை இன்னொருவர் தூக்கிச் சுமப்பதாகவும் ஒருவர் துக்கத்தை மற்றொருவர் தாங்கிக் கொள்வதாகவும் மணக் காலத்தில் எல்லோருக்கும் தெரிந்த மொழியில் இயம்புகின்றனர். இவ்விருசாராருள் எந்தக் கணவன் மனைவியாவது ஸ்ரீமதி—அல்லது 'தோழர்' காந்தாரியைப் பின்பற்றக் காண்கின்றோமா? அப்படியானால் காந்தாரிக்கு ஏது மதிப்பு!

"சீரார் எனது திருமகள்
என்னைத் தனியிருத்தி,
பாரான் குலமும் ;இவ் வூரார்
பழிப்பும் ; பரிபவமும்
ஓரான் சிறிதும்;என் உத்தமி
காந்தி வழியொழுகும்
யாரோ ! ஒருவனைப் பின்தொடர்ந்
தான் ! இஃ ததிசயமே !"

இது கருத்துப் இரக்கலில் பழய முறை பற்றியது. புதிய முறையில் சில காந்தி வழித்துறை மந்தாரியில் உள. அதற்கு ஒன்றைச் சான்றாக இவ்வாறு ஓவியப் பக்கத்தில் காண்க!

கோ. லெட்சுமிபுரம்
சொக்கலிங்க வித்தியாசாலை.

இந்நகர் திரு. ந. சொ. அரு. அருணாசலன் செட்டியார் அவர்கள் ஸ்தாபித்திருக்கும் சொக்கலிங்க வித்தியாசாலையில் நாளது பவ-௵ ஆடித் திங்கள் 16-ம் நாள் பிற்பகல் 4 மணிக்கு மாணவ மாணவிகளால் "லோகமான்ய பால கங்காதர திலகர்" விழா இனிது கொண்டாடப் பெற்றது.

கொள்ளிவாய்ப் பிசாசு

அல்லது

கொள்ளிட மான்மியம்

(திரு. கே. வி. எஸ். வாஸ்)

கொள்ளிடத்துக் கொலைக் கேஸை நினைக்கவே துப்பறியும் துளஸிதாஸின் மூளை குழம்பியது. ஸரஸாங்கியே தன் சிற்றப்பனைச் சிறிதும் அச்சமின்றிக் கொன்றிருக்க வேண்டுமென்பதற்குப் பல சாட்சியங்களிருப்பினும், அவள் இப்பயங்கரமான கொலையைச் செய்திருப்பாளென நம்ப அவர் மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. ஏன்? அவளது களங்கமற்ற முகத்தைக் கண்டால் எவரும் அவள் நிரபராதியென்றே நிச்சயம் கூறுவர். முகத்தைக்கொண்டே உள்ளத்தில் ஊசலாடும் குற்றங்களின் மர்மத்தைக் கண்டறியும் நுட்ப புத்தியுள்ள துளஸிதாஸே ஸரஸாங்கி குற்றமற்றவளாக இருக்க வேண்டுமென வெண்ணினாரெனில் நாம் ஸரஸாங்கியைப்பற்றி அதிகம் கூறவேண்டுவதில்லை.

“ஸார், நீங்கள் கூறுவதைப் போன்றே நானும் உண்மையில் இதில் ஏதோ ஓர் பெரிய மர்மமிருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன். ஆனால் சாட்சியங்களெல்லாம் ஸரஸாங்கிக்கு விரோதமாகவே யிருக்கின்றன. முதலாவதாக அவள் கொலை நடந்த இரவு தன் சிற்றப்பனுடன் ஏதோ பிரமாதமாகச் சண்டை யிட்டதாகவும் தான் தற்கொலை செய்துகொண்டு விடுவதாயும் ஏதேதோ கோபத்துடன் கூறினாளென வேலைக்காரி சாட்சி யளிக்கின்றாள். மேலும் கமலாகரன் கொலையுண்ட சமயம் அதே அறையில் ஸரஸாங்கி இருந்திருக்கிறாள். அவள் சேலைகளிலும், கைக்குட்டைகளிலும் உதிரம் படிந்திருக்கின்றது. இவைகள் எல்லாவற்றையும்விட ஸரஸாங்கி தனக்கும் தன் சிற்றப்பனுக்கும் அன்று நடந்த விவாதத்தைக் கூற மறுப்பதே அவள் மீதுள்ள சந்தேகத்தை யதிகரிக்கின்றது!” என்றார் துளஸிதாஸ்.

“நண்பரே, என் காதலி ஸரஸாங்கிக்கு விரோதமாகவே எல்லா சாட்சியங்களு மிருப்பினும், அவள் கொலை செய்திருக்க மாட்டாள் என்பது என்னவோ நிச்சயம். ஆனால் அவள் மௌனமே எனக்குப் பெரும் திகிலை விளைவிக்கின்றது. இன்று காலைகூட அவளை ஜயிலில் சந்தித்து உன் சிற்றப்பனுடன் மிகவும் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தாயாமே; அதன் விபரத்தைக் கூறினால் ஒருக்கால் அது உன் நிரபராதித் தனத்தை ருஜுப்படுத்த உபயோகமா யிருக்குமென எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுவிட்டேன். எனக்கு எதையும் மறுக்காத என் காதலி இதைமட்டும் கூற மறுக்கிறாள். எல்லாம் எனக்குக் கண்ணைக்கட்டி காட்டில் விட்டாற் போலிருக்கிறது?” என்றான் பாஷ்யம்.

“மிஸ்டர் பாஷ்யம்! இப்பொழுது அவள் மௌனத்தைக்கொண்டு இரண்டு வித முடிவிற்கு நாம் வரலாம். ஒன்று அவள் பேசிக்கொண்டிருந்த விஷயம் மிகவும் இரகசியமானதாகவும் அதை வெளியிடுவதாயின் அவள் கௌரவத்திற்கே பங்கமேற்படுவதாயு மிருக்க வேண்டும். இன்றேல் கொலை செய்தவன் யார் என அவளுக்கு நன்கு தெரிந்திருந்து அவனைக் காண்பித்துக் கொடுக்க இஷ்டமில்லாதவளாக விருக்க வேண்டும்!” என்றார் துளஸிதாஸ்.

“ஏன் அப்படி இஷ்டமில்லாமலிருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?” என்றான் பாஷ்யம்.

“ஏனெனில் அவனைக் காட்டிக் கொடுப்பதால் அவள் வெளியிடக் கூடாதது எனக் கருதியிருக்கும் சில மர்மங்கள் அவன் மூலம் வெளியாகி விடுவதாக விருக்கும். இன்றேல் கொலை செய்தவன் அவளுக்கு நெருங்கிய நண்பனாகவோ அல்லது உறவினனாகவோ இருக்கலாம்!” என்றார் துளஸிதாஸ்.

“அவளுக்கு வேறு உறவினன் எவனும் இல்லை. நண்பனும் என்னைத் தவிர வேறொருவரும் கிடையாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்!” என்றான் பாஷ்யம்.

“என்னவோ, மிஸ்டர், இந்தக் கேஸை எனக்கு ஓர் பெரிய மர்மமாக விருக்கின்றது. ஆனாலும் என்னாலியன்ற வரையில் இதில் உழைப்பேன்!” என்று துளஸிதாஸ் வாக்களிக்கவும் பாஷ்யம் சற்றுத் தைரியத்துடன் அவ்விடம் விட்டகன்றான்.

* * *

துளஸிதாஸ் கமல நிலையம் மாளிகையினுள் நுழைந்து கமலாகரர் கொலை செய்யப்பட்ட அறையை மறுபடி சோதனையிடலானார். அவர் இப்பொழுது நின்ற அறை 20 கஜம் நீளம் பத்து கஜம் அகலமுள்ள விசாலமாக நன்கு சிங்காரிக்கப்பட்ட அறை. அதன் மத்தியில் ஓர் வட்ட மேஜையும் அதைச்சுற்றிப் பல நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. நிலைக்கண்ணாடிகள் வைத்த இரு பீரோக்கள் அறையின் தெற்கு மூலையில் வைக்கப்பட்டிருந்தன. அவ்வறைக்குள் மற்றோர் சிறு அறை காணப்பட்டது. அதுவே கமலாகரரின் படுக்கையறையாகும். படுக்கையறையின் சாளரம் வெளிப்புறத் தோட்டத்திற்கு நேராக விருந்தது. துளஸிதாஸ் இந்த அறையை எவ்வளவு கவனமாகப் பரிசோதித்தும் எவ்வித உளவும் கிடைக்கவில்லை. கடைசியாக வேலைக்காரன் கந்தனை யழைத்து அன்று நடந்த விஷயங்களையெல்லாம் மறுபடி கூறுமாறு வினவினான். கந்தன் கூறியது பின் வருமாறு:— கொலை நடந்த தினத்தன்று காலை அம்மாளும் ஐயாவும் ரொம்பக் கோபமாகப் பேசிக்கொண்டாங்க. ஐயா கடைசியாக “இன்று இரவு 10 மணிக்குள் உன் தீர்மானத்தைக் கூறிவிட வேண்டும்!” என்றார். அம்மாளும் ‘இன்றிரவுடன் எல்லாவற்றையும் ஒழித்துத் தற்கொலை செய்து கொண்டு விடுகிறேன்” என்று கூறினாங்க. அதற்கு அப்புறம் அவங்க பேசவேயில்லே. ராவு நாங்களெல்லாம் சாப்பிட்டுட்டுப் படுத்துகிட்டோம். எனக்குத் தாகமாக இருந்துச்சுங்க. கொஞ்சம் தண்ணிகுடிக்க பம்புக்குப்போகச்சே ஐயா அறையிலே யாரோ பேசறாப்பலே யிருந்துச்சுங்க. உற்றுக்கேட்டேங். ஐயாவும் அம்மாளும் வாயிலே வந்தபடி யெல்லாம் திட்டிக்கொண்டிருந்தாங்க. அப்புறம் நான் தண்ணிகுடிச்சுட்டு வந்தேங். அப்போ

ஐயா மாணத்தருவாயிலே ஐயோ அப்பா என்று முனகுவது கேட்டு துங்க. உடனே மற்ற ஆட்களையெல்லாம் கூட்டியாந்து பாத்தேனுங்க. ஐயா மார்பிலே யாரோ கத்தியாலே குத்திக் கொன்றிருக்காங்க. அவரு வாயிலேயும் மூக்கிலேயும் மார்பிலேயும் ரத்தம் வழிஞ்சுதுங்க. அம்மா பக்கத்திலே மூர்ச்சையாகக் கிடந்தாங்க. அவுங்க சீலையெல்லாம் ரத்தமா இருந்துச்சுங்க! அதான் எங்களுக்குத் தெரியும். உடனே போலீஸ் டேசனுக்குப்போய் போலீஸ்கார ஐயாவைக் கூட்டியாந்தோம். அதுக்குள்ளாட்டி அம்மா கண்ணை முழிச்சிக்கிட்டு ஐயாவை யார் கொலை செய்தாங்களென்று தெரியாது என்றுங்க!" என்று கூறிமுடித்தான்.

"சரி, இராக்காலங்களில் தோட்டத்திற்கு யார் காவல்!" என்று வினவினர் துளஸி தாஸ்.

"முத்துசாமிங்க! அவனுக்கு ஐயா செத்துப்போன நாளிலிருந்து உடம்பு சரியில்லீங்க. ஜுரமும் காய்ச்சலுமாப் படுத்திருக்கான்! என்னவோ பயந்துக்கிட்டானும்!" என்றான் கந்தன்.

"எங்கே பயந்துகொண்டானும்?" எனச்சற்று ஊக்கமாக வினவினர் துளஸிதாஸ்.

"அதோ அந்தப் புளியந்தோப்பு இருக்குதுங்களல்லவா? அங்கே அடிக்கடி கொள்ளிவாய்ப் பிசாசு வாரவதுண்டுங்க. அது ஆத்துக்குப் பக்கமா இருப்பதாலும், சிறுமலை யிருப்பதாலும் அந்தப் பிசாசு மலைக்கு மேலேயும் ஆத்திலேயும் ராத்திரி பதினேரு மணிக்கு மேலே அடிக்கடி வரும். நாங் கூட பாத்திருக்கேன். நம்ப ஐயா கொலை செய்யப்பட்ட தினம் அந்த கொள்ளிவாய்ப் பிசாசு முத்துசாமி குடிசைக்கு வந்ததுங்களாம். அது முதல் அவன் பயந்துக்கொண்டு ஜுரத்திலே கஷ்டப்படுகிறான்!" என்றான் கந்தன்.

உடனே துளஸிதாஸுக்குப் பல யோஜனைகள் தோன்றின. தோட்டத்திற்கு சோகவுள்ள சாளரத்தின் வழியாகக் கமலாகரரின் சயன அறைக்குச் செல்லக் கூடுமாயின் தோட்டத்திலுள்ள முத்துசாமியின் குடிசைக்கு வந்ததாகக் கூறப்படும் கொள்ளிவாய்ப் பிசாசுக்கும் கமலாகரர் கொலைக்கும் ஏதேனும் சம்பந்த மிருக்குமோவெனச் சிந்தித்தார்? பிசாசு பேய் பூதம் இவைகளிடம் துளஸிதாஸுக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. கொள்ளிவாய்ப் பிசாசைப்போல் வேடம்பூண்டு கமலாகரரைக் கொலை செய்யவந்த ஒருவனைக் கண்டு முத்துசாமி ஏன் பயந்துகொண்டிருக்கக் கூடாது என்று துளஸிதாஸ் யோஜித்தார். ஆனல் இந்தக் கொலை யாளிக்கும் ஸரஸாங்கிக்கும் என்ன சம்பந்த மிருக்கக்கூடும்? ஒருவித சம்பந்தமு மில்லாவிடில் ஸரஸாங்கி அவனைத் தப்ப வைப்பதற்கென தன் உயிரையும், கௌரவத்தையும் ஒரு பொருட்படுத்தாது தன்மீது சுமத்தப் பெற்றுள்ள குற்றத்தை விலக்க ஏன்



இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூரில், காரைக்குடி, திரு. சந்தியாவுக்கும் குருவிகொண்டான்பட்டி திரு. ராஜகோபாலனுக்கும் நடந்த 80 மைல் சைக்கில் போட்டியில் திரு. ராஜகோபால் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவர் மலர் மாலையுடன் காணப்படுகின்றார்.

பகிரங்கமாகத் தனக்குத் தெரிந்தவைகளைக் கூறிவிடக் கூடாது? இவ்வாறு சிந்தித்தவண்ணம் துளஸிதாஸ் முத்துசாமியின் குடிசையை நோக்கி நடந்தார்.

* * *

முத்துசாமி படுக்கையில் அங்குமிங்கும் புரண்டுகொண் டிருக்கின்றான். அவனுடைய பிக்ஞையே புரண்டு திடீரென எழுந்து விரிட்டு அலறுவதும், "ஐயோ! கொல்லாதே! வந்துட்டேன்! என்ன வோணும்! ஆடு வோணுமா? கோழி வோணுமா? வாங்கித்தாறேன்! ஹா! ஐயோ....யோ....யோ! ஹூம்! தாங்கலியே! எரியுதே உடம்பூ!" என்று அலறுவதும், அங்குமிங்கும் ஓடுவதுமாக விருக்கிறான். அவனை சதா காவல் காத்துக்கொண்டு ஒரு பிசாசு ஓட்டி மந்திரவாதியும், அவனுடைய ஆட்கள் இருவரும் உட்கார்ந்திருக்கின்றனர்? அவனுடைய பெண் ஜாதியும் பிள்ளைகளும் ஓவென்று அலறுகின்றனர். இந்தச் சமயம் துப்பறியும் துளஸிதாஸ் குடிசையை யணுகி "யாரங்கே உள்ளே யிருக்கிறது?" என்று சற்று அதிகார த்வனியி லழைத்தான்.

முத்துசாமியின் மனைவி வெளியில் வந்து "யாரை சாமி தேடுறீங்க?" என்று வினவினள்.

"கமலாகரர் தோட்டங்காரன் முத்துசாமி இருக்கிறானா? அவனை உடனே பார்க்க வேண்டும்!" என்றார் துளஸிதாஸ்.

“ஐயோ! அதையேன் கேக்கிறீங்க சாமி! என் புருசன் மூணுநாளாப் படுத்த படுக்கையா பேத்திக்கிட்டு கிடக்கிறாருங்க! அவுங்களை பிசாசு பிடுச்சிக்கிச்சு. என்ன மந்திரம் போட்டாலும் போவ மாட்டேங்கறது!” என்றாள் முத்துசாமியின் மனைவி. துளஸிதாஸ் அவளுடன் உள்ளேசென்று முத்துசாமி இருந்த நிலையைப் பார்த்துவிட்டு பூசாரியை விளித்து “முத்துசாமிக்கு என்ன பிசாசு புடுச்சிருக்கு!” என்று ஓர் சிறு நகைநகைத்த வண்ணம் வினவினான்.

“சாமி! நம்ப ஆத்தங்கரைக்கு அந்தாண்டே மரங்களெல்லாம் இருக்குது பாருங்க. அங்கே ஒரு கொள்ளிவாய்ப் பிசாசு பத்து வருசமா குடியிருக்குதுங்க. ராத்திரி வேளையிலே பன்னிரண்டு மணிக்கு மேலே அங்கே அது உலாவுவதை இந்த ஊரிலே எல்லோரும் பார்த்திருக்காங்களாம். அதுகிட்டா ஒத்தரும் போறதில்லை. நம்ப கமலாகர ஐயா கொலையான இரவு அந்தப் பிசாசு தோட்டவழியாக அந்த ஜன்னலுக்குள்ளே நுழைஞ்சு ஐயா படுக்கையறைக்குப் போச்சாம். அதைப் பார்த்தவுடனே முத்துசாமி மூர்ச்சையா விளுந்துவிட்டானாம்! அப்பமுதல் பயந்துகிட்டு இருக்கான்!” என்றான் பூசாரி.

“அந்தப் பிசாசு எப்படியிருக்கும் தெரியுமா? நீ பார்த்திருக்கிறாயா?” என்றார் துளஸிதாஸ்.

“ஓ! முன்னே ஒருநாள் நம்ப சின்னம்மாள் ஸரஸாங்கி இருக்காங்களல்லவா! அவுங்க அறைக்குப்போறத்துக்கு ஒரு நாள் ராத்திரி இப்படி வந்துதுங்க. அப்ப என்னைப் பார்த்து விட்டு ஒரே ஓட்டமாய் ஓடிப்போய்டுத்து. அப்ப பார்த்தேன். அதுக்கு தாடி மீசையெல்லாம் ரொம்ப இருக்கு. மூஞ்சி கருப்பாயிருக்கு! தலைலே இருந்து கால் வரையில் கருப்பாயிருக்கு! கையிலே ஓர் பந்தம் கொளுத்தி வைச்சுண்டு இருந்துதுங்க!” என்றான் பூசாரி.

துளஸிதாஸ் அவனுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவ்விடம் விட்டகன்றான்.

* * *

நான்கு நாட்கள் கழிந்தன. ஓர் நாள் மாலை அவ்வூரினின்று பிரசுரமாகும் “பால பத்ரிகா” என்னும் தினசரியில் கொட்டை யெழுத்தில் பின் வரும் விஷயங்கள் காணப்பட்டன.

கொள்ளிடத்துக் கொள்ளிவாய்ப் பிசாசு

பேயல்ல பெண்மணியே!

ஸரஸாங்கி நிரபராதி!

துளஸிதாஸின் ஆச்சர்ய உளவுகள்!

கொள்ளிடம், 4–6–18.

கமலாகரரைக் கொலை செய்ததாகக் கருதப்படும்அவரது சகோதரரின் பெண் ஸரஸாங்கியினுடைய காதலர் பாஷ்யம் துப்பறியும் துளஸிதாஸை இக்கேஸில் உழைத்து ஸரஸாங்கியின் நிரபராதித்துவத்தை ஸ்தாபிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதின் மீது துளஸிதாஸ் இதில் உழைத்துப் பல திடுக்கிடும் சம்பவங்களை சாட்சியங்கள் மூலம் கோர்ட்டில் கூறி ஸரஸாங்கியை நேற்று மாலை சிறையினின்று விடுவித்தார். அவர் கோர்ட்டார் முன் கூறிய விஷயங்களின் சுருக்கம் பின்வருமாறு :—

நியாயாதிபதி துரையவர்களே! ஜூரர்களே! கனவான்களே! கமலாகருடைய கொலையைப் பற்றிய விஷயம் பதின்மூன்று வருடங்களுக்கு முன் நிகழ்ந்த ஓர் சம்பவத்தை யொட்டி நிற்கின்றது. கமலாகருடைய சகோதரரான பத்மநாபன் என்பவர் கமலாகருடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார். இருவரும் கூடியே வியாபாரம் செய்து திரண்ட பொருளைச் சேகரித்தனர். கமலாகருக்கும் அவர் சகோதரனான பத்மநாபனுக்கும் ஏதோ பண விஷயமாகச் சில மனஸ்தாபங்கள் உண்டாகவும் கமலாகரர் தன் தம்பியை மோசம் செய்துவிடக் கருதி, அவருக்குப் பாஷாண மிட்டுக் கொன்றார். இவ்விஷயத்தை எப்படியோ அறிந்த பாலுசாமி யென்னும் வேலைக்காரன் போலீசாருக்குத் தெரிவித்து விடுவதாகப் பயமுறுத்தவே அவனுக்கு ரூ. 2000 கொடுத்துச் சிங்களத்திற் கனுப்பிவிட்டார். பத்மநாபனுக்கு பானுமதி யென்ற மனைவியும் ஸரஸாங்கி யென்ற பெண்ணுமுண்டு. அப்பொழுது ஸரஸாங்கிக்கு எழு வயதுதானிருக்கும். பானுமதி மிகவும் அழகாயிருப்பாள். கமலாகரர் தன் சொந்த சகோதரனின் மனைவியாயிற்றே யென்று சிறிதும் நினையாமல் அவளைக் கற்பழிக்கமுயன்றார். ஓர் நாள் பானுமதி தன் அறையில் படுத்து உறங்கிக்கொண்டிருக்கையில் கமலாகரர் கள்ளத்தனமாக அவள் அறையில் நுழைந்து பலாத்காரமாகக் கற்பழித்ததுமன்றி தன்னுடன் வைப்பாட்டியைப் போன்றே இருந்துவிட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். பானுமதி சீற்றத்துடன் பொழுது விடிந்ததும் போலீஸாருக்குத் தெரிவிப்பதாகச் சபதம் செய்தாள். கமலாகருக்குச் சற்று பயமுண்டாகியது. அவளுடைய வாயில் பாஷாணத்தை யூற்றி பலாத்காரமாகக் குடிக்கும்படிசெய்யவே பானுமதி யதைக்குடித்து உணர்வற்று வீழ்ந்தாள். உடனே அவளை ஓர் சாக்கில் கட்டி, தன் வேலையாள் பாஸ்கரன் என்பவனிடம் ஆற்றில் புதைத்துவிட்டு வரும்படி யனுப்பினர். பாஸ்கரன் அப்படியே மூட்டையை யெடுத்துக் கொண்டுசெல்ல பானுமதியின் சரீரம் அதிகப் பித்த சரீரமாதலின் அவள் இறக்காமல் மயக்கம்தெளிந்து உயிர்பெற்றுத் தன்னை விட்டு விட்டால் ஓடிவிடுவதாயும் அதற்குப் பதிலாகத் தன்னிடமுள்ள நகைகளை யெல்லாம் எடுத்துக் கொள்ளென்றும் கண்ணீர் விட்டு வேண்டவும் பாஸ்கரன் மனம் இரங்கி அவளை எங்கேனும் ஓடிவிடும்படிக் கூறிவிட்டுக் காலிச்சாக்கில் மணலை நிரப்பிப் புதைத்துவிட்டான். கமலாகரன் பாலுசாமியைப்போல் பாஸ்கரனுக்கும் ரூ. 2000 கொடுத்து அயல் தேசத்திற்கனுப்பிவிட்டான்.

பானுமதி ஊரைவிட்டு ஓடிவிடலாமா வென்று எண்ணினள். ஆனால் அவளுடைய ஒரே பெண்ணான ஸரஸாங்கியின் மீதுள்ள பாசம் அவளைப் பிடித்து இழுத்தது. ஆகவே ஆற்றின் பக்கமாகவுள்ள மலைகளின் குகைகளிலொன்றில் வசிப்பதெனத் தீர்மானித்து அங்கேயேயிருந்து வரலானாள். அங்கு சோணாசலம் என்ற வயோதிக இடையனொருவன் வசித்து வந்தான். அவனிடம் பானுமதி தனது துக்ககரமான சரித்திரத்தைக்கூறி தன்னைக் காப்பாற்றும்படிக் கூறலும் அவனும் மனமிரங்கிப் பானுமதியைக் காப்பாற்றி வரலாயினன். ஸரஸாங்கி ஒவ்வோர் தினம் காலையும் மாலையும் ஆற்றிற்கு நீரெடுக்க வருவாள். அப்பொழுதெல்லாம் பானுமதி மறைவாக நின்று மகளைப் பார்த்து மகிழ்வாள். இப்படியே ஐந்து வருடங்கள்

செல்வமும் சோணாசலமும் இறந்தான். அதன் பின் பானுமதியின் நிலைமை வெகு கஷ்டமாகிவிட்டது. பக்கத்துத் தோப்புகளின் சொந்தக்காரனான கோவிந்தன் என்பவன் சோணாசலத்தின் ஆத்ம நண்பர்களிலொருவன். சோணாசலம் மரணத்தருவாயில் பானுமதியைக் காப்பாற்றி வரும்படி கோவிந்தனை வேண்டிக் கொண்டிருந்தான்; ஆதலின் கோவிந்தனும் பானுமதிக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அவ்வப்பொழுது கொடுத்துதவி வந்தான். பகல் வேளையில் பானுமதி எவர் கண்ணிலும் படாமல் குகைக்குள்ளாகவே மறைந்திருப்பாள். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆற்றின் பக்கத்தில் நடமாட்டமில்லா திருக்கையில் தாடியையும் மீசையையும் வைத்துக்கொண்டு தலைமுதல் கால் வரையில் கருப்புடையணிந்து குகையினின்று கிளம்பிக் கோவிந்தன் வீட்டிற்குச் சென்று உணவுப் பொருள்களை வாங்கி வருவாள். மார்க்கம் மரங்களடர்ந்து ஒரே இருட்டாக விருக்குமாதலின் ஓர் கழியில் கிழிந்த துணிகளைச் சுற்றிப் பந்தமாகக் கொளுத்திக்கொண்டே போவது வழக்கம். இதைத் தூரத்திலிருந்து கண்ட ஜனங்கள் பானுமதியைக் கொள்ளிவாய்ப்பிசாசு என்று நினைத்ததுமன்றி அவள் வசிக்கும் ஆற்றங்கரைக்கே கொள்ளிடம் (கொள்ளி—இடம்: கொள்ளி இருக்குமிடம் அல்லது கொள்ளிவாய்ப்பிசாசு இருக்குமிடம்) என்று பெயரிட்டனர். அன்று முதல் ஒருவரும் இராக்காலங்களில் ஆற்றுக்குத் துணிந்து வருவதில்லை. உண்மையில் இது பானுமதிக்கு மிகவும் சௌகர்யமாகவே யிருந்தது.

இவ்வாறே மேலும் நான்கு வருடங்கள் கழிந்தன. பானுமதி இறந்துவிட்டாளென்றே எல்லோரும் கருதினர். கேட்பவர்களுக்கெல்லாம் ஓர் நாள் மாலை ஆற்றிற்கு ஜலமெடுக்கப் போனவள் திரும்பவில்லையென்றும், தன் கணவன் இறந்த துயரத்தால் ஆற்றிலேயே அவள் விழுந்து தற்கொலைசெய்து கொண்டிருக்க வேண்டுமென்று கமலாகர் கூறிவந்தார். பலர் அவளே கொள்ளிவாய்ப் பிசாசாகிவிட்டாள் என்றும் கூறினர். பாபம், ஸரஸாங்கி தன் தாயை நினைக்கும்போதெல்லாம் அலறிப் புழுப் போல் துடிப்பாள். கமலாகரனின் மனைவியான ரங்கநாயகிக்கு இவ்விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. ரங்கநாயகி மிகவும் சாந்தகுணமுடைய கற்பரசி. அவளே ஸரஸாங்கியை யன்புடன் வளர்த்து வந்தவள். இப்படியாக ஸரஸாங்கி பதினேழாம் ஆண்டும் நிரம்பியது. அவளுக்கு விரைவில் விவாகம் செய்விக்க வேண்டுமென்றும், அவள் பாஷ்யம் பீ. ஏ. என்னும் ஓர் வாலிபனைக் காதலிப்பதாகத் தெரிந்ததால் அவனுக்கும் ஸரஸாங்கிக்கும் விவாகத்தை அவ்வருடமே முடித்துவிட வேண்டுமென்றும் ரங்கநாயகி தன் கணவனைத் தூண்டி வந்தாள். ஆனால், எக்காரணம் கொண்டோ கமலாகரர் அடுத்த வருடமாகட்டும், அடுத்த வருடமாகட்டும் என்று தள்ளிக் கொண்டே வந்தார். மறு வருடம் ரங்கநாயகியும் மரண மடைந்தாள்.

இதற்குள் பானுமதி கோவிந்தனின் மூலம் தன் சரித்திரத்தை யெல்லாம் ஸரஸாங்கிக்குத் தெரிவித்ததுமன்றி ஸரஸாங்கி இப்பொழுது பருவ மங்கையாகி விட்டதால் கமலாகரனிடம் வெகு ஜாக்கிரதையாக விருக்க வேண்டுமென்றும் எச்சரிக்கை செய்தாள். ஸரஸாங்கி தன் அன்னை இறக்கவில்லை. உயிருடனேயே யிருக்கிறாள் என்றறிந்ததும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. சில சமயங்களில் ஆற்றோரமாயுள்ள தோப்பிற்குச் செல்வதாகக் கூறிவிட்டு கோவிந்தன் வீட்டிற்கு வந்து தன் அன்னையைக் கண்டுவிட்டுப் போவாள். இப்படியாகவே நாட்கள் கழிந்தன.

கமலாகருக்கு ஸரஸாங்கியின் அழகிய உருவத்தைக் காணகாணக் காமம் சுடர்விட் டெரியலாயிற்று. தன் சகோதரன் மனைவியையே மனம் துணிந்து கற்பழித்த சண்டாளனுக்குப் பெண்ணென்றும் சகோதரி யென்றும் பேதமுண்டா? ஓர் நாள் ஸரஸாங்கியிடம் இரகசியமாக "உனக்கு இதுவரையில் மணம் செய்விக்காததின் காரணத்தைக் கூறுகிறேன்; கேள்! நீ என்னுடனேயே யிருந்து விடவேண்டும். எனக்குத் திரண்ட சொத்திருக்கிறது. கவலையின்றிச் சுகமாக நீ என்னுடன் வாழலாம்!" என்றும் "சரி, இன்றிரவு பன்னிரண்டு மணிக்குள் எனக்கு உன் எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டும்! உனக்கு என் வைப்பாட்டியாக விருந்து வாழ இஷ்டமில்லாவிடில் உடனே வீட்டை விட்டுப் போய்விட வேண்டும்!" என்றும் கூறிவிட்டான். இவ்விஷயத்தை ஸரஸாங்கி பானுமதிக்குக் கூற, பானுமதி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள இதுவே தருணமெனக் கருதி, "இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு நீ கமலாகரனுடன் பேசிக் கொண்டிரு! நான் அங்கு வருகிறேன்!" என்று கூறியனுப்பினாள். அதன்படியே அன்றிரவு பத்து மணி முதல் 12 மணி வரையில் ஸரஸாங்கி தன் சிற்றப்பனுடன் வாதாடிக்கொண்டிருந்தாள். இதையே வேலையாள் கந்தன் செவியுற்றதாகக் கூறினான். 12 மணிக்கு பானுமதி தோட்டம் வழியாகக் கமலாகரனின் படுக்கையறையில் நுழைந்து "என் கற்பையழித்த பாபிக்கும், என் பெண்ணைக் கற்பழிக்க நினைத்த பாபிக்கும் இதுவே தண்டனை!" என்று கூறிக் கமலாகரனைத் தன்னுடன் கொண்டுவந்த கத்தியால் கொன்றாள். இதைக்கண்டதும் ஸரஸாங்கி மூர்ச்சையானாள். அவளை மூர்ச்சை தெளிவிக்கப் பானுமதி ஸரஸாங்கியைத் தொடவும் ஸரஸாங்கியின் புடவைகளின் மீது பானுமதியின் கையிலுள்ள உதிரம் பட்டுக்கறையாகியது. இதற்குள் வெளியில் சந்தடிகேட்கவே பானுமதி மறுபடி சாளரம் வழியாகவே ஓடிக் காரிருளில் மறைந்தாள். போலீஸார் ஸரஸாங்கியின் மீது உதிரக்கறையைக் கண்டதும் அவளை வினவ ஸரஸாங்கி உண்மையைக் கூறுவதால் தன் தாயினுடைய சரித்திரம் வெளியாவதுடன் அவள் கற்பழிக்கப்பட்டமாதின் பெண் எனத்தெரிந்து தன் காதலரான பாஷ்யமும் வெறுப்பார் என்றெண்ணி இதைவிடத் தண்டனை பெற்று தூக்குமேடையிலிறப்பதேமேல் எனத் தீர்மானித்துப் பதில் கூறமறுத்தாள். பானுமதி சாளரம் வழியாகக் கமலாகரனின் படுக்கையறையில் நுழைவதைக் கண்டே முத்துசாமி கொள்ளிவாய்ப் பிசாசெனக் கருதிப் பயந்து மூர்ச்சையானான்.

பானுமதி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டதும் அவள் சரித்திரத்தையோர் கடிதத்தில் எழுதிக் கோவிந்தனிடமளித்துவிட்டு உயிர்துறந்தாள். கற்பிழந்த தன் சரீரத்தை வஞ்சம் தீர்ப்பதற்கெனவே இதுவரையில் வைத்திருந்தேன் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாள். நான் முத்துசாமியைக் கண்டபின் அவன் மனைவி கொள்ளிவாய்ப் பிசாசு கமலாகரனின் அறையில் நுழைந்ததை அவள் கணவன் கண்டே பயந்திருக்கிறான் எனக்கூறக்கேட்டு இக்

கொலைக்கும் அந்தக் கொள்ளிவாய்ப் பிசாசிற்கும் ஏதேனும் சம்பந்தமிருக்க வேண்டுமெனக் கருதி ஆற்றோரமாக வுள்ள தோப்பில் ஓர் இரவு தங்கினேன். அங்குள்ள சிலரும் கோவிந்தனும் கமலாகரர் கொலையைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவன், “எப்படி யிருந்தபோதிலும் நாம் ஸரஸாங்கியை ஜெயிலிலிருந்து மீட்கவேண்டும். அதற்குப் பானுமதியின் கடிதத்தைக் கோர்ட்டாரிடம் அளிக்காமலிருக்க முடியாது!” என்றான். அங்கு நான் போய்ச் சேர்ந்து ஸரஸாங்கியின் மீதுள்ள எதிர் சாட்சியங்களைக் கூறி அவளைக் காப்பாற்றவே நான் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறவும் கோவிந்தன் பானுமதி எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடிதங்களை யென்னிடம் கொடுத்தான். அதைப் படித்துப் பார்த்ததும் மிகவும் வியப்படைந்து உடனே சிங்களம் போலீஸாருக்குத் தந்தி யனுப்பினேன். அவர்கள் பாஸ்கரனையும், பானுசாமியையும் மிரட்டி அவர்களிட மிருந்து உண்மையை வாக்குமூலம் வாங்கியனுப்பியிருக்கிறார்கள். இதோ கோவிந்தனும் அவன் நண்பர்களும் சாட்சியங்களளிப்பார்கள்!” என்று துள்ஸிதாஸ் கூறி முடித்தார்.

உடனே கோவிந்தனும் அவன் நண்பர்களும் விசாரிக்கப்பட்டனர். அதன்பின் பாஸ்கரன், பானுசாமி இவர்களின் வாக்கு மூலங்கள் சிங்களம் போலீஸார் அனுப்பியுள்ளபடி கோர்ட்டில் படிக்கப்பட்டது. ஜூரர்கள் ஸரஸாங்கி நிரபராதியென்று தீர்ப்புக்கூறவே ஸரஸாங்கி விடுவிக்கப்பட்டதுடன் கமலாகரனும், அவள் தந்தையும் இறந்து விட்டனராதலாலும், கமலாகரனுக்கும் வேறு சந்ததிகளில்லை யாதலாலும் எல்லாச் சொத்துக்களும் ஸரஸாங்கியையே சேர வேண்டுமென்றும் முடிவு செய்தனர். தன் தாயார் மரணமடைந்த விஷயம் கேட்டு ஸரஸாங்கி மிகவும் துக்கிக்கிறாள். இக்கேஸில் இவ்வளவு ஊக்கத்துடன் உழைத்த துளஸிதாஸருக்குப் பாஷ்யத்தின் தூண்டுதலின்மீது ஸரஸாங்கி ரூ. 10,000 பெறுமானமுள்ள வைரத்தோடா வொன்றைச் சன்மானமாக அளித்தாள். ஸரஸாங்கிக்கும் பாஷ்யத்திற்கும் அடுத்த வாரம் திருமணம் நடக்குமெனத் தெரிகிறது.”


* * *

மேற்கண்ட விஷயங்கள் பிரசுரமாகி ஒருவாரம் கழிந்ததும் பாஷ்யத்திற்கும் ஸரஸாங்கிக்கும் அதிவிமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. தம்பதிகள் பழைய துக்ககரமான சம்பவங்களை யெல்லாம் மறந்து புதிய வாழ்க்கையை இன்பமாகத் தொடங்கினர். பானுமதியைக் கொள்ளிவாய்ப் பிசாசெனக் கருதி கொள்ளிடம் என்று ஜனங்களால் பெயரிடப்பட்ட ஆற்றிற்கு இன்னும் கொள்ளிடம் என்று வழங்கி வருவதுடன் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் அதே பெயர் இன்னும் வழங்கி வருகின்றது.

செட்டிமார் நாட்டில்

தோழர் ஈ. வெ. ராமசாமி

சுயமரியாதை—சமதர்ம இயக்கத் தலைவரான தோழர் ஈ. வே. ராமசாமியும் துணைவர்களும் செட்டிமார் நாட்டில் 10-8-34 முதல் 18-8-34 வரையிலும் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். தினசரி மாலை நேரங்களில் முறையே காரைக்குடி, தேவகோட்டை, நாச்சியார்புரம், சிவகங்கை, திருப்பத்தூர், சிங்கம்புணரி, கீழச்சிவற்பட்டி, கோட்டையூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்துவார்கள்.



மே. த. சென்னை ஆக்டிங் கவர்னர் சர். உஸ்மான் சாகிப் பகதூர் அவர்கள் சேப்பாக்கம் செனட் சபையில் நடைபெற்ற சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் தலைமை வகித்தார். படத்தில் (இடது பக்கமிருந்து வலது பக்கமாக) சென்னை சர்வகலாசாலை ரெஜிஸ்திரார் திரு. டி. செல்லையா அருமநாயகம், புரோ சான்சலரான கல்வி மந்திரி திவான்பகதூர் S. குமாரசாமி ரெட்டியார், சான்சலரான மே. த. சர். மகமது உஸ்மான், வைஸ்-சான்சலரான மிஸ்டர் R. லிட்டில்ஹெயில்ஸ், கல்வி டயரெக்டர் மிஸ்டர் W. எர்லம் ஸ்மித் ஆகியோர் நிற்கின்றனர்.


—P. P. B.

கல்வி மாதர் பக்கம்
மந்திரியிடம் தூது.
—தலைப்பு

புருஷர் பக்கமானால் எந்த மந்திரியிடம் போவது?

* * *

கோட்டையூர் விதவா விவாகத் தம்பதி கட்சக் காரைக்குடி, தேவகோட்டை, திருக்கோஷ்டியூர், கீழச்சிவற்பட்டி, புதுக்கோட்டை முதலிய ஊர்களில் உபசார விருந்துகள் நடைபெறும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.



உபாத்தியாயர்:—ராமு! உயிர்மெய்யெழுத்து எத்தனை?


ராமு:—நாற்பத்து மூன்று.

உபாத்தியாயர்:—அடே கழுதை! 216 என்று எத்தனை தரம் சொல்லிக் கொடுத்தேன். ஏண்டா குறைவாகச் சொன்னாய்?

ராமு: —"அதிகமாய்ப் பேசாதே" என்று நீங்கள்தானே சொன்னீர்கள்?

—ராம. சுப்பையா.

* * *



மனைவிக்குப்பாடம் கற்பித்துக்கொண்டிருந்த புருடன்:—மனிதர் குரங்கிலிருந்து தான் உற்பத்தியானர்கள்.

மனைவி:—உண்மைதான். தங்கள் தாயாரைப் பார்க்கும்போது அப்படித் தான் தோற்றுகிறது.

—ராஜமாணிக்கம்

* * *


பல பக்கங்கட்கும் நெருக்கடியாகப் போய்க்கொண்டிருந்த வண்டிகட்குக் கை காண்பித்துக் கொண்டிருந்த ஒரு கான்ஸ்டெபிலினிடம்,

ஒரு நாட்டுப்புறத்தான்: — ஆஸ்பத்திரிக்கு எப்படிப் போகவேணும்?

கான்ஸ்டெபில்:—கையைக் காலை ஒடித்துக்கொண்டு வண்டியிலேறிப் போகவேணும்.

—வள்ளியம்மாள்

* * *



நண்பர்:—கடைச் சங்கம் அழிந்து 2013 வருடமாயிற்று.

தமிழன்பர்:—எவ்வளவு திட்டமாகக் கூறுகிறாய்! 2000 வருடமாயிற்று என்பது எனக்குத்தெரியும். 13 வருடம் கூட்டிச் சொன்னாயே, அதெப்படி?

நண்பர்:—நான் தமிழ் மொழி வரலாறு கற்று 13 வருடமாகின்றன. 13 வருடத்திற்கு முன்புதான் கடைச் சங்கம் அழிந்து 2000 வருடமாயிற்றென்று படித்தேன்.

—எம். மணி

* * *

ஒருவன் வழியிலுள்ள மாமரத்தில் மாங்காய் எறிந்தான். அதனைக்கண்ட காவற்காரன்:—ஏண்டா மாங்காய் எறிகிறாய்? யாருதுடா மரம்?

மா. எறிந்தவன் :—யாருதுடா நீதான் சொல்லேன். கையிலே கல்லிருக்கு; மரத்திலே மாங்கா யிருக்கு. யாருது மரம்?

—ராஜகோபாலன்

* * *

ஆசிரியர்:—ஒருவன் 1903 ம் வருடத்தில் பிறந்தான். 1932-ம் வருடத்தில் அவனுக்கு என்னவாகும்?

மாணவர்கள் பற்பல விடை சொன்னார்கள். ஒருவரிருவர் 29 என்றும் கூறினார்கள். கேள்வி கேட்டதும் தூக்கத்தி லாழ்ந்து விட்ட ஆசிரியர் கையை நெடுக நீட்டிக்கொண்டே இருந்தார். உடன் புத்தியுள்ள ஒரு மாணவன்:—கல்லெடுப்பு சார்.

—K. R. சுப்பிரமணியம்

* * *

ஒரு பையன் கூர்ந்து உடற்கூற்று நூலொன்றைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது

தாயார்:—ஏண்டா! சுப்பு! வயத்திலே ஒண்ணுமே இல்லியே; இப்படிப் படிச்சுக்கிட்டே இருக்கிறியே!

பையன்:—ஏனம்மா வயத்திலே ஒண்ணுமில்லே. பெருங்குடல், சிறு குடல் பித்தப் பை முதலிய எத்தனையோ இருக்கின்றனவே!

—ராஜகோபாலன்

* * *

தேர்தல் அபேட்சகர்:—(ஒரு வயோதிகரிடம்) யாருக்குக் கொடுத்தீர்கள் ஓட்டை?

வயோதிகர்:—(வெற்றிக் கறிகுறியாய்ச் சிரித்துக்கொண்டே) எனக்கு மூன்று பேரையும் விட மனமில்லே. மூன்று பேருக்கும் சமமாகப் போட்டு விட்டேன்.

தேர். அபேட்சகர் :—(ஆச்சரியத்தோடு) அதெப்படிப் போட்டீர்?

வயோதிகர்:—ஓட்டுக் காகிதம் ஆறு அங்குல நீளமிருந்தது. சரியாக இரண்டங்குல நீளத்தில் மூன்றாகக் கிழித்துப் போட்டுவிட்டேன். —வி. ராமசாமி

ருஷியன் மாஞ்செஸ்டர் நகரம்

"உணவு போதிய அளவில்லை"

"ந்யூ ஏஜ்" பத்திரிகையில் F. A. C. என்பவர் தம் சொந்த அனுபவத்தை அடியில் வருமாறு எழுதுகிறார்:—

மாஸ்கோ நகரத்தின் வடகிழக்காக 200 மைல் தூரத்தில் இவானுவோ வாஸ்நெஸென்ஸக் என்றொரு பட்டணமிருக்கிறது. அதனை இப்போது இவானேவோ என்று அழைக்கிறார்கள். அதோடு சேர்ந்த வாஸ்நெஸென்ஸ்க் என்ற பதம் நழுவ விடப்பட்டு விட்டது. காரணம், அப்பதத்திற்கு ருஷ்ய பாஷையில் மேலுலகமடைதல் என்பது பொருள். மதமும் மோக்ஷமும் மக்கள் வாழ்வுக்குக் கோடரிகள் என்ற கொள்கை பரந்துவரும் ருஷ்யா மேலுலகத்தை நம்பாதல்லவா? ஆதலாலேயே அப்பதத்தை விட்டு விட்டது. இந்த இவானேவோப் பட்டணத்தை ருஷ்யன் மாஞ்செஸ்டர் என்று அழைப்பதுண்டு. ஏனென்றால் மாஞ்செஸ்டர் இங்கிலாந்தில் நூல் நூற்பது, நெசவு நெய்வது ஆகிய தொழில்களில் எவ்வளவு பேர் வாங்கியிருக்கிறதோ அதேபோல ருஷ்யாவில் இந்தப் பட்டணம் நெசவில் பேரெடுத்திருக்கிறது. இந்த நகரில் தொழிலாளிகள், ஏராளமாகக் கிடைப்பர். கூலி குறைவாகக் கொடுத்தால் போதும். இதுபோலவே மாஸ்கோவைச் சுற்றியுள்ள சில விடங்களும் நெசவுக்குப் பிரக்யாதி பெற்றிருக்கின்றன. இந்தப் பகுதிகளில் ருஷ்யாவின் தென் திசையிலும் தென் கிழக்கிலுமிருப்பதுபோல் உரமுள்ள கருப்பு மண் காணப்படுவதில்லை. தொழிலாளிகள் ஏனைய விடங்களில் பற்பல வேலைகளில் அமர்ந்திருந்தாலும் மழைக்காலங்களில் தொழில் கிடைப்பதற்காக இந்நகரத்திற்கு வருகின்றனர்.

தொழில் விருத்தி

இவானேவோ ருஷ்யாவிலுள்ள கைத்தொழில் நகரங்கட்கு, ஓர் மாதிரி என்று சொல்லலாம். புரட்சிக்கு முன்பு அங்கு தாழ்ந்த கட்டிடங்கள் தாழ்ந்த சாமான் அறைகள் ஆகியவைகளே இருந்தன. இப்போது அவைகளிருந்த விடங்களில் பல மாடிகளுள்ள பெரிய கட்டிடங்களும் தொழிலாளிகள் விடுதிகளும், ரசாயன சாலையும், ரயில்வே ஸ்டேஷனும், சாப்பாட்டு விடுதியும் ஏற்பட்டுள்ளன! இந்த மாற்றம் ஏற்பட்டு மூன்று நான்கு வருடங்களேயாயின. இப்போது அதில் சுமார் 10 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். சென்ற வருடம் 2 கோடி 70 லட்சம் மீட்டர் சாமான்கள் தயாரிக்கப்பட்டன. அங்கு ஓடும் கதிர்கள் ஒரு லட்சத்து 16 ஆயிரம்.



மே. த. ஆக்டிங் கவர்னர் சர். உஸ்மான் சாகிப் பகதூருக்கு, சென்னைக் காஸ்மாபாலிடன் கிளப் அங்கத்தினர்கள், மௌண்ட் ரோடிலிருக்கும் சங்கக் கட்டிடத்தில் ஒரு உபசார விருந்து நடத்தினார்கள். படத்தில் வலப்புறமிருந்து முறையே ஜஸ்டிஸ் திவான்பகதூர் லக்ஷ்மணராவ், ஜஸ்டிஸ் வி. மாதவன் நாயர், சர். மகமது உஸ்மான், ஜஸ்டிஸ் வி. பி. ராவ். கொல்லங்கோடு ராஜா, மிஸ்டர் A. D. கிராம்பி, ஐ.சி.எஸ்., ராவ்பகதூர் கோவிந்தாச்சாரி முதலியோர் காணப்படுகின்றனர். —P. P. B.

தொழிற்சாலையில் கேடுதி

இந்தத் தொழிற்சாலைகளில் ஒரு கெட்ட விஷயம் நடைபெறுவதுண்டு. ஏராளமான பிரயோஜனமற்ற பொருட்கள் வெளிவந்து விடுகின்றன. நான் மேற்படித் தொழிற்சாலை செய்து முடிக்கின்ற நூலில் மூன்றில் ஒன்று பிரயோஜன மற்றதென்று கண்டேன். இதனைப்பற்றிப் பத்திரிகைகள் அதிகமாகக் கண்டித்தெழுதின. சர்க்காரும் அதிகமாகக் கவனம் செலுத்தினர். ஒரு முறை நிர்வாகஸ்தர்களில் ஐவரை சிறைப்படுத்தியது சர்க்கார். அதுகாலை, கெட்டபொருள் வெளியாகக் காரணம், தொழிலாளிகளின் பழக்கமின்மை, ருஷ்யப் பஞ்சின் மென்மையற்ற தன்மை, நிர்வாகக் குறைவு முதலியவை என்று சொல்லப்பட்டது. சோவியத் தொழிற்சாலைகளில் பொதுவாகக் காணப்படும் ஒரு குறை இதுதான். எந்தப் பொருளும் ஒழுங்காக அமைக்கப்படுவதில்லை. ஆதல்பற்றி சர்க்கார் மிகுந்த கவலை செலுத்தி வருகிறார்கள்.

எனக்கு இவானேவோவிலுள்ள எத்தனையோ தொழிலாளிகளிடம்—ஆண்களும் பெண்களும் உட்பட—பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. தொழிலாளிகள் வயிற்றுக்குத் தகுந்தபடி தபாவத்தில்

வேற்றுமை காணப்பட்டாலும் பெரும் பாலாகப் பல விஷயங்களில் அனைவரும் ஒத்தே யிருந்தார்கள்.

உணவு

உணவு நிலைமை கஷ்டமும் அழுத்த மும் நிரம்பி யிருந்தது. எதிர் காலத் தில் நம்பிக்கை யுடையவர்கள் யுத்தத் திற்கு முன்னிருந்ததைவிட இப்போது சௌகரிய மதிகமென்கின்ருர்கள். சில கிழங்கள் யுத்த காலத்தில் வாங்க முடிந் ததைவிட இப்போது உணவுப் பொருட் களை வாங்குவது கஷ்டமென்கின்ருர் கள். இப்போது ஒவ்வொரு மனித னுக்கும் கொடுக்கப்படும் உணவின் அளவு வருமாறு :—

ஒரு மாதத்திற்கு ஒரு மனிதனுக்கு
66 ராத்தல் அரிசி,
800 கிராம் சீனி,
1 கிலோகிராம் மாமிசம்,
(இன்னும் சில பொருட்களுமுண்டு)

மற்றப்படி குடும்ப உறுப்பினர்களுக்கு அதிகமாய்க் கொடுப்பதில்லை.

வாடகை

பழைய வீடுகட்கு ஒரு மாதத்திற்கு வாடகை 20 ரூபிள் முதல் 30 ரூபிள் வரையிலும் உண்டு. புதிய வீடுகளில் இரண்டு போதுமான அளவு விஸ்தார முடைய அறைகள், ஒரு சமையலறை, ஒரு ஸ்நான அறை ஆகியவை அடங்கி யிருக்கின்றன. இதன் வாடகை மாதம் 30 ரூபிள் முதல் 40 வரை யிருக்கும். குளிர் காலத்தில் சூட்டுக்கான அமைப்பு களிருந்தால் வாடகை சற்று அதிகரிக் கும். புதிய வீடுகளில் திறமை வாய்ந்த தொழிலாளிகளோ, அல்லது புருஷ னும் பெண்ணும் வேலை செய்யும் குடும் பமோ தான் தங்கிவரக் கண்டேன்.

வேலை நேரம்

பணவருமானம் அங்கு குறைவாக இருந்ததென்ருல் அக்குறையை நிரப்ப வேறு வசதிகள் கிடைக்கின்றன. இன்று யுத்தத்திற்கு முன்னிருந்ததைவிடக் கல்வி பெறுதற்கும் பொழுது போக்கிற் கும் அபரிமிதமான சௌகரியம் கிடைக் கிறது. ஜாராசனத்தில் (யுத்தத்திற்கு முன்பு) தொழிலாளிகள் தினசரி ஒன் பது முதல் 10 வரையிலும் மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்றிருந்தது. சில இடங்களில் 12 மணி நேரமும் வேலை செய்யப் பட்டதாகக் காண்கிருேம். இந்தச் சித்திரவதையைக் குறைத்து இப் போது எழுமணியாக்கி யிருக்கிருர்கள். இங்ஙனம் குறைக்கக்காரணம் மெஷீன் கள் (இயந்திரங்கள்) அதிகமாக உப யோகிக்கப்படுகின்றன வென்பதாகும்.

தொழிலாளர்க்குக் கல்வி.

ருஷ்யாவில் காணப்படுகின்ற மிகப் பெரிய வசதி தொழில்ாளர் சிறுவர் கட்கு அளிக்கப்படும் கல்வி யாகும். நான் 50 வயதான ஒரு தொழிலாளப் பெண்ணைக் கண்டு பேசியபோது அவர் "நான் புரட்சிக்கு முன்போ இப்பொ ழுதோ நல்ல ஜீவிதத்தை அநுபவித்த தில்லை. வெள்ளை ரொட்டியும் வெண் ணெயும்முன்பும் நான் சாப்பிட்டதில்லை; இப்போதும் சாப்பிடவில்லை. ஆனல் என் புதல்வி டாக்டர் பரிட்சைக்குப் படித்து வருகின்ருள் இப்போது. இன் னும் சில மாதங்களில் பரீட்சை தேறி வெளிவரலாம். அவள் நான் காணுத மிக நல்ல வாழ்க்கையைக் காண்பாள் என்று நம்புகிறேன்" என்று கூறி ஞர்.

ருஷ்யாவில் நல்கப்பெறும் கல்வியில் விசேஷம் ரசயானக் கலைப் போதனை யாகும். இவனேவோவிலுள்ள கல்லூ ரியின் ஓர் பாகத்தில் ரசாயனப் பகுதி நிமிர்ந்து தோன்றுகிறது. அதில் ஆயி ரக் கணக்கான சிறுவர்கள் கல்வி பயில் கின்ருர்கள். அவர்களில் பெரும் பாலார் தொழிலாளர் சிறுவராம். அந்த ஸ்தாபனத்தின் அதிபாகிய ஒருவர் மெட்வெடேவ் என்ற ஒரு வாலிப விஞ் ஞானிக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். இந்த வாலிபர் முன்பு ஒரு தொழிற் சாலையில் வேலைசெய்து கொண் டிருந்தவர். இப்போது இவர் "செல்லு லாயிட்" என்ற பொருள்பற்றிப் பல அற்புதங்களைக் கண்டுபிடித்திருக்கிருர். அதனை வெளிநாட்டுப் பத்திரிகைகள் பல பிரசித்தம் செய்திருக்கின்றன.

இவனேவோ மிகுந்த தொழிலின லும் படிப்பினலும் நிரம்பியிருந்தாலும் குற்றம் செய்வதில் தவறிப்போகவில்லை. பற்பல திருட்டு, வழிப்பறி முதலியவை கள் நடைபெறுகின்றன. இந்தச் செயல்கட்குக் காரணமா யிருப்பவர்கள் எல்லாம் அண்மையில் அமுலுக்கு வந்த "பாஸ் போர்ட்டு"ச் சட்டத்தால் மாஸ் கோ முதலிய நகரங்களிலிருந்து வெளி யேறி யவராவர். சிலர்களின் தலைவர்க ளில் இருவரை சமீபத்தில் சார்க்கார் சுட்டுக்கொன்று விட்டார்கள். இதே தண்டனை சில தொழிற்சாலைகளைக் கொள்ளையடிக்கத் திட்டம்போட்ட தலை வர்கட்கும் கொடுக்கப்பட்டது. ருஷ் யாவில் கொலைத் தண்டனை மிகமிக அபூர்வம். ஒரு கால் கொலை செய்ய வேண்டிவந்தால் "சமூகப் பாதுகாப்பிற் கான மிக உயர்ந்த நடவடிக்கை" என்று பெயர் சொல்கிருர்கள்.

காரைக்குடி
பழைய மாணவர் சங்கம்

இச்சங்கத்தின் "ஜெனரல் பாடி" கூட்டம் 1-7-34 ல் எஸ். எம். எஸ். வித்தியாசாலையில் நடைபெற்றது. பள் ளிக்கூட ஸ்தாபகர் திவான் பகதூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் அவர் களும், சங்கக் காரியதரிசி எம். டி. டி. வி. வெள்ளையன் செட்டியாரவர்கள் காலஞ்சென்றதற்காக வருந்தி, முன்ன வர் பிரிவை வருடந்தோறும் கொண் டாட ஆயிரம் ரூபாயில் ஒரு நிதி சேர்த்து ஒரு ஹாலை அவர் பெயரால் அழைக்க வேண்டுமென்றும் மற்ருெரு ஹாலை வெள்ளையன் செட்டியார் ஹால் என்று வழங்கவேண்டுமென்றும் 1934 35-ம் வருடத்தில் எஸ். எம். எஸ். வித் தியாசாலையில் படிக்கும் மாணவர்கள் உபகார சம்பளமாக 300 ரூபாய் ஒதுக்கி வைப்பதென்றும் தீர்மானித்த தென்று தெரிகிறது.

ஊழியன் சந்தா.

உள்நாடு வருடச் சந்தா	ரூ	6-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	3-0-0
வெளிநாடு வருடச் சந்தா	,,	10-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	5-0-0

காரியஸ்தர்,
ஊழியன் ஆபீஸ்,
56, தம்புசெட்டித் தெரு,
சென்னை.



நற்றாய் இரங்கல்.

ராய. சொ.

கிள்ளைகளே!யென் கிளிமொழி,
இன்னிசை வேயொடுயாழ்
கொள்ளாள்; அழகை மறந்தாள்;
குழலில் மலர்முடியாள்;
அள்ளாள் அமுதும்; அணியாள்
இழையும்; அநுதினமும்
"வள்ளால்! மறுவறு காந்தி!"யென்
பாளிது மாதுயரே.

"காந்தி கலித்துறை யந்தாதி"

'நற்றாய் இரங்கல்' ஆவது நல்ல தாய் மகள் பொருட்டு வருந்துதல் ஆம். பழயகாலத்து, இத் துறை தன் மகள் காதலனோடு வீட்டைவிடுத்து வெளியேறுதல் பற்றியேபாடப் பெற்றிருக்கிறது. இப்பாட்டுப் பழய துறையில் புதிய முறை. இச் சித்திரத்தில் காணப்படும் இளம் பெண் மகள். முதியவள் தாய். பெண்ணின் பக்கத்தில் குழலும் வீணையும் மலரும் கனி வகைகளும் நகைகளும் ஆங்காங்கு கிடக்கின்றன. அப்பொருள் எதிலும் அம்மங்கை மனம் செல்லவில்லை. அவள் மனம் காந்தியின் வயப்பட்டிருக்கிறது. அதற்கு இரங்கிய தாய்க்கிளிகளிடம் முறையிடுகின்றாள்.

பொருளாதார உலகம்

(B. N. ராஜன்)

யுத்தக் கடன்

பழைய காலத்திலே நவகோடி நாராயணன் என்று ஒரு வட்டிக் கடைக்காரன் இருந்தார். அவனிடமிருந்து மூன்று சிற்றரசர்கள் பணம் (கடன்) வாங்கி யிருந்தார்கள். அப்பணத்தை நவகோடி பன்முறை கேட்டார். வருவதாகக் காணோம். எனவே சங்கடத்துட னிருக்க, ஔவைப் பிராட்டியார் ஒருநாள் தோன்றினர். அவரிடம் தம் வருத்தத்தைக் கூறினர் நவகோடியார். அம்மூதாட்டியார் ஒரு செய்யுளைச் சொன்னர்களாம். அச் செய்யுளாவது:—

வாதக்கோன் பின்னையென்றான்
[வைபக்கோன் நாளையென்றான்
எதக்கோன் ஏதேனுமில்லையென்
[றான்—வாதக்கோன்
பின்னையினும் வைபக்கோன்
[காளையினும்....
ஏதக்கோன் சொல்லே இனிது.

இச்செய்யுளைக் கேட்டார் நாராயணர். மௌனமாக இருந்துவிட்டார். இக்கதையை ஒத்திருக்கிறது யுத்தக் கடனின் சரித்திரம்.

1914 முதல் 1918 வரையிலும் நடைபெற்ற மகாயுத்தத்தில் "சாம் மாமா" என்ற நவகோடி நாராயணர் (அமெரிக்கா,) ஏராளமான பணத்தை ஜான்புல் என்ற ஆங்கிலக்கோன், பிரஞ்சுக்கோன், ருஷ்யக்கோன், ஜர்மன் கோன், இத்தாலியக்கோன் முதலிய பலருக்குக் கடன் கொடுத்து யுத்தத்தை மங்களகாமாகச் செய்து முடித்தார். அவர் கொடுத்த கடனின் முழுவிவரம்:—

மொத்தக் கடன் தொகை ஆயிரத்து முப்பத்து ஐந்து கோடி டாலர். இதில் யுத்த சமாதானம் ஏற்படுமுன் கொடுக்கப்பட்ட தொகை 700 கோடி; சமாதானம் ஏற்பட்ட பிறகு 250 கோடி. ரொக்கமாகவும் 74 கோடி. கஷ்ட நிவாரண சப்ளைக்காகவும் கொடுக்கப்பட்டது.

மேற்படித் தொகையில் இதுகாறும் ஏறக்குறைய வட்டிவகையில் 200 கோடியும் அசலில் 100 கோடியும் கொடுக்கப்பட்டு விட்டது. இன்னும் சுமார் ஆயிரத்து நூற்றுப் பதினைந்து கோடி டாலர் (வட்டியுட்பட) கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தொகையை மற்றக் கோன்கள் கொடுக்கின்றார்களில்லை. ருஷ்யக் கோனர் கடன் கொடுப்பதும் வாங்குவதுமே பெரிய பாவம் என்ற முடிவிற்கு வந்திருக்கின்றார். ஆதலால் யாதேனுமில்லை என்று கூறிவிட்டார். இவர்மீது சாம் மாமாவுக்குப் பெரிய கோபம். அக்காரணத்தால் இவரையொரு போக்கிரி என்றும் இவரோடு நட்புக் கொள்ளவே கூடாதென்றும் நினைத்துவந்தார். ஆனல் இப்போது ரூஸ்வெல்ட் மாமாவின் செயல் துணைவராய் வந்ததும் முடிவு மாறிவிட்டது. ரூஸ்வெல்ட் சற்றேறக் குறையப் பொது உடைமைக் கொள்கையை என். ஆர். எ. என்ற பெயரில் வகுத்துத்தன் நாட்டில் சிறிது சிறிதாகப் புகுத்தி வருகிறார். ஆதலால் அவருக்கு ருஷ்யக் கரடிக்கோன் மீது அளவிலாபற்றுத் தலைகாட்டியுள்ளது. எனவே ருஷ்யக் கோனரைக் கட்டித் தழுவவும் பொருள் கடன் கொடுக்கவும் வியாபார உடன்படிக்கை செய்யவும் செய்து வருகிறார். இந்தப் புதிய நட்பில் ஜப்பான் பீதியென்பது ராஜ தந்திரமாகப் புதைந்திருக்கிறதாம். இது இப்போது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விஷயமல்ல.

அடுத்தபடியாக சாம்மாமாவு (நவகோடி)க்கு வரவேண்டிய டாலர்களில் ஜான்புல்கோன் செலுத்த வேண்டியது 430 கோடி. பிரான்ஸ்க்கோன் கொடுக்க வேண்டியது 380 கோடி. இவர்களிடம் மாமா 'கடிந்து' கேட்டார். அதற்கு ஜான் புல் "நான் என்ன செய்வேன்; எனக்குத் தர வேண்டியவர்கள் தந்தால்தானே கொடுக்க முடியும்" என்று பதில் கூறினர். மாமா அதனை சம்மதியாது உமக்கு வர வேண்டியதைக் கவனித்தா நான் பணம் தந்தேன். உம்முடைய அந்தஸ்தை உத்தேசித்தல்லவோ கொடுத்தோம். இந்த மாதிரி நொண்டிச் சாக்குகளெல்லாம் சொல்லிக்கொண் டிருப்பது நன்றாயிருக்கவில்லை" என்று மிரட்டினர். ஆங்கில அரசாங்கம் ஒன்றும் பேசுவதற்கில்லாது தலையைத் தொங்கவிட்டு நிற்கிறது. பழைய காலமென்றாலோ அல்லது தனிமனிதர்க ளென்றாலோ இத்தகைய் கேள்விக்கு "படங்கொண்ட பாந்தள்வாயில் பற்றிய தேரைபோலும், திடங்கொண்ட ராமபாணம் செருக்களத்துற்றபோது கடன் கொண்டான் நெஞ்சம் போலும் கலங்குவார்கள். ஆனல் இப்பொழுது கடங் கொடுத்தார் சிக்கித் திண்டாடவேண்டி யிருக்கிறது. சாமனிடம் கடன்பட்ட ஜர்மன்கோன் கையை விரித்துவிட்டுக் கடன்சமாசாரத்தையே மறந்துவிட்டார். பிரான்சும் அப்படியே. அங்கு யுத்தக் கடன் என்றால் பொது ஜனங்கள் போடும் கூக்குரல் அட்லாந்திக்கைக் கடந்து அமெரிக்கா சென்று விடுகின்றது. மாமா வட்டியை ஒன்றிரண்டுதரம் கழித்துக் கொடுத்தும் பார்த்துவிட்டார். ஒன்றும் நடக்கவில்லை. ஆகவே கடைசியாக ஔவையார் பாட்டைத் தியானித்து ஜபம் செய்வதுதான் தகுதியாகத் தோன்றும்.

அரிசி இறக்குமதி

அரிசியின் விலை மிகவும் குறைந்துவிட்டது. இதன் காரணம் வெளி நாட்டு அரிசியின் வருகை, போட்டி ஆகியவையும் நம்நாட்டில் உற்பத்தி அதிகரிப்புமாம்.

சென்னையில் அரிசி இறக்குமதி

கடல் வழி

ஆண்டு.	அரிசி டன்.	நெல் டன்
1932-33.	35,418 ,,	10 ,,
1933-34.	77,665 ,,	4,381 ,,
கரை வழி		
1932-33.	445,374	69,399
1933-34.	533,927	80,697

சென்னை ராஜதானியில் மொத்த சாகுபடி அரிசி

1932-33.	5,406,000 டன்கள்.
1933-34.	6,090,000 ,,

பூமிக்குள்ளிருப்பது திரவமா, கெட்டிப் பொருளா?

பூகர்ப்பத்தைப்பற்றிய ஆராய்ச்சி

பூமி ஓர் பெரிய கோளம். ஓயாது சுற்றிக் கொண்டே இருக்கிறது. சுற்றும் விசையினால் மேற் பரப்புக் குளிர்ந்து கெட்டியாகிக் கொண்டிருக்கிறது. உட்புறம் தண்ணீர் போல் உருகி நிற்கிறது. பூமியைத் துளைத்துக் கொண்டு இறங்குபவர்கள் அதிகமதிகம் ஆழமாகப் போகுந் தோறும், சூடு பெருகிக் கொண்டே போவதைக் காண்பார்கள். இங்ஙனம் சூடு மிகவும் அதிகப்பட்டால் இறுதியில் பொருட்கள் உருகித்திரவமாகத் தானே ஆகும்? ஆகவே பூமியின் உட் புறம் நெருப்புக் குழம்பாக விருக்கிறதென்று யூகித்தனர் பூகர்ப்ப சாஸ்திரக்காரர்கள். மேலும் எரிமலைகளுடைந்து பூமிக்குள்ளிருந்து வெளியே பாயும் உலோகக் குழம்பை (திரவத்தை) நோக்கினால் நிச்சயமாகவும் பூமியின் உட்புறம் நெருப்புத் திரவமே கொதித்து எரிந்து காய்ந்து கொண்டிருக்கின்றது என்று சொல்லலாம். இத்தியாதி காரணங்களால் பூமியின் உட் பக்கம் நெருப்புத் தண்ணீர் என்று நெடுநாளாக வல்லுநர் பலர் கூறி வந்தனர். ஆனால் இப்போது ந்யூ ஜிலாந்தில் ஏற்பட்ட பூகம்பத்திலிருந்து சில அனுமானங்களைப் பெற்றுக் கொண்ட பேஸ்டிங்ஸ் என்ற ஆங்கில நிபுணர், "பூமியின் உட்புறமும் வெளிப்புறத்தைப் போன்றே கெட்டிதான்" என்றும் அக் கெட்டிப் பொருளின் குறுக்களவு 4400 மைல் என்றும் கூறுகிறார்.

இதனை மறுத்தும் ஆதரித்தும் கூறுபவர் பலர். சமீபத்தில் இங்கிலாந்திற்குச் சென்ற கே. ஈ. புல்லன் என்பார் பூமியின் உள்ளில் திரவப் பொருளே இருக்கின்றது, அதிலும் உருகிய இரும்புதான் அதிகம் என்று சொன்னார்.

இத்தகைய பெரிய அபிப்பிராய வித்தியாசத்தை — விஞ்ஞானிகட்குள்— உண்டு பண்ணிய சம்பவம் 1929லும் 1931லும் ந்யூ ஜிலாந்தில் ஏற்பட்ட பூகம்பமாம். அப் பூகம்பத்தின்போது சுமார் 50 நிபுணர்கள் (பூகர்ப்ப சாஸ்திர நிபுணர்கள்) ஆராய்ச்சி நடத்தினார்கள். அவர்களெல்லாம் சேர்ந்து கூறும் முடிவையே மிஸ்டர் பேஸ்டிங்ஸ் வெளியிடுகின்றார்.

பூகம்பத்தைப் பற்றிய குறிப்புகளைத் தரும் இயந்திர மொன்று செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு சீஸ்மோகிராப் (Seismograph) என்று பெயர். தமிழில் பூகம்ப கணன இயந்திரம் என்று கூறலாம். பூகம்ப சாஸ்திரம் (Seismology) என்று பெயர் வழங்கப்படுகிறது. தற்போது பெரும் பாலான நகரங்களில் சீஸ்மோகிராப் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எத்தனை மைல்களுக்கப்பால் பூமி அதிர்ச்சி ஏற்பட்டாலும் விவரமாகத் தெரிந்து கொள்ளலாம். அவ்வியந்திரத்தோடு நன்கு பழகுபவர் தினசரி சராசரி 20 தரம் பூமியதிர்வதுண்டென்று கூறுகின்றனர்.

பூகம்பம் ஏற்படும் காலையில் பூமியில் இருவிதமான அதிர்ச்சி அலைகள் உற்பத்தியாகிப் பிரயாணம் செய்கின்றன. அதாவது தண்ணீரில் கல்லைப்போட்டால் கல்விழுந்த விடத்திலிருந்து அலைகளுற்பத்தியாகிச் சுற்றிலும் செல்வது போல, பூகம்ப மேற்பட்ட விடத்திலிருந்து அதிர்ச்சி அலைகளேற்பட்டு நாலா பக்கமும் செல்கின்றன. அவ்வாறு பூகம்பத்தால் ஏற்படும் இருவித அலைகட்கும் (1) "புஷ் வேவ்ஸ்" அல்லது நீளமாகத் தள்ளிக் கொண்டே போகும் அலைகள், (2) 'ஷீயர்' அல்லது வெட்டு (இடைவிட்ட)அலைகள் என்றுபெயர் கூறுகிறார்கள். கெட்டியான பொருட்களுக்குத்தான் இவ்விருவித அலைகளு மேற்படும். திரவமான பொருட்களில் தள்ளும் அலைகள் மட்டிலுமே தோற்றக் கூடும்.

இப்போது நிபுணர்கள் ந்யூஜிலாந்திலிருந்து வெட்டு அலைகள் ஏற்பட்டு ஐரோப்பிய நாடுகளை எட்டி விட்டதென்று நிரூபித்து விட்டார்களானால் பூமியின் உட் புறம் கெட்டி தான் என்று சந்தேக மறக் கூறிவிடலாம்.

ஜப்பான் விஞ்ஞான சாஸ்திரியான இமாமுரா பூகம்பத்திலிருந்து வெட்டு அலைகள் உற்பத்தியாகும் என்று கூறப் போதுமான லக்ஷிய மிருக்கிறதென்கிறார். மிஸ்ஸௌரியிலிருக்கும் டாக்டர் மாக் எல்வேயின் 1924-ல் ந்யூஜிலாந்திலேற்பட்ட அதிர்ச்சியிலிருந்து பூமியின் உட் புறம் கெட்டிதானென்று தான் அபிப்பிராயப்படுவதாகக் கூறினார்.

மிஸ்டர் புல்லன் உறுதியாகப் பூமியின் வயிற்றில் நெருப்புக் குழம்பே இருக்கிறதென்கின்றார். அவர் கருத்துப்படி பூமியின் மேல் கெட்டியாக விருக்கும் பாகத்தின் கனம் மண்கல் முதலியவற்றின் கனம் 2000 மைல் என்று தெரிகிறது.

திருச்சி ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி

நம் ஜில்லாவிலுள்ள எல்லாக் காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கு மிருந்த தடை உத்தரவுகள் 1934 வருடம் ஜூன் மாதம் 14-ந் தேதியன்று வெளியான விசேஷ பிரசுரத்தின் மூலம் சர்க்காரால் ரத்து செய்யப் பட்டுவிட்டதால் எல்லா ஜில்லாக்களையும் போல் நமது ஜில்லாவிலும் பழயபடி கிராம, தாலூகா ஜில்லா சபைகளை அமைக்கவேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. ஆகஸ்டு மாதம் 15-ந் தேதிக்குள் சேருகிற அங்கத்தினர்களைக் கொண்டு அந்தந்த தாலூகா கமிட்டிகளின் தேர்தல் நடைபெறும். ஜில்லாவாசிகள் அனைவரும் நான்கணா சந்தா செலுத்தி காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்ந்து காங்கிரஸின் லக்ஷியத்தைப் பூர்த்தி செய்வதில் நம் ஜில்லா முன்னணியில் நிற்க உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இது விஷயமாக வேண்டிய அங்கத்தினர் புத்தகங்கள், பிரசுரங்கள் முதலியவைகளுக்கு திருச்சி தெப்பக்குளம் போஸ்ட் சைனா பஜார் ரோட்டிலுள்ள ஜில்லா காங்கிரஸ் ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் என்று அக்கிராசனர் திரு. வா. சுவாமினாத சாஸ்திரிகள் எழுதுகிறார்கள்.

காந்தி நாமம் ஓங்குக!

மின்வெட்டு

ஆலயப் பிரவேச மசோதா இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்திய சட்டசபையில் விவாதத்திற்கு வராது. காரணம் அதனைப் பிரேரேபிக்க வேண்டியவரான திரு. வி. எஸ். ரங்கஐயர் தன் தகப்பனுர் இறந்து போனதால் ஊருக்குப் போய்விட்டார்.

கெட்டகாலம்! ஒருகால் இயமன் சனுதனிகள் பக்கம் சேர்ந்திருக்கிருனே?

* * *

இங்கிலாந்தில் மிகப் பெரிதும் உலகத்திலேயே அதிக வசதியுள்ளதுமான ஒரு கண் ஆஸ்பத்திரி மூன்று லட்சம் பவுன் செலவழித்துக் கட்டப் போகிருர்கள்.

அம்மம்மா! இனியாவது சர்ச்சில் போன்றவர்களின் பார்வை குணமாகட்டும்!

* * *

பம்பாயில் காங்கிரஸ் கூடுவதற்கு சர்ச்கேட் ஸ்டேஷனுக்கு மேற்கே இருக்குமிடத்தைக் கேட்டு சர்க்காருக்குக் கடித மெழுதப்பட்டதில் இசைந்துவிட்டதாகத் தெரிகிறது. ஆனல் அதைத் மைதானத்தில் பொருட்காட்சி நடாத்த உத்தரவு வேண்டுமென்றபோது காங்கிரஸ் பந்தருக்கு அருகேயே இருக்கும் 150 அல்லது 200 ஏக்கர் தரிசு நிலத்தில் நடத்தலாமென்றதாம்.

[ஆன்சர் டு தி பாயிண்டு ப்ளீஸ்

* * *

திருட்டுச் சாராயம் செய்யப்பட்டதாக சென்னை மாகாணத்தில் கோர்ட்டுக்கு வந்த வழக்குகள் விவரம்:—

1928-29	2699
1929-30	2507
1930-31	2579
1931-32	3301
1932-33	4524

இதனைப் பார்த்தால் நாடு முன்னேற்றமடையவில்லை என்று யாரே கூறுவர்!

* * *

சென்னை சர்வகலாசாலையில் சென்ற வியாழனன்று நடந்த விழாவில் 1131 பேர்கட்குப் பட்டமளிக்கப் பட்டது.

இவர்களில் பெரும்பாலார் பெண்கள் புராணகாலம் திரும்பி வருதற்கு நல்ல உதாரணம்!

* * *

காரைக்காலுக்கு 3 மைல் தூரத்தில் புயல்காற்றினுல் ஓர் மரம் சாய்ந்துவிட்டது. ஆனல் இம்மரம் தலைதூக்கிச் செங்குத்தாக நிற்கிறது. இதனைக்காண ஜனங்கள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றனர்.

நல்லது பக்கத்தில் தேங்காய், பழம், குடக்கடைகளும் ஆலயத்திற்கு அஸ்திவாரமும் ஏற்பட வில்லையா?

* * *

இம்மாதம் 7-ந் தேதி முதல் தாம் ஒருவாரம் உண்ணாவிரத மிருக்கும்போதும் பிறகு தன் உடம்பு சௌக்கியமடையும் பரியந்தமும் யாரும் தன்னை வந்து பார்த்துத் தொந்தரவு செய்யக்கூடாதென்றும் தன் விரத மிருக்கும்போது பிறர் யாரும் விரதமிருக்கக் கூடாது என்றும் மகாத்மா காந்தி பொது ஜனங்களைக் கேட்டுக் கொள்கிருர்.

பட்டினிகிடந்து வேறு யாருக்குப் பழக்கமிருக்கிறது? அதனுல்தான்.

* * *

ஒரு சுதி தேசத்துப் பெண்ணின் தோளிலிருந்து ஒரு ஊசியெடுக்கப்பட்டது. அது 30 வருடங்களாகத் தெரியாமல் அவள் தோளிலிருந்து விட்டது.

குடும்ப பாரம் இல்லாத பெண் போலிருக்கிறது.

* * *

மனிதனுல் 900 வருடம் உயிர்வாழ முடியும். எப்படியெனில் அவன் தனது இரத்தத்தை பாரன்ஹீட் தெர்மாமீட்டர்ப்படி 45 டிக்கிரி சூடுடையதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இதுபற்றித்தான் நமது பெரியவர்கள் "மனித னுனல் சூடுவேண்டும்" என்கின்ருர்களோ?

* * *

ஒரு சாதாரண மனிதன் வருடத்தில் 11800000 வார்த்தைகளைப் பேசுகிருனும்.

நாட்டுப்புறத்துப் பாட்டிகள்கூடவா இந்த விகிதம் பேசுகிருர்கள்?

* * *

மனிதன் 94,600,000 தடவைகள் தெரியாமல் விழிக்கிருனும்.

கணக்கு வகுப்பில் மாணவர்கள் கூடவா இத்தனைதரம் விழிக்கிருர்கள்.

* * *

1788 ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து வரவழைத்து குவின்ஸியில் நடப்பட்ட ஒரு ரோஜாச்செடி இன்றும் பூத்துக் கொண்டிருக்கின்றது. இதனை நட்டவர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இரண்டாவது பிரசிடெண்டின் மனைவியான ஸ்ரீமதி அபிகையில் ஆடம். நட்டு இப்போது சுமார் 146 வருடங்களாகின்றன.


ஸ்ரீமதி ஆடம் மிகவும் கற்புடையவர் போலிருக்கிறது.

* * *

புதுக்கோட்டை சமஸ்தானத்திலே. உணவுப் பொருள்களின் விலைக்கும் வட்டி விகிதத்துக்கும் ஒரு நிதானமான சம்பந்தத்தைக் காணும் கருத்துடன் மசோதா ஒன்று தயாரிக்கப்படுகிறதாம் இது மிகமிக நேர்மையானது என்று யாரும் ஒப்புக்கொள்வர்.


வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு உதவி

ஜெனிவாவில் அண்மையில் நடந்த சர்வதேசத் தொழிலாளர் மகா நாட்டில் இந்தியத் தொழிலாளிகளின் பிரதிநிதியான திரு. ஜம்னதாஸ் மேதா என்பவர் பேசியபோது, இந்தியாவிலே விவசாயிகளிடையே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க அரசாங்கம் 1930-31 வருடத்தில் செலவு செய்தத் தொகையைக் கணக்குப் போட்டால் சராசரி நபர் ஒன்றுக்குத் தம்பிடி செலவு செய்திருப்பதாக ஏற்படுமென்று புள்ளி விவரங்களுடன் கூறினர்? ஒரு தம்பிடி என்றுல் எவ்வளவு ஜாஸ்தி.



சிதம்பரம் கோவிந்தராஜஸ்வாமி கோவில். இதனை சமீபத்தில் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்கள் கட்டி முடித்தார்.


—Pon.



சிட்னி நகரில் அமைந்திருக்கும் பிரக்யாதிபெற்ற பாலம். —N.:I.;A.



மெல்போர்ன் (ஆஸ்திரேலியா) நகரிலிருக்கும் சுகாதார மிக்க ஓரிடம். நன்கு :சூரிய ஒளி வீசுவதால் பெண்கள் குதூகலித்து விளையாடுகின்றனர். —N. I. A.




'கூக்காபுரா' என்ற ந்யூ சௌத்வேல்ஸ் பறவை பாம்புகளைக் கொல்வதில் தந்திரம் மிக்கது. படத்தில் ஒரு பட்சி (கூக்காபுரா) பாம்பொன்றைச் சாப்பிடப் போகிறது.

—N. I. A.



மெல்போர்ன் நகரின் தூர் காட்சி. கிளஸ்டர் பிரபு இங்கு நடக்கும் 100-வது வருட விழாவைப் பார்க்கப் போகிறார். —N. I. A.



ஆஸ்திரேலியாவிலுள்ள ஹியூம்முரே நதியில் கட்டப்பட்டிருக்கும் அணைக்கட்டு. உலகில் இதனை மூன்றாவதாக மதிக்கின்றார்கள். இதற்கு 50 லட்சம் பவுன் செலவாயிருக்கிறது. —N.I.A.

புதிய தேசியக் கட்சி

மாளவியா—ஆனே விளக்கம்

"தேசியக் கட்சி" யென ஓர் கட்சி அமைக்கும் பொருட்டு பண்டித மதன் மோகன மாளவியா இம்மாதம் 18-ந் தேதி யன்று ஓர் மகாநாடு கூட்ட விருப்பது நேயர்களுக்குத் தெரியும். இக்கட்சியின் வேலை முறையை விளக்கி பண்டித மாளவியாவும், திரு. எம். எஸ். ஆனேயும் விடுத்துள்ள ஒரு அறிக்கை விவரம் பின்வருமாறு :—

"வகுப்புத் தீர்ப்பு எனத் தவருகச் சொல்லப்படுவதும், வகுப்புப் பிரச்னை சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்காரால் வெளியிடப்பட்டதுமான முடிவுபற்றி காங்கிரஸ் காரியக் கமிட்டி நிர்ணயித்துள்ள வேலை முறையைக் குறித்து அபிப்பிராயபேதம் ஏற்பட்டது காரணமாக, காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டிலிருந்தும், எங்களில் ஒருவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்தும் ராஜிஞமா செய்ய நேர்ந்தது அனைவருக்கும் தெரியும். எங்களுடைய தோழர்கள் எங்களது ராஜிஞமாக்களை வாபீஸ் வாங்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தி, எங்களுடைய ஆட்சேபனைகளைப் புனராலோசனை செய்வதாக உறுதி கூறியதால், எங்கள் அபிப்பிராய பேதத்தைத் தீர்த்துக்கொள்ளக் கூடுமென்ற நம்பிக்கையின் பேரில் நாங்கள் அவைகளை வாபீஸ் வாங்கிக் கொண்டோம். ஆனல் மேற்கொண்டு நடந்த விவாதத்தின் பலனுக எங்களிடை ஒரு ஒப்பந்தம் ஏற்படவில்லை யென்றும், எனவே இறுதியாக நாங்கள் ராஜிஞமா செய்ய நேர்ந்ததென்றும் வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

தொடர்பு நீங்கவில்லை

இங்ஙனம் ராஜிஞமா செய்ததன் மூலம், எங்களுக்கும் காங்கிரஸுக்கும் வெகு காலமாக இருந்துவரும் சம்பந்தம் நீங்கிவிடவில்லை யென்பதை நாங்கள் தெளிவாக அறிவிக்க விரும்புகிறோம். வகுப்புத் தீர்ப்பு சம்பந்தமாக காங்கிரஸ் கொண்டுள்ள கருத்தைத் தவிர வேறு எவ்விஷயத்திலும் காங்கிரஸுக்கும் எங்களுக்கும் அபிப்பிராய பேதமில்லை.

இவ்வொரு விஷயத்திலுள்ள அபிப்பிராய பேதம் காரணமாக காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டிலிருந்த எங்கள் பதவிகளை ராஜிஞமா செய்ய நேர்ந்தது பற்றி நாங்கள் ஆழ்ந்த வருத்தமடைந்துள்ளோம். ஆனல் தேசம், காங்கிரஸ் இவைகள் விஷயத்தில் நாங்கள் செலுத்த வேண்டியுள்ள கடமையைப் பெரிதாகக் கருதியே நாங்கள் இங்ஙனம் ராஜிஞமா செய்துள்ளோமென நாங்கள் தேச மக்களுக்கு உறுதி கூறுகின்றோம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியும், காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டும் நிர்ணயித்துள்ள வேலை முறையானது, காங்கிரஸ் ஏற்பட்ட நாள் முதற்கொண்டு அது கையாண்டு வந்திருக்கும் கொள்கைகளுக்கும், வேலை முறைக்கும் சிறிதும் ஒத்ததல்லாததாக இருக்கின்றதென்பதே எங்கள் கருத்து. வகுப்புத் தீர்ப்பை ஏற்பது மில்லை, நிராகரிப்பது மில்லை யெனக் காரியக்கமிட்டி முடிவு செய்திருப்பதானது, தீங்கான விளைவுகளுண்டாக்குவதும், கேடானதும், தேசிய நலத்திற்கு மிக்க ஹானி விளைக்கத் தக்கதும், மத்தியச் சட்டசபைகளில் ஹிந்துக்கள் பிரதிநிதித்துவம் பெறும் விஷயத்தில் மிக்க அநீதி இழைப்பதும், முக்கியமாக பாஞ்சாலத்திலுள்ள ஹிந்து, சீக்கிய வகுப்பினருக்கும், வங்காளம், அஸ்ஸாம் இம்மாகாணங்களிலுள்ள ஹிந்துக்களுக்கும் பெரும் கேடு விளைவிப்பதும் ஆகும்.

மேலும், நாங்கள் வெளியிட்டுள்ள நடவடிக்கை முறை காங்கிரஸின் கொள்கைகளுக்கும், வேலை முறைக்கும் ஒத்தவை யாகுமென நாங்கள் அபிப்பிராயப்படுகின்றோம். இப்பிரச்னை வெகு முக்கியமானதாதலின், தேசியத் தன்மையும், நேர்மையும் வாய்ந்ததென நாங்கள் நம்பும் அபிப்பிராயத்தை நாட்டினருக்கும் சட்டசபைகளிலும்



ஜெர்மன் குடியரசுத் தலைவர் வான் ஹிண்டன்பர்க் காலஞ்சென்ற அன்று பம்பாய் ஜெர்மன் தூதர் காரியாலயத்தில் தேசிய ஸ்வஸ்திக்கொடி பாதி ஏற்றப்பட்டிருந்தது. பம்பாயிலுள்ள ஜெர்மன் உத்தியோகஸ்தர்களெல்லாம் காரியாலயத்தில் கூடி தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

—S. P. B.

எடுத்துக் காட்ட வேண்டியது எங்கள் கடமையென நாங்கள் கருதுகிறோம்.

கட்சி ஸ்தாபனம்

இந்நோக்கம் ஈடேறும் பொருட்டு, நாடுமுழுதும் வகுப்புத் தீர்ப்பு, வெள்ளைக் காகிதம் இவைகளுக்கெதிராகப் பிரசாரம் செய்யவும், ஒவ்வொரு மாகாணத்திலும் இவ்விரண்டையும் நிராகரிக்க முன்வரும் சிலரை இந்தியா சட்டசபைத் தேர்தலில் அபேட்சகர்களாக நிறுத்திவைக்கவும் ஒரு தேசியக் கட்சி அமைப்பதென நாங்கள் உத்தேசித்திருக்கின்றோம்.

வேலை முறை

எவ்வகுப்பினராயினும் எம்மதத்தினராயினும்; இந்தியர்களான அனைவரும் இக்கட்சியில் அங்கத்தினராகச் சேரலாம். இக்கட்சி முற்றிலும் தேசிய முறைகளின்படியே உழைத்துவரும். வகுப்பு பிரச்னைப் பற்றி ஒரு சமாசமான பரிகாரம் விளைவிப்பதற்கான முயற்சியில் இக்கட்சி மனப்பூர்வமாக ஒத்துழைத்து வரும். எல்லாத் தரப்பினரும் சம்மதித்தாலன்றி, லட்சுமணபுரி ஒப்பந்தத்தில் தலையிடக்கூடாதென்பதும், ஒரு இறுதியான ஒப்பந்தம் ஏற்படும் வரையில் லட்சுமணபுரி ஒப்பந்தப் படியுள்ள நிலையே இருந்து வரவேண்டுமென்பதுமே இக்கட்சியின் கருத்து.

அதில் மாறுதல் விளைவிப்பதாயின் அம்மாறுதல் 1928-ம் வருஷம் காங்கிரஸ் செய்த முடிவையும், நேரு அறிக்கையில் கண்ட முடிவையும் ஒத்ததாயிருக்கவேண்டும். எத்தகைய தேசியப் பிரதிநிதித்துவ முறையும் ஏற்படு முன்னர் தனித்தொகுதி முறை அடியோடு ரத்து செய்யப்பட வேண்டியது அவசியமாகும். 1931-ம் ஆண்டு காங்கிரசால் வெளியிடப்பட்டதும், காந்திஜியால் வட்டமேஜை மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டதும், நாடு முழுதுமுள்ள தேசிய முஸ்லீம்களால் ஆதரிக்கப்பட்டதுமான திட்டத்தை இக்கட்சி ஆதரித்துவரும்.

வகுப்புத் தீர்ப்பு வெள்ளைக் காகிதத் திட்டத்தின் ஒரு பாகம் என்ற முறையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஆலோசனைக்கு வருகையில் அதிலுள்ள ஆட்சேபகரமான பாகங்களை அப்பார்லிமெண்டு நீக்குமாறு செய்ய இக்கட்சி, தக்க சந்தர்ப்பத்தில் தனக்கு உசிதமாகத் தோன்றும் நடிவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்.

சட்டங்களின் மூலம் மத விஷயங்களில் தலையிடுவதை இக்கட்சி அங்கீகரிக்கவில்லை.

திரு. ஆனேக்கு காந்தி கோரிக்கை

ஆகஸ்டு 11-ந்௨ யிலிருந்து, 14-ந்௨ வரை வார்தாவில் தமதருகில் இருந்து வருமாறு மகாத்மாஜி திரு. ஆனேயைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்.

ஜப்பான் பெண்கள் தீவிர முன்னேற்றம்

"சிறந்த மனைவியராய், அறிவுள்ள தாயாராய் விளங்குகிறார்கள்"

ஜப்பான் தேசத்துப் பெண்கள் உயர்வான சிருஷ்டியே யாவார்கள். பிறப்பிலேயே சிக்கலானவும் காடு முரடானவுமான விஷயங்களை எளிதாக முடிக்கும் தன்மையர். மற்ற ஐரோப்பிய அமெரிக நாடுகளில் உள்ள வனிதைகளை விட ஜப்பான் மாதர்கள் நமது அனுதாபத்திற்குப் பாத்திரமானவர்களாவர். ஏனெனில் நீண்ட காலமாக முன்னேற்றமடையாது தாழ்ந்திருந்த ஜப்பான் மாதர்கள் இப்பொழுது முன்னேற்றத்திற்கு வந்திருப்பது போற்றத் தகுந்தது.

ஜப்பான் பெண்கள் முன் காலத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையும், இதற்கு மேற்பட்ட தன்மையும் கொண்டவர்களாய் விளங்கினார்கள். இவ்வுலகைப் படைத்த சூரிய தேவியின் அருளால் வந்தவர்கள் என்பதே இவர்களின் கருத்து. ஜப்பான் ராணி ஜிங்கோ கொரியாவுக்குப் படையெடுத்த பிறகு தான், ஜப்பான் பெண்கள் சமூகத்துறைகளிலும் சரி சமத்துவ நிலைமை அடைந்தனர். பௌத்த மதம் ஜப்பானுக்குள் வியாபித்த பொழுதுதான் ஜப்பான் வனிதையர்கள் சமூகத்துறையில் தாழ்வானார்கள்.

துரதிர்ஷ்டத்தின் காரணமாக அடுப்படையில் கிடக்கும்படி ஜப்பான் சட்டதிட்டத்தால் ஒடுக்கப்பட்டு ஜப்பான் பெண்கள் குடும்பப் பொறுப்பைக் கவனிக்கும்படி ஆனதால் அவர்கள் பதவியின் உயர்வைக் கெடுத்தது. "டோக்குகாவா" காலத்தில் பெண்களின் நிலை இன்னும் பாதிக்கப்பட்டு அடிமையே போல் அவர்கள் கிடந்து குடும்ப பாரம் சுமக்கும் வண்டியாகக் கிடக்கச் செய்தனர்.

துரதிர்ஷ்டப் பெண்கள்

'டோக்குகாவா' காலத்திற்குப் பிறகு "மான்சைமான் சிக்காமாஸ்த்து" என்ற ஆசிரியர் ஜப்பானை ஆட்டி வைக்கும் பெரிய மாறுதல் சக்கரமாய் வந்தார். அவர் காலத்தில் பெண்கள் தாயின் தன்மைக்கும், காதலுக்கும், மணத்திற்கும் மாத்திரமே உள்ள தன்மையில் அவர்களை இருக்க வைத்து மனத்துயரோடு கிடக்கும்படி நேர்ந்தது.

இதற்குப் பிறகு க்யோ காலசாலை ஸ்தாபகர் "யுக்கிச்சி புக்குசாவா" என்பவராலும், மற்றுமுள்ள அநேகர்களாலும், பெண்களாலும் இந்தப் பரிதாப நிலைமையைப்பற்றி யோசிக்கப்பட்டது. இதோடுகூட முதலாளித்வம் என்ற தன்மையும் சேர்ந்து அதோடு இந்தப் பெண்களின் தாழ்வும் ஒழிய பாடுபட்டு அரும்பாடுபட்டும் ஒன்றும் முடியாது கடைசியில் இப்பொழுதுதான் அப்பெண்கள் சுதந்தரமடைய முடிந்தது.

பல முயற்சிகள்

இப்படியாக ஜப்பான் வனிதையர்கள் தாங்கள் தங்களுக்கு முன்னிருக்கும் பல கஷ்டங்களைத் தாண்டி தாங்கள் சுதந்தரத்துடன் கல்வி பயிலவும், மற்ற உரிமைகளை அனுபவிக்கவும், இதே போல் வைதீக வாழ்க்கையான காதல், மணம், விவாக நீக்கம், மற்றுமுள்ள பெண்கள் வேலை முதலியவைகளையும் கவனிக்கலானார்கள்.

ஆரம்ப காலத்தில் ஜப்பான் தேசப் பெண்கள் ராஜீயக் கூட்டங்கள் போடுவதும் ஒன்று சேர்வதுமாகவே இருந்தார்கள். இந்நாட்டில் நிலவியிருந்த சமாதானமானது இம்மாதிரி இப்பெண்கள் ராஜீயக் கூட்டங்கள் போடுவதைக் கூட்ட முடியாதபடி தடுத்தது. இதனால் அவர்கள் சுய ஸ்தாபனங்களுக்குக்குக் கூட தாங்கள் ஒருவரை நியமிக்கவோ அல்லது நியமித்து வாக்களிக்கவோ இயலாது போயிற்று.

பலவிதமாக முயன்றும் ஆதரவு கிடைக்கவில்லை. 1932-ல் ஏற்பட்ட பூகம்பமானது ஜப்பான் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. இந்தப் பூகம்பம் ஏற்பட்டதால் பெண்கள் அதன் நிவாரணத்திற்காக வேலை செய்ததில் அவர்களது முயற்சிப் பெரிதும் பயனளித்தது. சட்ட சபையின் சட்டமும் இவர்கள் ராஜீயக் கூட்டங்கள் நிறுவ சம்மதித்தது.

இம்மாதிரி இவர்கள் முயற்சி பயன் பெறும் சமயத்தில் சுயஸ்தல ஸ்தாபன உரிமையின் பங்கை 1931-ம் வருட காபினட் சபை உயர்ந்த சபைகளில் அதிகாரத்தை மறுத்ததானாலும், கீழ்ச் சபைகளில் உறுதி அளித்து காலத்தை மாத்திரம் நிர்ணயிக்கா திருந்தது.

இக்கஷ்டத்தை ஒழிக்க வேண்டி பல பெண்கள் உணர்ச்சிப் பெருகினவர்களாய் அங்கங்கே அநேக ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வேலை செய்தனர். இப்படித் திறமையாகவும் அழகாகவும் முன்னணியில் நின்று வேலை செய்ததில் முக்கியமானது 1924-ம் வருடத்தில் "பூயசன் காக்டோகோ டோமிய்" என்ற சபை ஆகும். "ஒச்சிமி குயூபூஷ்ரியோ" என்ற கிறிஸ்தவ அம்மை இதன் தலைவராய் நின்று ஒப்பிலா வேலை செய்தார். பிறகு மிஸ். பூயூசிஇச்சிகா என்பவர் தலைவரானார் இச்சபைக்கு.

கல்வியில் பெண்களுக்கு ஆண்களை ஒப்ப உரிமை அளிக்கப்பட்டது. ஆரம்ப மத்யக் கல்வியில் பெண்கள் ஆண்களைவிடச் சிறந்திருந்தும் உயர்தரக் கல்வியில் அவர்கள் மிகமிகக் குறைவாகவே யிருந்தனர்.

ஆரம்பக் கல்வியில் பெண்கள் ஆண்களை ஒப்பப் படித்தனர். 1932-ல் ஆண்கள் 5,392,259-ம் பெண்கள் 49,69,63 மாகவிருந்து கல்வி பயின்றனர். செகண்டரி பள்ளிக்கூடங்கள் 1932-ல் 980 வரை பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்டன. மத்தியதரப் பள்ளிக்கூடங்கள் 558. இவைகளில் 362,621-ம் 336,186 மாக மாணவிகள் கல்வி கற்றனர். பள்ளிக்கூடங்களையும் பிள்ளைகளையும் பார்க்கும் பொழுது பெண்களுக்கு ஆண்களைவிட

அதிக வசதிகள் அளிக்கப்பட் டிருந்தன.

கலாசாலைப் படிப்பு விஷயத்தில் ஆண்களுக்காக 160-ம் பெண்களுக்காக 44-ம் ஏற்படுத்தப்பட்டன. சமூகத் தேவையில் வேண்டியவைகளை அளிப்பதற்கும் அவர்களை முன்னணியில் கொண்டு வருவதற்கும் கல்வி அவசியமாதலின் அவர்களை அப்படிக் கொண்டு வரவும் பெண்கள் சரி சுதந்தரம் பெறவும், கல்வி மந்திரியும்; பாரம்பரைத் தத்துவமாய் மாதர்கள் "சிறந்த மனைவியராய்; அறிவுள்ள தாயாராய்" விளங்கவுள்ள தன்மையை அளிக்கவும்—அதனை இப்பொழுது ஜப்பான் பெண்கள் அடைந்து வருகிறார்கள். ஆண்களுக்கு நேர்மையாய் அவர்களுக்குச் சரிசமத்துவ நிலைமை பெற அவர்கள் இன்னும் போதுமானபடி பாடுபட வேண்டும்.

டால்பஸ் மனைவி

டால்பஸின் மனைவி தனது இரண்டு குழந்தைகளுடன் கத்தோலிக்க மதகுருவான போப்பைப் பார்க்க ரோமாபுரிக்குச் செல்கிறார்.

நாஸிகளின் ஏற்பாடு

நாஸிகளின் புரட்சி வெற்றிகரமாக முடியுமாயின் கீழ்க்கண்டவர்களுக்கு கீழ்க்கண்ட பதவிகள் அளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்ததாய் ஒரு செய்தி கிடைத்துளது: நாஸிகளின் தலைவரான டாக்டர் ரின்டிலினுக்கு சான்ஸலர் பதவியும், ஹிட்லரின் அந்தரங்க நண்பரும், "ஆஸ்டிரியா இன்ஸ்பெக்டரு"மான ஹெர் ஹரிச் என்பவருக்கு உபசான்ஸலர் பதவியும், ஹெர்விங்லிவெருக்கு விவசாயமந்திரிபதவியும், டாக்டர் அபோல்டுக்கு வர்த்தக மந்திரி பதவியும் கொடுக்கப்படுமென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மதிப்புரை.

"கதிர்காமத் திருப்புகழ்"

கொழும்பு, ஜிந்துப் பிட்டித் தெருவிலிருக்கும் இந்துகலாபிவிருத்திச் சங்கத்தார், ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த திருப்புகழ்களில் கதிர்காமத்தைப் பற்றியுள்ளவற்றை மட்டிலும் திரட்டி "கதிர்காமத் திருப்புகழ்" என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள். தபாற் செலவுக்காக அரை அணா ஸ்டாம்பு அனுப்புபவர்கட்கு அதில் ஒரு பிரதி இலவசமாக அனுப்பப்படும்



புதிதாய் ஹோம் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கும் ராவ்பகதூர் A. T. பன்னீர்செல்வம் அவர்கட்கு, எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் தகுந்த வரவேற்புக் கொடுக்கப்பட்டது. படத்தில் ராவ்பகதூர் A. T. பன்னீர்செல்வம் ஜரிகை மாலையுடன் நடுவில் காணப்படுகிறார்.

—P.P.B.



ரயில் அடியில் தற்கொலை

"கபாலி"

இரவு மணி பதினொன்று. அமாவாசைக்கு ஒரு நாள்தான் இருந்தது; ஆதலால் எங்கும் கரிய இருள் மூடியிருந்தது ஆச்சரியமல்ல. ஆகாயத்தில் மல்லிகைச் செடி மலர் நிறைந்தாற்போல, கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. நேரம் அகாலமாகி விட்டதால் ஒருவரும் சுற்றுப் பக்கங்களில் காணப்படவில்லை. எங்கெங்கோ நாய்கள் ஊளையிட்டனபோதும்: ஓசை மெல்லிய தொனியில் வாயு மண்டலத்தில் துளைத்துக் கொண்டிருந்தது. ஆந்தை, கோட்டான் முதலிய பறவைகள் இரவில் உலாவும் என்பார்கள் பிராணி நூல் அறிஞர்; ஆனல் அன்று எந்தவிதமான பறவையும் காணப்படவில்லை. காற்றும் அன்று வீசக் கண்டிலேன். ஆதலால் ஆங்காங்கு ஒன்றிரண்டாய் நின்று கொண்டிருந்த பனை, கள்ளிச்செடி, கருவேல், ஆலமரம் முதலியவை சற்றும் அசைய நினைத்தில.

இத்தகைய இருளில் நான் பெருமாள்புரத்திலிருந்து புறப்பட்டுத் தனியாக கையிலேந்திய ஒரு "வாக்கிங் ஸ்டிக் கோடும்" "சர்ச் லைட்" ஒன்றேடும் பாளையங் கோட்டையின் கீழ்ப்புற மிருக்கும் காட்டுக்குள் வந்து கொண்டிருந்தேன். அந்தப் பகுதிகளில் பிசாசுகள் அதிகம் என்று கூறுவார்கள். எனக்கு, பிசாசென்றால் பலர் என்னதென்று தெரியாதிருப்பதால் ஒன்றை நேரில் பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை மிகுந்திருந்தது. எனவே எதையும் பொருட்படுத்தாது நடந்துகொண்டிருந்தேன். சற்றுநேரம் நடந்ததும், (பாளையங்கோட்டை ஊரின் இரண்டு மைல் கிழக்காக) ரயில் தண்டவாளத்தில் ஏதோ ஒரு மிருகம் நகர்ந்து போவதாகத் தெரிந்தது. அதன் தோற்றம் இருண்டும் உருண்டையாகவுமிருந்ததால் நான் ஆச்சரியப்பட்டு "இவ்வளவு அகாலத்தில் ஒன்றுமில்லாத இக்காட்டில் என்ன வந்திருக்கக் கூடும்" என்று எனக்குள் புலம்பிக் கொண்டு விரைந்து அப்பிராணியை நோக்கி ஓடினேன். அது என்னைக் கண்டதும் தண்டவாளத்துக்குள் பதுங்கத் தொடங்கியது. எனவே ஆசை தலையெடுக்க, ஓடிச்சென்று அதனை நெருங்கினேன். என்ன ஆச்சரியம்! அது ஓர் பிராணியல்ல. ஒரு வாலிபனே அங்கு நகர்ந்து கொண்டிருந்தான். அவன் முடவன். அவனது தோற்றத்தை "சர்ச் லைட்" வெளிச்சத்தில் பார்க்கப் பயமாயிருந்தது. அவனுக்குக் காதுகளில் ஒன்றில்லை. மூக்குப் பழுதுபட்டிருந்தது; நெற்றியில் காயம். ஒரு கை ஒடிந்தது. மொத்தத்தில் பரமவிகாரமாக விருந்தான். அவனுக்கு வயது 25-க்கு மேலிராது. நல்ல ஆரோக்கியமானவனே; ஆனல் கொஞ்சம் வாடிக் கருத்து இருந்தான்.

நான் அவனைக் கண்டதும் "என் தம்பி! இப்படி இரவில் நடுச்சாமத்தில் ரயில் தண்டவாளத்தில் வந்து இருக்கிறாய்?" என்றேன். அவன் குழம்பினான். நான் பன்முறை பல வழிகளில் வற்புறுத்திக் கேட்டேன். கடைசியில் —என்மீது நம்பிக்கை கொண்டான் போலிருக்கிறது. "தற்கொலை செய்து கொள்ள வந்திருக்கின்றேன்" னென்றான். நான் திடுக்கிட்டு "ஏன் என்ன உனக்கு வருத்தம்? கைகால் இல்லாததினலா? உன்னைப் பாதுகாக்க யாரேனும் இல்லாததினலா? ஏன் தற்கொலை செய்யப் போகிறாய்?" என்றேன். அவன் நெடுநேரம் பதில் சொல்லாது ஏதேதோ யோசித்துவிட்டு அப்பால் —கடைசியில்— "என் துக்கத்திற்கும், அலங்கோலத்திற்கும், தற்கொலைக்கும் இதுதான் காரணம். (என்று கூறிக் கொண்டே இரு கடிதங்களைத் தந்தான். பின்) இதனை வாசித்துப் பார்த்தால் நான் வாழவேண்டுமா சாகவேண்டுமா வென்பது தெரியும். என் பெயர்தான்

ராமானுஜம்....நீளமாக இருக்கும் கடிதத்தை நான் எழுதினேன். மற்றப்படி சிறிதா யிருக்கும் கடிதம் அதற்குப் பதிலாகக் கிடைத்தது. அவற்றைப் படித்துப் பாருங்கள். எனக்கு நடந்த விஷயங்களைக் கூறும்போதே மனம் வேகுகின்றது" என்றான். நான் கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். முதல் கடிதமாவது :—

என் ஆருயிர் ஜனகம்!


இனிமேல் பொறுக்க முடியாதென்ற நிலைமையில் இக்கடிதத்தை விடுக்கின்றேன். நான் கடிதம் விடுப்பதால் அபாயம் விளையுமென்று எண்ணி எண்ணித்தான் இத்தனை நாளும்வாளாவிருந்தேன். ஆனால் இப்போது உன்னுறவை நீத்து அரைக்கணமும் உயிர்வாழ முடியாது என்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. அந்த நிலையில் ஒரு கடிதத்தை எழுதி என் உள்ளம் நிறைந்துபாயும் ஆசையை வெளிப்படுத்திக்கொண்டு என் மாயலாகாது என்று நினைக்கின்றேன். எவ்வழியிலும் சாகப்போகும் ஒருவன் ஒரு கடிதத்தால் வரும் தொல்லையை என் பொறுத்துக் கொள்ள முடியாது?

ஜனகம்! இந் நிருபத்தால் எத்தீமை வரினும் வரட்டும்; உன் சகோதரன் ஒருகால் இதனைப்பெற்றுக் கோபாக்கினியாகி என்மேல் விழுந்தாலும் விழலாம்; நான் மனமுவந்து உன் அருமைச் சகோதரனுகிய ஒருவர் கையில் உனக்காக எக்கணமும் உயிரிழக்கத் தயார்! அவர் இங்கு எழுந்தவரின் நான்—உறுதியாகக் கூறுகின்றேன்.—எட்டுணையாவது எதிர்த்துநிற்கப் போவதில்லை. எதிர்த்துநிற்க என்னிடம் வலிமைதான் எங்கிருக்கிறது? அவரைக் கண்டதும் மெதுவாக நான் அவர் முன் னேர்ந்து சென்று, கையிலூன்றிய கோலுடன் எழுந்து நின்று, பணிந்து என் கிழிந்துபோன முதுகைக் காண்பித்து 'என்னை அடிக்கலாம், கொல்லலாம்' என்று கேட்டுக்கொள்வேன். என் ஜனகம்! மனிதத் தன்மையுடையவனாக இருந்தால் எந்த மனிதனும் என்னைக் கண்டு அடிக்கவருவானா? ஐயோ! எவ்வளவு திடகாத்திரமாக அழகாக இருந்தேன் நான்! இன்று எவ்வாறு கெட்டுப்போய் விட்டேன்!—என்கண்ணே! ஒருகால் உன்கேருக்கு உன் சகோதரன் வெருண்டு எழுந்து வந்தால்—என் தண்ணளியே! நீ இந்தக் காகிதத்திற்கு "நானன்று காரணம்; எல்லாம் அந்த ராமானுஜனே அறிவான்; யாராவ தெழுதினால் அதற்கு நான் எவ்வாறு பாத்தியப்படுவேன்" என்று கூறிவிடு.

நல்லவேளையாக நான் நவின்றது போலன்றி இங்கிருப்பம் உன்னையே அடைந்துவிடின் என் ஆசை ஜனகம்! நீ என்ன செய்யவேண்டுமென்று நான் சொல்லவா வேண்டும்? என் வாழ்வும் தாழ்வும் உன் ஒரு வார்த்தையில்—இப்போது ஒரு எழுத்திலிருக்கின்றது என்பதை உணர். நான் நீதிமன்றம் நாடித் தண்டனையை எதிர்பார்த்து நிற்கும் ஒரு குற்றவாளியும், நீ தீர்ப்புக் கூறும் ஒரு நீதிபதியுமாவாய். இரக்கம் வைத்துச் சும்மா விட்டிருக்கின்றேன் என்றால் பிழைத்தேன்; இன்றேல் மரண தண்டனையே யென்றால் உயிர் துறப்பேன். இவ்வளவு பொறுப்புடைய நீ என்செய்ய வேண்டுமென்று நான் கூறவேண்டுமோ?

இன்று நீ உன் சகோதரன் வீட்டுக்குச் சென்றுவிட்டதால் என் மனப்பான்மையை அறியாய்; என்னை மறந்திருப்பாய்; என் கெஞ்சல் வார்த்தைகளைக் கேளாது போய்விட்டாய். ஆனால் அந்நாள் நீ களக்காட்டில், மேலவீதியில், தர்மலிங்கம் வீட்டில், களித்து, மகிழ்ந்து, ஓடி, ஆடி, பாடி, கூடி, வாழ்ந்ததனையே; அந்நாள் நான் எவ்வாறு திணறித் திணறி கலங்கிக் கலங்கி அல்லும்பகலும் கொல்லைக்கேணி (கிணறு) யையும் மச்சு ஜன்னலையும் பார்த்துக் கொண்டு பித்தன்போல் அலைந்து கொண்டிருந்தே னென்பதைத் தெரி.

என்னிருதயத் தேனே! உனக்காக நான் என்ன பாடுபட்டேன்? என்னென்ன இழந்தேன் என்று கூறவும் வேண்டுமோ? ஒருநாள் நீ உன் வீட்டுச் சமையற்கட்டில் நின்று அடுப்படியில் வேலை செய்துகொண்டிருந்ததும் அப்போது நான் சுற்றுமுற்றும் பார்த்து, ஒருவருமில்லா திருப்பதைக் கண்டு, ஜன்னலோரமாக வந்து, எட்டிப் பார்த்ததும் நீ "யாரது" என்று கேட்டுக்கொண்டு, விறகுக் குச்சியினால் குத்தியதும் ஞாபகமிருக்குமே! என் கிளியே! அக்குத்து என்ன செய்ததென்று தெரியுமா? ஆ! உழக்கு இரத்தத்தைக் குடித்துக்கொண்டு என் மேலுதட்டில் தாக்க உதடு இரண்டாய்க் கிழிந்துவிட்டது. அதனைக் குணப்படுத்த, ஒன்றரை வாரம் மூன்று மணிநேரம் ஆஸ்பத்திரியிலிருந்தேன்! எனினும் உன்னை மறந்தேனே; உன் செயலை யாரிடமேனும்



"உன்னை நோக்கிக்கொண்டே ரோட்டில் நடந்து போன காரணத்தால் எதிரே சைக்கிலில் வந்த முருகன் என் மீது வண்டியை மோத, நான் அடியிலும் அவன் மேலுமாக விழுந்தோம்."

கூறினேனா? உன் திருக்கரத்தால் கிடைத்தது பெரும் செல்வமென்றன்றோ மதித்துக் கொண்டேன்?

மற்றொரு நாள், என் கோமளம்! நீ மச்சில் (மேன்மாடியில்) நின்று கொண்டிருந்த போது, நான்ரோடை நோக்கி நடப்பதற்குப் பதிலாக, உன்னை நோக்கிக் கொண்டே ரோடில் நடந்து போன காரணத்தால் எதிரே சைகிளில் வந்து கொண்டிருந்த முருகன் என் மீது வண்டியை மோத நானடியிலும் அவன் மேலுமாக விழுந்து அரை மணி நேரம் புரண்டு எழுந்தோமன்றோ? நீ கூட அதனைக் கண்டு சிரித்தாயே! அன்று என்ன ஏற்பட்டது தெரியுமா? சைகிளின் கிராங்கு என் காதொன்றைச் சுற்றி நன்றாக அரைத்து விட சுமார் அரைப்படி இரத்தமும் அக் காதும் நஷ்டமாயிற்று!

அதன்மேல் ஒருநாள் என் கிளியே! நான் என் வீட்டு வாசலில் "என் காதுபோனதற்கு முருகனும் காரணமல்ல; நானும் காரணமல்ல! கனகத்தின் கண்விழிதான் காரணம்" என்று கழறிக் கொண்டிருந்தேன் உன் காதல் மிகுதியால். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த உன் மாமன் சுந்தா மூர்த்தி கோபத்தாலெழுந்து "அடே! வீட்டில் ருதுவாகி இருக்கும ஒரு பெண்ணைப் பற்றி இப்படிக் கூறலாமா?" என்று சொல்லிக் கொண்டு என் கிராப்பைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளி நன்றாக இழுத்துப் புண் படுத்திவிட்டான். ஆதலால் என் முதுகில் முக்காலே அரைக்கால் பாகம் போயிற்று. அதற்காகக் கண்மணி! சுமார் 50 ரூபாய் வரையிலும் செலவாயிற்று; சிலநாள் வைத்தியர் மேற்பார்வையிலுமிருந்தேன். எனினும் என் கோகிலா! உன்னை மறக்க முடியவில்லையே!

மற்றொருமுறை உனக்கு என் காதலைத் தெரிவித்து விடுவதாக நினைத்துக் கொண்டு, விரிவாகக் கடிதம் ஒன்றை எழுதினேன். எழுதிய பின் உன்கையில் சேர்ப்பிக்க உன்வீட்டை நாடிவந்தேன். அப்போது நீ மேன்மாடியில் சேலையை உலர்த்திக் கொண்டு நின்றாய். ஆதலால் உன் பக்கத்தில் கடிதத்தைப் போட்டு விடக் கருதி ஒரு கல்லையெடுத்து அதில் அதனைச் சுற்றி எறிந்தேன்! ஆ! கெட்டகாலம்! கல்சுவரில் மோதிக்கீழே விரைவாகப் பாய்ந்துவர, உன்னையே பார்த்துக் கொண்டிருந்த வணங்கிய என் மூக்கிலும் நெற்றியிலும் விழுந்து கீறி விட்டது. இரத்த நஷ்டத்தாலும் அடிபட்ட உக்ரத்தாலும் நான் மூர்ச்சித்து விட்டேன். அப்பால் பல நாள் சிகிச்சிக்கப்பட்ட பின்னரே சுவாதீனமடைந்தேன். ஆசை ஜனகம்! இத்தனையும் உன் மீது வைத்த காதலால் ஏற்பட்டனவன்றோ?

மற்றொரு நாள், நீ கொல்லையில் கேணியோரம் நின்று கொண்டிருந்தபோது எப்படியாவது நெருங்கி என் அபிலாஷையைத் தெரிவித்துவிட வேண்டுமென்று சுவரேறிக் குதித்தேன். கெட்ட காலம்! பழைய குட்டிச் சுவரா யிருந்ததால் அது இடிந்து விழ நான் ஒரு கையை ஒடித்துக் கொண்டேன். தலையிலும் அடிபட்டது. அதே போது விழுந்த சத்தத்தால் வெருண்ட எருது ஒன்று—உன் வீட்டில் நின்ற மயிலை மாடு—சீறிவந்து என்மீது பாய்ந்தது. அதனாலும் துன்புற்றேன். இந்த சாகசத்தில் நானிழந்தவை ஒரு கையும் முதுகில் சில தசைகளும் தலையில் ஒரு பகுதியுமாம்.

இங்ஙனமெல்லாம் என் பூந்தேனே! உன்னால் நான் அடைந்த இடுக்கண்கள் கோடி கோடி. அப்பால் நீ ஸ்ரீவைகுண்டம் சென்று விட்ட பிறகு, நான் பாளையம் கோட்டைக்கு வந்து நிம்மதியாகக் காலந்தள்ள நினைத்தேன். முடியவில்லை. காதலின் வேகம் பேயாய்ப் பிடித்து அலைத்தது. ஆதலால் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தேயலானேன்.

அப்படியிருக்க இற்றைக்கு 45 நாட்களுக்கு முன், நான் என் வீட்டு மேன்மாடியில் உலாவிக்கொண் டிருந்த போது, ரோடில் ஓர் பெண் போனாள். அவளைப் பார்த்தால் எந்தக் குருடனும் நீதான் என்று நிச்சயமாகக் கூறி விடுவான். எனவே காதல் தலைக்கேற நான் அங்கிருந்து குதித்துவிட்டேன். அதன் பயன் என்ன? என் காலொன்று இரண்டாயிற்று.

என் பூங்கொம்பே! இத்தனை பாடு பட்டதும் உன் மீது வைத்த காதலாலன்றோ? என்னைத் தவிர வேறு யாவனாயினும் காதலுக்காக இவ்வாறு பாடுபடுவானா? அந்தோ! என் காதலை நிரூபிக்க வேறென்ன சான்று வேண்டும்? இந்நிலைமையில் நீ என்னை அனுக்கிரகிக்காதிருந்தால் காதலின் வலிமையை மதிக்கவில்லை யென்றே நினைப்பேன்; என் அன்பே! கல் விக்ரகத்தின் முன் இத்தனை காலம் தவமிருந்தால் கூடவும்



ராமானுஜம் வழியில் போகும் பெண் தன் காதலி யென்று நினைத்து, மேன் மாடியிலிருந்து குதித்துவிட்டான்.

சாக்ஷாத் உருவம் காண்பித்து விடும். எனவே இத்தடவை என்னை மறுக்க மாட்டாயென்று நம்புகின்றேன். எப்படியும் என் உயிர் உன் கையிலிருக்கிறதென்று நினைத்து அருள் செய்வாயாக! நீ மறுத்தால் எனக்கு மாணதண்டனை விதித்தற் கொப்பாகு மென்று தெரிந்து கொள்வாய்!

காதலை நிரூபித்துக்
கைகாலிழந்த ராமனுஜம்.

என்று படித்து விட்டு, இக்கடிதத்திற்குப் பதிலாகிய மற்ற நிருபத்தைப் படித்தேன். அதில் வருமாறு இருந்தது:—

ஸ்ரீ வைகுண்டம்
7-3-32

நண்பரே,

நலம் வேண்டும். தங்கள் கடிதம் கிடைத்தது. நல்ல வேளையாக என் சகோதரர் காணவில்லை. கடிதத்தில் நீங்கள் என் மீது காதல் வைத்துப் பட்டபாடு மிக மிக ரசம். இப்படியொரு பாமரியாகி என்னைக் காதலிக்க நேர்ந்ததை நினைக்க நினைக்க என் மனம் எப்படியோ ஒருவிதமான உருவமடைகிறது. சுமார் ஒன்றரை வருடக் காதற் பிரகடனத்தில், கை, கால், நெற்றி, முதுகு காது ஆகிய ஒரு பெரிய ஜாபிதாவை நஷ்டப்பட்டுக் கடைசியில் உயிரோ தத்தளித்துக் கொண்டிருக்கவேண்டிய நிலைமையில் ஆஸ்பத்திரியை விட்டு வெளி வந்தீர்களென்று காணக்கான இரக்கமே கொள்கின்றேன். இவ்வளவு தூரம் பாடுபட்ட உங்கட்கு "சாக்ஷாத் உருவம்" காட்ட வேண்டுவதுதான். ஆனால் ஒரு உயிருள்ள பந்து போல் மட்டிலுமிருக்கும்—அதாவது அவயவங்களொன்றுமில்லாமலிருக்கும்—தங்களை எப்படிக் கட்டிக் கொண்டு அழுகிறதென்பது தெரியவில்லை. நானும் கடைசியில் காதலுக்காக நீங்கள் பட்டபாட்டைப் போல் பாடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுமோவென்று பயப்படுகிறேன். ஆகவே என்னால் தங்களைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. தயவு செய்து என் மீதுள்ள ஆசையை விட்டுவிட்டுப் பாக்கியிருக்கும் ஒரு கை, ஒரு கால், ஒரு செவி, முக்கால் மூக்கு, முக்காலே மூன்று வீசம் தலை, அரைக்கால் முதுகு முதலியவற்றைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதற்கு மாறாக இன்னும் ஆசை வைத்துக் கொண்டிருந்தீர்களானால் வீணாக முழுதும் நஷ்டப்பட வேண்டிவரும்; எச்சரிக்கை—இதனை நீர் "கடவுள் போல் போற்றும்" ஒருவர் எழுதுவதாக வைத்துக் கொள்ள வேண்டும். பெண்ணாக இருந்து கொண்டு நான் இக்கடிதத்தை எழுதியது நீங்கள் பட்ட பாட்டை நினைத்துத் தான்—ஆதலால் இக்கடிதத்தையும் கண்டு கூத்தாடி கண்ணைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது.

இங்ஙனம்
தங்கள் எஞ்சிய உறுப்புகளைப்
பேண நினைக்கும் கனகம்.

இவ்விரு கடிதங்களையும் படித்துப் பார்த்ததும் எனக்கு வந்த நகைப்பிற்கு அளவில்லை. இருளில் தனியாக வழி நடந்ததற்கு ஒரு நல்ல பொழுது போக்குக் கிடைத்துவிட்டதே யென்று எனக்குள் நினைத்து நினைத்துச் சிரித்தேன். அப்பால் காதல் வீரனைப் பார்த்து, "தம்பி! நன்றாயிருக்கிறது உன் காதல். போதும் தற்கொலை செய்ய முயல்வது. ஏதோ வழியில் போகிற பெண்ணைப் பார்த்துக் கையையும் காலையும் தொலைத்துவிட்டு, அப்பால் உயிரையும் காலிசெய்யப் போகிறேனென்கின்றாயே. வா எழுந்திரு!" என்றேன். இச்சொல் அவனுக்கு அவமானமாகிவிட்டது. சற்று நேரத்திற்குப் பின் வெகுவாக யோசித்துக்கொண்டு என்னோடு தத்தித்தத்தி நடந்து வந்தான். அவன் வாய் என்னமோ அடைத்துக் கொண்டது. சுமார் அரைமணி நேரத்தில் நாங்கள் பாளையங்கோட்டையை நெருங்கினோம். அப்போது கெட்டகாலம்! திருநெல்வேலி—திருச்செந்தூர் ரயில் விரைந்துவந்தது. அதனைக் கண்டதும் நான் நீங்கினேன். பாவி! முடக் காதலன் ஓடிப்போய் தண்டவாளத்தில் விழுந்துவிட்டான். முடிந்தது அவன் கதை. வண்டியோட்டி முதலியவர்கட்கு விஷயம் தெரியவே தெரியாது. நான் "முட்டாள் தொலைய வேண்டியதுதான்—மேலும் அங்கங்களில்லாத ஒருவனிருந்து எதற்கு?" என்று நினைத்துக் கொண்டு போய்விட்டேன்.

சுயராஜ்யம்
பிறப்புரிமை!

முற்றும் முரண்

விஷ்ணுபுரம் சிவசாமியின் சின்னத் தம்பியாகிய பெரியண்ணன், பவுன் வாங்க வைத்திருந்த வெள்ளிரூபாயைத் திருடிக்கொண்டு நெல்லூரில் ஓர் கம்பங் கொல்லையை அடைந்து தங்கலானான்.

சில நாட்களானதும், பல மாதங்களாக விருந்து வெளியூர் போக விருக்கும் பெரிய குள்ளன் என்ற ஒரு சிறுவன் நட்பாயினன். இவன் சொந்தவூர் பாவூர்; தந்தை பெயர் உள்ளூர்மியான். மதத்தால் முஸ்லிம். இருவரும் பப்ளிக் ரோடில் ஒரு இரகசியச் சந்தைப்பிடித்து நெருப்புக்குச்சுச் செய்யும் விறகு வியாபாரம் செய்தனர். கொஞ்ச நாளையில் நஷ்டம் நீங்கி லாபம் அதிகரிக்கத் தொடங்கியது. எனவே செழிப்பு ஏற்படவும் லாட்டரிகளில் சேரலானர்கள். ஒரு அதிர்ஷ்டச் சீட்டில் இருவரும் பெயர் கொடுத்ததும், கெட்டவேளையாகப் பெரியனன் சீட்டுக்கிழிந்தது. சீட்டுக்கிழிந்த அடுத்த நாள் லாட்டரிச் சீட்டுக் கிடைத்துவிட்டது. ஆதலால் பணம் யாருக்குப்போகும்? பெரியகுள்ளன் பத்துநூறையும் வாங்கினன். அதன் பின் அந்நிய ஊரில் இருக்கவேண்டுமா? சொந்தவூர் நோக்கி நடந்தான். இப்போது பாவூரில் உள்ளூர்ப் பிரமுகர் என்ற பெயரோடு இருந்து வருகிறான்.

—ராமன் (கொல்லம்).

ஆ. முத்துப்பட்டணம் ஹரிஜனப் பள்ளிக்கூடம்.

காரைக்குடி ஹரிஜன சேவாசங்கத்தின் ஆதரவில் ஆ. முத்துப்பட்டணத்தில் ஹரிஜனப் பள்ளிக்கூடம் ஒன்று நடைபெற்று வருகிறது. அதில் 20 ஹரிஜன ஆண் பெண்பிள்ளைகளும் மற்ற ஜாதிப் பிள்ளைகள் 10ம் படித்து வருகின்றனர். ஆத்தங்குடி ஸ்ரீமான் பெ. நா. மு. முத்துப்பழனியப்ப செட்டியாரவர்கள் தங்களுக்குச் சொந்தமான வோரிடத்தை பள்ளிக்கூடத்திற்கும் ஆசிரியர் குடி இருப்புக்கும் பிள்ளைகள் விளையாட்டிற்குமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

மேற்படி ஊரில் மேற்படி பள்ளிக்கூட அமைப்பிற்குப் பெரும் முயற்சி யெடுத்துக் கொண்டவர் திரு. பெ. மு. சுப்பையாச் செட்டியாரவர்களாவர். அவர்கள் தினசரிப் பாடசாலையைப் பார்வையிட்டும், இதர தனவந்தர்களை உதவி செய்யும்படிக் கேட்டும் வருகிறார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

அன்னி மேரி

அல்லது

அழகிய ஜெர்மானியர் கையாள்

[சென்ற மகா யுத்தத்தில் ஐரோப்பிய அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் எதிரிகளின் யுத்த முஸ்தீபுகளை அறிய எவ்வளவோ ஒற்றர்களை உபயோகப்படுத்தின. அவ்வொற்றர்களில் பெரும்பாலார் உலகம் வியக்கும் சுந்தரிகளாவர். சினிமா நண்பர்கள் மாதாஹரி யென்ற மலையாள மங்கையர் மணியை மனதில் நினைத்துக்கொண்டால் இதுபற்றிய விளக்கம் அதிகம் வேண்டிவராது. அன்னி மேரி லெஸ்ஸர் என்ற அழகி ஜர்மானியரால் கையாளப்பட்ட பெண்ணாவாள். அவளது தந்திரங்கள் மனதைப்பற்றி யிழுத்துப் பரவசப்படுத்தும். கீழே அவள் வரலாறும் இத்தந்திரச் செயல்களும் தரப்பட்டுள்ளன.]

இரகசிய மறிவதில் பேர்போன அன்னி மேரி லெஸ்ஸர் காலஞ்சென்று விட்டாள்! அவளிறக்கும்போது வயது நாற்பது. அவளது அந்தியகாலம் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள இருதய சிகிச்சாசாலையில் கழிந்தது.

அவளுக்கு மிகவும் அழகான உருவம், எந்தப் புருஷனும் கண்டால் மோகங்கொள்ளும் சரீர அமைப்பு, அதிகக் கனமில்லாத உடல், எந்த ஆபத்திலுமிருந்து கரையேற்றிவிடத் தகுந்த புன்சிரிப்பூறும் முகம் ஆகியவை விசேஷமாக அமைந்திருந்தன. ஆதலால் பற்பல ஆபத்துகளி லிருந்து எளிதில் தப்பிவிட முடிந்தது.

அவளுக்கிருந்த தைரியம் நினைக்க நினைக்க ஆச்சரியத்தை விளைவிக்கும். அதனை, அவள் கையேற்ற முதல் வேலையிலேயே நன்றாகக் காணலாம்.

முதன் முதலில் அவளை ஜெர்மன் சர்க்கார் 1914-ம் வருடத்தில் "G. W. 14" என்ற பெயரோடு பதிவு செய்துகொண்டு, லூட்டிச் கோட்டையிலுள்ள எதிர்ப்பு முறை, ஆயுதபலம், துப்பாக்கி இயல்பு முதலியவற்றை இரகசியமாக அறிந்து வருமாறு அனுப்பினர். அதனை அவள் மிகத் தந்திரமாய்ச் சாதித்து விட்டாள். அக்கதையாவது:—

பிரசல்ஸ் என்ற நகரத்தில் எங்கிலேஸ் என்ற சாப்பாட்டு விடுதியில் பெல்ஜியன் உத்தியோகஸ்தர்கள் ஒரு விடுமுறை நாளைத் தமாஷாகச் செலவிட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கு ஆட்டமும் பாட்டும், குதூகலமும் சிரிப்பும், கண்ணாடிகள் ஒன்றோடொன்று மோதும் சத்தமும், சீமைச் சாராயத்தின் ஒழுக்கும் காணப்பட்டன. அத்தகைய கோலாகலத்தில் மூழ்கியிருந்தவர் பக்கத்திலுள்ள சாப்பாட்டு அறையில் ஒரு எழுதரும் பெரிய எழிலினள் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவளது தோற்றம் முதலியன பெல்ஜியம் ஆசாமிகளின் கண்வழியாகத் தலையிலேறி மதுவெறிக்கு ஊக்கமளித்தது. அத்தகைய பெண் யார்? அவள் தான் G. W. 14! அவள் நன்றாக (சுத்தமாக) பிரஞ்சு பாஷை பேசினாள். அவள் கையிலிருந்த "பாஸ்போர்ட்டில்" பிரஞ்சுப் பெண் என்று குறிப்பிடப்பட்டிருந்ததோடு "பாரிசில் பிறந்தவள்" என்றும் பொறிக்கப்பட்டிருந்தது.

அவளைக் கண்டதும் பெல்ஜியன் கோஷ்டியில் ஒருவராகிய லப்டினெண்ட் ரெனி ஆஸ்டின் என்ற உத்தியோகஸ்தர் சிறிது வெறிகொண்டு அவளைப் பார்த்தவண்ணமே அவள் மேஜையைக் கடந்து சென்றார். ஒன்றிரண்டடி அவளை விட்டு நீங்கியதும், ஒரு கண்ணாடிப் பாத்திரம் விழுந்து உடையும் சத்தத்தைக் கேட்டார். உடன் திரும்பிநோக்க, அப்பெண்ணின் மேஜையிலிருந்து ஒரு கண்ணாடிப் பாத்திரம் விழுந்து உடைந்திருப்பதையும் அதனை எடுக்க முயன்ற பெண்ணின் கையில் இரத்தம் வடிவதையும் கண்டார். உடன் திரும்பிவந்து அப்பெண்ணின் கையிலுள்ள காயத்தைத் துணியினால் கட்ட உதவி செய்து உள்ளூர மகிழ்ந்தார். சிறிது நேரத்தில் இருவரும் ஒரு மேஜையண்டை உட்கார்ந்து ரசமாகப்பேச ஆரம்பித்தனர். அப்பேச்சின் முடிவு யாதென்று வாசகர்கட்குச் சொல்லவேண்டியிராது. லப்டினெண்டு அவள் பாதார விந்தங்களில் விழுந்து காதலைத் தெரியப்படுத்தினார். அப்பால் 8 நாள் ரஜாவெடுத்துக்கொண்டு அவளைக்கோட்டைக்குள் அழைத்துச் சென்று அங்குள்ள எல்லா இரகசியங்களையும் அவளுக்குக் காண்பித்து மகிழ்ந்தார். அன்னி மேரி தம் காதலனை இன்னும் அதிகமாகச் சந்தோஷப்படுத்தி இரகசியக் கோட்டைகளையும் மருந்து சப்ளை செய்யுமிடங்களையுங்கூடப் போய் பார்க்கிறாள்.

இங்ஙனம் ஐந்து நாள் கழிந்ததும், ஆறாவது நாளையில் டச்சு எல்லைப்புறம் வழியாக இருவரும் மோட்டாரில் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது தற்செயலாக இயந்திரம் குழம்பிப்போக, ரெனிஆஸ்டின் கீழே இறங்கி மோட்டாரை ஒழுங்குசெய்ய முயன்றார். ஆம்—

அப்போது அன்னிமேரி தம் கைப்பெட்டியைத் திறக்கிறார். அதிலிருந்து ஒரு சிறிய காகிதம் வெளிப்பட்டுக் காற்றில் பறந்து செல்கின்றது! ரெனி ஆஸ்டின் தன் காதலிக்கு உதவி செய்யுமாறு அக்காகிதத்தைப் பிடிக்க ஓடுகிறார். அது சாக்கடையில் விழுகிறது. அங்கும் செல்கின்றார் ஆஸ்டின்.

"வேண்டாம் வேண்டாம். அது ஒரு காகிதத் துண்டுதான்" என்கின்றாள் அன்னமேரி நடுநடுக்கத்துடன். ஆனால் லெப்டினெண்டு பார்த்துவிடுகிறார் காகிதத்தை. அதில், தான் தன் காதலிக்குக் காண்பித்த கோட்டையின் படமிருப்பதைக் கண்டதும் வியப்புறுகின்றார். பின் அவர் "அந்தக் காகிதம் போய்விட்டது. அது தண்ணீரில் மூழ்கி யிருக்கவேண்டும்" என்கின்றார். இதன் கருத்து என்ன வென்பது அவளுக்குத் தெரியும்.

மீண்டும் மோட்டார் செல்கிறது. அழகிய மேரி காதலன் பக்கத்தில் அமைதியாக உட்கார்ந்திருக்கின்றாள். சிறிதுநேரம் போனதும் எதிராக ஓர் போலீசதிகாரி வருகின்றான். ரெனி ஆஸ்டின் திடீரெனத் தன் காரை நிறுத்திக்கொண்டு கீழே இறங்கி "இதோ இப்பக்கம்வா, இங்கேவா" என்று கத்துகின்றான். அப்போது அன்னி மெரியின் பாதங்கள் மோட்டாரின் "ஆக்ஸிலரேட்டரி"லேயே இருக்கின்றன. எனவே ஒரு உதை கொடுத்துக் காரைக் காற்றாகப் பறத்துகின்றாள். சற்று நேரத்துக்குள் பக்கத்திலிருந்த ஒரு கிராமம் வழியாக ஓடுகிறது. அவ்

வாறு உயிர்தப்பியோடும் வேகத்தில் அந்தோ மோட்டார் ஒரு மரத்தில் மோதி உடைந்து போகிறது. ஆனால், நல்ல வேளை! அவளுக்குக் காயமேற்படவில்லை; எனவே இறங்கி நடக்கிறாள். வழியில் ஓர் பெரிய கால்வாய். அதனை எட்டுணையும் பொருட்படுத்தாத அனிமேரி தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு தண்ணீரில் குதிக்கிறாள். அங்கு ஓடம் தள்ளும் ஒரு டச்சுகாரனிடம், "அப்பா என்னை டச்சு எல்லைப்புறம் வழியாகக் கொண்டுபோனால் உனக்கு மூவாயிரம் பிராங்குகள் இனும்" என்கின்றாள். அவன் அவ்வாறே செய்கின்றான். கடைசியாக G. W. 14 தப்பி விடுகிறாள்.

அப்பால் சில நாட்கள் செல்கின்றன. அனிமேரி பேர்லின் நகரிலிருக்கிறாள். ஆனால், அவளது வளம் பொருந்திய மூளையைவிட்டு அவள் இழந்துவிட்ட "பிளான்" (படம்) போகவில்லை.

சில நாட்களுக்குள் ஜெனரல் எம்மிச் என்பவர் திடீரென லூட்டிச் கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக் கொள்கின்றார்.

இது அனிமேரி காண்பித்த பெரும் வெற்றியில் ஒன்று. இதுபோல் பற்பல சாகசங்களை அவள் இயற்றி இருக்கின்றாள். அவை யாவும் இருதயம் துடிப்பவைகளாகவும், மிகத் தைரியம் வாய்ந்தவைகளாகவுமே இருக்கும்.

ஒரு தடவை அவள் போர்க்களத்தில் புகுந்து—பிரஞ்சு இயந்திரத் துப்பாக்கிகள் முழங்கிக்கொண் டிருக்கும்போது—(பின்னடி வந்து)—பிரஞ்சு சேனையை நெருங்கினாள். அங்குள்ள ஒற்றர் குழாம் அவளைக் கைதுசெய்ய முயன்றது. ஆனால் கூடவில்லை. ஒரு தடவை அவள் பாரிஸ் நகரையே அடைந்துவிடுகின்றாள்.

பிரெஞ்சுக்காரர்கள் அவளை "மில்லி டாக்டர்" என்று அழைத்தார்கள். பலருக்கு அவளை நினைக்கவே பயம்; கலக்கம்!

1918-ல் ஜர்மானியர் கடைசி முறையாகத் தாக்கப்பட்டார்கள். அதுகாலை அவர்கட்கு எதிரிகளின் வலிமை என்னவென்பதே தெரியாது. ஆகையால் இரகசியமாய்த் தப்ப பல வழிகளில் முயன்றார்கள். கடைசியில் G. W. 14 தான் ஏற்றவள் என்று தெரிந்தது.

ஆதலால் ஒரு ஜர்மன் நீர் மூழ்கிக் கப்பல் அவளைக் கடலுக்குள்ளாகச் சுமந்துசென்று பாசெலோனவில் விட்டது. அங்கிருந்து அவள் ஓர் தென்னமெரிக்கப் பெண் போல நடித்துக்கொண்டு பிரஞ்சு யுத்தப் பகுதிகட்குச் சென்றாள். அங்கு, தான் ஒரு சமாதான மங்கையென்றும் பரோபகாரம் செய்வதற்காக வந்தவளென்றும் கூறினாள். சில நாட்களில் அவளை நன்கு நம்பி, ஸ்பானிஷ் தொண்டர் தூதுக்கோஷ்டி முழுவதையும் ஒப்படைத்து விட்டார்கள். மேரி அவற்றுடன் தொண்டுசெய்து, தொண்டுசெய்து மெதுவாக பிரஞ்சுக்கோஷ்டிக்குச் சென்றாள். அவர்களும் நம்பிவிட்டார்கள்.

பலநாட்கள் அவ்வாறு வேலைசெய்து கொண்டிருந்ததும், ஒருநாள் அவள் ஒரு பிரஞ்சு பாதுகாப்பு விடுதிக்குப்போக நேரிட்டது. அங்கு அவளால் உதவி செய்யப்பட்ட பலரில் ஒருவன் ஒரு சேனை உத்தியோகஸ்தன். வெட்டுண்டு மயங்கிக்கிடந்த அவன் மூர்ச்சை தெளிந்து கண்விழித்ததும் தன் பக்கத்தில் "மில்லி டாக்டர்" நிற்பதைக்கண்டு வியந்து "ஐயோ ஜர்மன் தூதுப்பெண்" என்று கத்தினான். அப்படிக் கத்தினவன் யார் தெரியுமா? அவன்தான் ரெனி ஆஸ்டின்!

இவ்வாறு அவள் கண்டுபிடிக்கப்பட்டதும் மேரி கலங்கிவிடவில்லை. தைரியமென்னும் துணைவனோடு பக்கத்தில் கிடந்த ஒரு பிரஞ்சு உத்தியோகஸ்தனின் கோட்டை எடுத்துப்போட்டுக் கொண்டு எவ்வளவு துரிதமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகப் பக்கத்திலிருந்த காட்டுக்குள் ஓடி விட்டாள்.

ஓடினால் எதிரிகள் சும்மா விடுவார்களா? துப்பாக்கிகளும் இயந்திரப் பிரங்கிகளும் வாயு மண்டலத்தைத் துளைத்துக் கொண்டு பாய்ந்தன. அவளைச் சுற்றி மழைபோல் குண்டுகள் வீழ்ந்துகொண்டிருந்தன. அவள் எதற்கும் அஞ்சாது யுத்தகளத்திலேயே நடந்தாள். சற்றுத் தூரம் போனதும், என்ன விசேஷம்! இரு பிரஞ்சுப் படைவீரர்கள் துப்பாக்கிகளுடன் அவளை நோக்கி வந்தனர். வந்தால் நடுங்குவாளா மேரி? அவள் மெதுவாக—தைரியமாக—தீரமாக--பக்கத்தில் நின்ற மரத்தண்டை பதுங்கினாள். சிறிது நேரத்தில் வீரர்கள் பக்கத்தில் வந்தனர். உடன் எடுத்தாள் தன் ரிவால்வரை. சுட்டாள் இருவரையும். இருவரும் தூண்போல் ஒடிந்து வீழ்ந்து இறந்தனர்.

அப்பால் மேரி என்செய்திருப்பாள்? காற்றினும் கடிது விரைந்து பறந்தாள். பல மரங்களை, பொட்டல்களை, காடுகளை, கால்வாய்களைக் கடந்து போயினள். இறுதியில் ஒருகாட்டை அண்மியதும் படைவீரன் ஒருவன் "நில் யாரது; நில்" என்று கூறும் சத்தம் காதில் விழுந்தது. உடன் திரும்பிப் பார்த்தாள். ஒரு ஜெர்மன் வீரன் அவளைப் பார்த்துத் துப்பாக்கியை நீட்டிக்கொண்டு கோபத்தோடு நின்று கொண்டிருந்தான். உடன் மேரி தன் குல்லாயை அகற்றினாள். அவளது நீண்ட-கரிய-குழல் கீழே சுருண்டு நீண்டு விழுந்தது. உடன் வீரன் திகிலடைய, மேரி "கடவுள் காப்பாற்றுவாராக! என்னை உடன் சமீபத்திலிருக்கும் ஒரு ஜெர்மன் உத்யோகஸ்தர் விடுதிக்கு அழைத்துப் போ" என்றாள்.

இரண்டு மணி நேரம் சென்றதும் ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் தங்கட்கு அபஜயம் ஏற்பட்டு விட்டது என்று தெரிந்து கொண்டார்கள். அப்போது G. W. 14 கதை கூற அவர்களுடைய முகம் இரத்த சம்பந்த மற்றுத் தோன்றியது. அவள் பல ஆயிரம் பிரஞ்சுகாரர்கள் புதிதாக வந்து கொண்டிருந்தார்களென்றும் அமெரிக்கப்படை வீரர்கள் அதிகமாக உதவிக்கொண்டிருந்தார்களென்றும் பிறவும் கூறினாள். அதன் பின் சில நாளானதும் லூடன்டார்ப் சமாதானம் பேசினர். யுத்தம் முடிவுற்றது.

இவ் யுத்தத்தில் மேரி காண்பித்த அரிய உழைப்பு அவள் இரத்தக் குழாய்களையே வற்ற வைத்து விட்டது. அவள் வைத்தியச் சிகிச்சை வெகுவாகச் செய்து உடம்பைப் பாதுகாத்தாள்.

எனினும் யுத்த சமாதானம் ஏற்படு முன் மேரியின் மூளை குழம்பிப் பித்தம் அதிகரிக்கலாயிற்று.

எனவே ஸ்விட்ஜர்லாந்துக்கு அவளை அனுப்பினர்கள். அங்கு சித்தப்பிரமை அதிகரித்து உயிர்துறந்தாள் மேரி.

தீண்டாமை ஒழிக!

தொடர் கதை

கடுவழியில் காதலி

(Eesy)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

[சென்றவாரமும் அதற்கு முன் இரண்டுவாரமும் நான் தென்காசியிலிருந்து திருநெல்வேலிக்கு வருகையில் வழியில் சேர்மாதேவி ஸ்டேஷனில் என் பழைய பாடசாலை நண்பராகிய கல்லூர்க் கந்தசாமியைச் சந்தித்தேனென்றும், அவரிடமிருந்து கூனியூரில் ஓர் சீர்திருத்தத் திருமணம் நடைபெறுகின்றதென்று அறிந்தேனென்றும், அப்பால் இருவரும் சென்று திருமணத்தைச் சிறப்பித்ததில் எனக்குப் பிரசங்கம் புரியவோர் தருணம் வாய்த்ததென்றும், அப்பிரசங்கத்தில் வயப்பட்டோர் பலர் எனினும், ஒரு யௌவன விதவை—மங்கையர்க்கரசி யென்னும் பெயரினள்—அழகு வழிந்த உடம்பினள்—அருள்வழியும் கண்ணினள்—நெஞ்சை அள்ளும் தோற்றத்தாள்—என்மீது அளவிலாப்பற்றுக் காண்பித்தா ளென்றும், அதன்மேல் நான் திருமணம் நடத்திய திருமலையப்பர் வேண்டுகோட்படி ஒரு விருந்தில் கலந்துகொள்ள, மங்கையர்க்கரசி பரிமாற வந்தவர்களோடு ஒருத்தியாய்—மறைமுகமாய்—நின்று என்மீது காண்பித்த சிநேகத்தை காதலென்று மெய்ப்பித்தாளென்றும், அதனால் நான் மதிமயங்கி என் இருதயத்தில் அவளைப் பிரதிஷ்டை செய்துகொண்டே னென்றும், அவ்வாறு நீங்கா நினைவோடு இருக்கையில் எனக்கு உடல் நோயுற்றுத் தொல்லைசெய்ய, திருமணம் நடைபெற்ற வீட்டின் பக்கத்து வீட்டில் சென்று படுத்தேனென்றும், அங்கு இரத்தமாக இருமுறை வாந்தியெடுக்க மங்கையர்க்கரசி ஒரு பாட்டி, திருமலையப்பர், அவரது மனைவி கல்யாணி முதலிய பலர் வந்து அன்பாகச் சிகிச்சைசெய்ய ஒரு வழியில் உயிர்த் தப்பினேனென்றும், அதற்கறிகுறியாக நன்ருய்த் தூங்கினேனென்றும் கூறினேன். அதன் பின்]

4. விடை பெற்றுக்கொண்டேன்

மறுநாள் மணி பன்னிரண்டிருக்கும். நீண்ட தூக்கத்தின் பின்னர் கண்ணை விழித்தேன். உடம்பு கொஞ்சம் நோய் நீங்கினாற்போல் காணப்பட்டது.—ஆம். சரிதான்—நான் கண்ணை விழித்து நோக்கியதும், கூனியூரில், முந்தியநாள் படுத்த அறையிலேயே படுத்திருப்பதாகக் கண்டேன். என்னைச் சுற்றிலும், தோழர்களான கந்தசாமி, குப்புசாமி, திருமலையப்ப முதலியார் முதலிய பத்துப் பனிரண்டு பேர்கள், கவலை குடியிருந்த முகத்தோடு உட்கார்ந்திருந்தனர். அவர்கட்கு முன்னால், ஒருவர், நன்ருக உடையுடுத்திக் கண்ணாடி போட்டுக்கொண்டு, என்னையே உற்று நோக்கிக்கொண்டிருந்தார். அவரது தோற்றம். அவர் ஓர் டாக்டராக இருக்க வேண்டுமென்று என் செவிகளில் கூறியது. இத்தகைய ஆடவர்கட்குப் பின்னால் ஏதோ தழைகள், பாத்திரங்கள், "தெர்மாஸ் பிளாஸ்குகள்," "ஸ்டவ்கள்" முதலியவற்ருேடு "பாட்டி" உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர் முகமும், தம் புருஷன் 21 நாள் பட்டினி யிருப்பதைக் கேள்விப்படும் ஸ்ரீ கஸ்தூரிபாய் முகம்போன்றே இருந்தது. அப்பாட்டிக்குப் பின்னால் ஸ்ரீமதி திருமலையப்ப முதலியாரும் (கல்யாணி என்பது அவர் பெயர்) இன்னும் சில பெண்களும், அவர்கட்கிடையே மங்கையர்க்கரசியும் காணப்பட்டனர். அவ்வெல்லாப் பெண்களும் உட்கார்ந்திருந்தாலும் மங்கையர்க்கரசி மட்டிலும் நின்று கொண்டிருந்தாள். அவள் பார்வை, வானத்திலெழும்பிப்போகும் விமானத்தை நாட்டுப்புற ஜனங்கள் பார்ப்பதுபோல், கூர்மையாக, என்மீது விழுந்துகொண்டிருந்தது. நான் கண் திறந்தபோது, ஒருவரேனும் பேசிக் கொண்டிருந்ததாய்த் தோற்றவில்லை. அவர்களனைவரும் தங்கள் தங்கள் மட்டில் நான் இறந்துவிடுவேனென்று உறுதிப் படுத்திக் கொண்டு விட்டபடியால் அளவிட முடியாத கவலையுடனே உட்கார்ந்திருந்தனர். டாக்டருக்கும் மிகுந்த கவலைதான் போலும்.

மேற் குறித்தவாறு நான் கண்திறந்ததும், எல்லோரையும் ஒருமுறை பார்த்தேன். திருமலையப்பரிடம் என் கண் சென்றபோது, அவர் சட்டென எழுந்து, என்முன் பாய்ந்து, தாய் தம் அருமைக் குழவியின் கையைப்பிடிப்பது போல், என் ஒரு காத்தைப் பிடித்துக் கொண்டு, ஒரு கையினால் என் நெற்றி வியர்வையைத் துடைத்தார். அதே கணத்தில் பாட்டி ஒரு பாய்ச்சல் பாய்ந்து என்னருகில் வந்து, "என் தம்

மேனாட்டு நிலைமை



இலக்கியம், கல்வி, அடக்கம், அமைதி, நட்பு முதலியவற்றை எல்லாம் ஆங்காங்கே கட்டி, அடக்கி, அடிமைப்படுத்திப் போட்டுவிட்டு யுத்த வெறி யென்பது எழுந்து நிற்கின்றது. அது பிடித்திருக்கும் வாளில் சமாதானம் உட்காரப் பார்க்கிறது. அது எவ்வளவு தூரம் வெற்றி யடைய முடியும்?

கம்! உயிர் தந்தாயே! நீ நீடூழி வாழ்வாயாக!" என்றார். உடன் டாக்டரும் பிறரும் காலைச் சூரியனின் பொற்கிரணங்களைக் கண்ட செடி கொடிகள் போல் முகமலர்ந்து, பெருமூச்சோடு, என்னை ஒருபடி யண்மினர். டாக்டர் "நண்பர்களே! சற்றுப் பொறுங்கள்; தொந்தரவு செய்யக்கூடாது. சற்று அமைதியாக........" என்றார். பிற்பால் நான் பெண்கள் கூட்டத்தை நோக்க தோழர் கல்யாணியின் முகத்தில் சந்தோஷக் கிரணம் சுடர்விட்டுக் காய்ந்தது. இதர பெண்களும் அவ்வாறே மகிழ்ச்சி காட்டினர். ஆனால் என்னுருயிர் கொண்ட மங்கையர்க்கரசியின் திருக்கண்களிலோ—ஆம் திடீரெனக் கண்ணீர் பெருகிற்று! அதனை அவள் பிறரறியாதிருக்குமாறு சட்டென்று வீட்டுக்குள் புகுந்து கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டாள். அக்காட்சி என் கண்களிலும் கொஞ்சம் நீரைப் பிழிந்தெடுத்தது. உடன் பாட்டியை உற்று நோக்கினேன். அவர் சற்றுந் தாமதியாது, டாக்டரின் உத்தரவைப் பெற்று, "ஐயா, தண்ணீர் சாப்பிடுகிறீர்களா? என்றார். நான் ஒரு கையை முதலியார் மடியில் போட்டவாறே தலையை அசைத்தேன். அவ்வசைப்பு எனக்குக் கொஞ்சம் சிரமமாகவே தோற்றியது; ஆனாலும் என் அன்பர்கட் களித்த ஆறுதல் பெருக்கை அளவிட முடியாது. பாட்டியார் உடன் "மங்கையர்க்கரசி! மங்கையர்க்கரசி! டம்ளரைக் கொண்டுவா" வென்றார். மங்கையர்க்கரசி விரைந்து ஒரு வெள்ளித் தம்ளரைக் கொணர்ந்தாள். அதில் தண்ணீர் போன்ற எதுவோவிருந்தது. டாக்டர் அதில் வெள்ளைநிறமான ஓர் பொடியைத் தூவினார். பாட்டியார் அதனை எனக்களித்தார்; நான் பருகினேன்; அதனால் சற்று ஆறுதல்தான்; ஆனால் தூக்கம் எங்கிருந்தோ வந்து என்னை முற்றுகை போட்டு விட்டது. நான் கண்ணயர்ந்ததும் யாரோ "இனிப் பயமில்லை; நன்றாகத் தூங்கட்டும். யாராவது ஒருவரிருவர் இருந்தாற்போதும். மற்றவர்கள் சந்தோஷமாக வேலைகளைப் பார்க்கலாம்" என்ற சத்தம் காதில் விழுந்தது. அப்பால் சிற்சிலர் நடந்து செல்வதாகவும் தெரிந்து கொண்டேன்.

இரவு 8 மணிக்குக் கண் விழித்தேன். நோயில் நூற்றுக்கு 70 விகிதம் போய்விட்டதென்று கூறலாம். விளக்கு எந்நாளையும்விடப் பிரகாசமாய் ஒளிவீச, அங்கு நண்பர்கள் பலரிருந்தனர். அவர்கள் வாயில் தமாஷ்களும், வேடிக்கைகளும், கல்யாணம்பற்றிய பல வார்த்தைகளும், தடபுடல் செய்துகொண்டிருந்தன. அவற்றைக்கேட்க எனக்கு வந்த மகிழ்ச்சி மிக. ஆதலால் மெதுவாக நகர்ந்து உட்கார்ந்திருந்தேன். இதனைக் கண்டதும் அவர்கட்கு வந்த ஆநந்தத்தைச் சொல்ல முடியாது. எல்லோரும் "எழுந்திருந்து விட்டார்; எழுந்திருந்து விட்டார் கோவிந்தராஜு" என்றார்கள். நான் அவ்வார்த்தைகளைக் கேட்டதும் மெதுவாக நகைத்தேன். அந்நகை அவர்கட்கு அணியாகவே தோற்றிற்று. பிறகு "என்ன நகைக்கின்றீர்கள்?" என்று வினவினேன். நான் பேசுவதைக் கண்டதும், அதி ஆச்சரியமுற்று எல்லோரும் சந்தோஷப் பெருவாரிதியில் உல்லாசப் படகுப் போட்டி நடாத்த, பாட்டி "என்ன தம்பி! உங்கட்குப் பேசத் தெரியுமா? நீங்கள் கூட்டத்தில் பேசிய பின்னர் 24 மணி நேரமாகப் பேசவேண்டா மென்றே இருந்து விட்டீர்களே!" என்றார். அப்போது திருமலையப்பர் "அது மட்டுமா பாட்டி! அவர் பேசாததோடு நம்மையும் பேச்சிழக்கும்படிச் செய்து விடப் பார்த்தாரே" என்றார்.

நான்:—என்ன செய்தது எனக்கு?

கந்தசாமி:—உன் வயிற்றில் விஷம் (நஞ்சு) சென்றிருப்பதாக டாக்டர் கூறினார்.

குப்புசாமி:—அதற்குத்தான் மருந்தும் கொடுக்கப்பட்டது.

பாட்டி:—இல்லையப்பா! எப்படி விஷம் சென்றுவிட்டது அவர் வயிற்றில்? என்ன மாயமாயிருக்கிறது? அவர் ஒரு இடத்துக்கும் போகவுமில்லை; ஒருவரிடமும் ஒரு பண்டமும் வாங்கிச் சாப்பிடவுமில்லையே! நமது வீட்டில்தானே சாப்பிட்டார்? அந்த உணவைத்தானே நாமும் அருந்தினோம்? என்ன மாயமோ அவருக்கேற்பட்டு விட்டது? எனக்கு டாக்டர் கூறியதில் நம்பிக்கையையே இல்லை; ஆனால் இரத்தம் வாந்தியாவதைப் பார்த்தும், அவர் கொடுத்த மருந்தினால் நோய் குணமானதைப் பார்த்தும் தான் நம்பிக்கைப் பிறந்தது.

திருமலையப்பர்:—கழுதை எப்படியாவது போகட்டும். நமக்கு உயிர் கிடைத்ததே, அதுதான் 'பாக்கியம்.'

ஸ்ரீமதி கல்யாணி:—ஆம். ஆள் பிழைத்தது மறு ஜென்மமாயிற்று. விஷத்தைப் பற்றி இனி யென்ன கவலை?

ஸ்ரீமதி கல்யாணி இவ்வாறு கூறியதும் கடைக்கண்ணால் மங்கையர்க்கரசியை நோக்கினார். நானும் அவளைப் பார்த்தேன். மங்கையர்க்கரசி சட்டென்று ஏதோ விகாரப்பட்ட முகத்துடன் வீட்டுக்குள் போய்விட்டாள். பின் நெடுநேரம் வெளி வரவே யில்லை. இதன் அர்த்தமென்ன வென்பது எனக்குத் தெரியவில்லை; ஆனாலும் என் மனதில் ஒருவித சந்தேகம் உதயமாயிற்று.

* * *

மறுநாள் பொழுது புலரு முன்பு நான் குணமடைந்து விட்டேன். சற்றுச் சோர்வைத் தவிர வேறு நோயே இல்லையென்னலாம். இந்த நிலைமையில் எனக்கும் திருமணத்திற்கும் கூனியூரில் ஏற்பட்ட பெருமை ஐயோ! எவ்வளவு தெரியுமா? கூனியூரிலும் பக்கத்து ஊர்களாகிய சேர்மாதேவி, வீரநல்லூர், பத்தமடை, கருவை முதலியவற்றிலும் ஜனங்கள் பொதுவாக "நேற்று, கூனியூரில் ஒரு சீர்திருத்தக் கல்யாணம் நடைபெற்றதாம். அதில் ஒரு—கோவிந்தராஜு என்பவர் மிக நன்றாகப் பிரசங்கம் செய்தாராம். அதனால் திருஷ்டி விழுந்து அவருக்கு நோயுண்டாகி விட்டதாம்" என்று பேசிக்கொண்டார்கள். அஃதுடன் சிற்சிலர் (அதாவது சௌகரியமுடையவர்கள்) கூனியூருக்கு வந்து விஷயம் உண்மைதானா வென்று விசாரித்துக் கொண்டும் போனார்கள். ஆகவே நோயினால் கொஞ்சம் அதிகமான கலக்கமேற்பட்டதென்றாலும் கிடைத்த விளம்பரம் பெரிதாகிவிட்டது.


* * *

அதன்மேல் ஒரு நாள் அங்கு தங்கினேன். அன்று எஞ்சியிருந்த பல நண்பர்கள் தத்தம் ஊர்கட்குச் சென்றார்கள். தோழர் குப்புசாமியும், துணைவர் கந்தசாமியும் துன்பத்தில் பங்கு கொண்ட வேறு சிலரும் சொந்த ஊர் படர்ந்தார்கள். நானோ—உடல்

இளைப்பால் அன்றிருந்து விட்டு—மறு நாளே நாகர்கோவிலுக்குச் சென்றேன். செல்வது வரையிலும் ஆ! என் ஆசை மங்கையர்க்கரசியைக் காண முடியவில்லை! சிற்சில தந்திர வழிகளைப் பின்பற்றிப் பார்த்துவிட முயல எண்ணினேன்; ஆனால் தோழர் திருமலையப்பர் ஒரு கண்ணை என் மீதே வைத்துக்கொண்டிருந்ததால் முடியவில்லை. கடைசியாக ஊருக்குப் புறப்பட்ட அன்று—மாலை சுமார் 5 மணிக்குப்—பிரயாணம் சொல்லிக் கொள்வதற்காகப் பாட்டி வீட்டுக்குப் போனேன். அங்கு பாட்டியும் மங்கையர்க்கரசியும் இருந்தார்கள். நான் உட்புகுந்ததும் பாட்டி "வாருங்கள் ஐயா!" என்று கூறிக் கொண்டு நான் நோயுற்றுக் கிடந்த அறைக்குள் அழைத்துக் கொண்டு சென்றார். இருவரும் முந்திய சம்பவத்தை நினைத்து நகைத்துக் கொண்டே அங்கு சென்றோம். சென்று இரண்டு நிமிஷம் பேசினோம். பாட்டி "சற்று இருங்கள், தாம்பூலம் கொண்டு வருகிறேன்" என்று கூறிக் கொண்டு வீட்டுக்குள் செல்வார் போல் வெளியே போனார். பெரும்பாலும் அந்தப் பகுதிகளில் விடை பெற்றுக் கொள்ள வருபவருக்குத் தாம்பூலம் வழங்குவது வழக்கம். அன்று பாட்டி வீட்டில் தாம்பூலம் தட்டுப்போயிருக்கிறது. ஆகலால் வாங்குவதற்காக வெளியே சென்றிருக்கின்றார்...........

இதனைக் குறிப்பில் தெரிந்துகொண்ட நான் அவர் வருமுன்பு எப்படியும் ஒரு முறை மங்கைக்கரசியைப் பார்த்து விட வேண்டுமென்று தீர்மானித்து, மெதுவாக, வாயிலண்டை நின்று, வீட்டுக்குள் உற்று நோக்கினேன். மங்கையர்க்கரசி, பக்கத்தில், ஒரு கதவோரத்தில், இருளில், நின்றுகொண்டிருந்தாள். எனக்கு அவளைக் காணவும் வந்த நாணத்திற்குப் பிரமாணம் கூற முடியாது. என்றாலும் ஆசை மிகுதியால்—அன்பு மிகுதியால்—"மங்கையர்க்கரசி!"—ஆ! முதல்தடவை—அப்போதுதான், என் வாயினால், அத்திருநாமத்தை உச்சரித்தேன்!...........அதிலும் அந்நாமத்திற்குரிய விக்ரகத்தின் முன்னரே நான் உச்சரித்தேன்! அந்தோ! எவ்வளவு மகிழ்ந்தது என்னுள்ளம்! எவ்வளவு கிளர்ந்தது என் அகம்! எவ்வளவு குளிர்ந்தது என் இருதயம்!—நான் மனமார எண்ணி, மதியார யூகித்து, வாயார "மங்கையர்க்கரசி! நான் போய்வரவா?" என்றேன். அவள் "ஐஸ்"கட்டியில் தூக்கி எறியப்பட்டது போல் நாணத்தால் சுருங்கி நின்ற விடத்திலேயே பாவையாகி விட்டாள்!—இல்லை பொற் பாவையாகி விட்டாள்—வாய்திறக்கவே இல்லை. புலன்கள்தாம் அவளிடமிருந் திருக்குமோ, அன்றி நாண "ஐசில்" சில்லென்றாகி இருந்திருக்குமோ? சந்தேகம்!

நான் மீண்டும் "பாட்டி வந்து விடுமுன் கேட்கின்றேன்; மங்கையர்க்கரசி! நான் போய்வரவா?" என்றேன். அதற்கும் பதிலில்லை. "அப்படியானால் நீ என்மீது கோபமா? என்னோடு பேச மாட்டாயா?" என்றேன்; அதற்கும் பதிலில்லை. பிறகு மங்கையர்க்கரசி! என் மனம் உனக்குத் தெரியாது போலிருக்கிறது. உன்னைபற்றிச் சிற்சில கேட்க வேண்டுமென்று உயிர் போகும் தருணத்திலும் கூட நினைத்தேன். அதனை நீயும் அறிந்திருப்பாய்? என்றாலும் விடை



மங்கையர்க்கரசி புடவையின் ஒரு துனியால் முகத்தை மறைக்க முயன்று, நாணமெனும் பாரத்தால் கண்கள் பூமியை நோக்கி இழுக்கப்பட நின்றாள்.

கூடக் கொடுக்கமாட்டேன் என்கின்றாயோ? மங்கையர்க்கரசி! பாட்டி உனக்குயார்? திருமலையப்பர் உனக்குஎன்ன வேண்டும்; உனக்குத் தாய்தந்தையர் எங்கே?" என்று எத்தனையோ கேள்விகளைக்கேட்டேன். ஒன்றுக்காவது பதிலில்லை. அவள் புடவையின் ஒரு துனியால் முகத்தை மறைக்க முயன்று, நாணமென்னும் பாரத்தால் கண்கள் பூமியை நோக்கி இழுக்கப்பட நின்றாள். அந்த நிலையைப் பார்த்தேன். என்னிருதயம் "அடே முட்டாள்! கோவிந்தராஜு! இந்தப் பொன்போலும் அழகினை விட்டுவிட்டாப் போகப் போகிறாய்! உலகிலெவரும் மனோவாக்குக்காயங்களாலும் உரை முடியாத காதலை வாரிச்சொரிந்த நங்கையைப் பிரிந்துவிட்டு என் செய்யப்போகிறாய்?" என்றது.—உடனே பாட்டிவந்துவிடலாகாதல்லவா? நான் சட்டென்று "மங்கையர்க்கரசி! நான் என்னகேட்டாலும் சொல்லமாட்டாய்! உன் வரலாற்றை நானறியக் கூடாது; அல்லவா?" என்று கூறிக்கொண்டு என் வலக்கரத்தால்—மெதுவாக—அவளது மனோகரக் கன்னத்தில், மோகனக் கன்னத்தில், நளினக்கன்னத்தில் அடித்தேன்......... பாழும்தமிழ்! அடித்தேன் என்பதற்குப் பதில் "பூவைக்கொண்டு பூவைவருடினாற்போல் தொட அதில் இன்பத் தேன்ஊற அதனைப் பருகினேன்" என்று பொருள்படும் ஓர் பதத்தைப் பெற்றிருக்கக் கூடாதா?

நான் அவள் கன்னத்தில் 'அடித்ததும்' அவள் குனிந்தகொண்டே, ஒரு உலகை மயக்கும் புன்சிரிப்பு நிலாவைத்தூவி, இருண்டிருந்த என் அகத்தை (மனதைப்)பிரகாசிப்பித்தாள். உடன் 'மங்கையர்க்கரசி! நீ என்னை எந்த நிலைமையில் விட்டுவைக்கின்றாய் என்பதை உணர்கின்றாயில்லையே! போகட்டும்; என்றைக்காவது என்னை நன்கு அறிந்துகொள்வாய்" என்று கூறிக்கொண்டே திரும்பிவந்து, பாட்டி உட்காரவைத்த விடத்தில் அமர்ந்துகொண்டேன். மங்கையர்க்கரசியும் "சட்டென்று" நடந்து சமையற்கட்டுக்குள் புகுந்து கொண்டாள். இத்தனையும் நான் சொல்வதற்குச் சில நிமிஷமானாலும் சினிமாப்படம் அசைவதுபோல் நடந்தேறிவிட்டது. அப்போது பாட்டி தாம்பூலமும் பாலும் கொண்டு வீட்டுக்குள் வந்தாள். நானோ அது தருணம் ஒன்றும் தெரியாதவன் போல்—சந்நியாசிமாதிரி – உட்கார்ந்து கொண்டிருந்தேன். பாட்டிவந்ததும் மங்கையர்க்கரசியைத்தான் பார்த்தார். நல்ல வேளை! அவள் சமையற்கட்டுக்குள் போய்விட்டாள்! ஆதலால் பாட்டியின்மனம் கொஞ்சம் குளிர்ந்திருக்கலாம் போலிருக்கிறது. இவ்வாறு பாட்டி சந்தேகப்பட்டதின் காரணம் யாதாயிருக்குமோ?

பின் பாட்டி என்னிடம் பலப்பல, பற்பல, பல்லப்பல்ல பேசி, வினவி, கடாவி, துளைத்துத் துளைத்துக் கேட்டு, என் வரலாற்றில் பெரும் பகுதியைத் தெரிந்துவிட்டு—ஆம் பாட்டியின் சாதுரியத்தையும் சாமர்த்தியத்தையும் சமத்காரத்தையும் பார்த்தால் என் மனத்தையும் அதற்குள் குமுறிக்கொண்டு இருந்த அந்தரங்கத்தையும்கூட யூகித்துத் தெரிந்திருந்தாலும் தெரிந்திருப்பார் !!!

அவர் பாலை என்னிடம் தந்துவிட்டு, புன்னகையோடு "தம்பி அன்று நான் தந்த பாலைச் சாப்பிடமாட்டேன் என்று கூறிவிட்டீர்களல்லவா ! அது தான் இப்போது தருகிறேன். நீங்கள் பால் அருந்தாத குறை என் மனத்தைப் புண்படுத்திக்கொண்டிருந்தது." என்றார்.

நான்:—அது ஒரு குறையா பாட்டி? என்னை விட்டு, 80 அடிக்கப்பால், எட்டுகின்ற என்றுயிரை, எப்படியோ இந்த யாக்கையில் இணைத்துவிட்ட எல்லையில்லா வாழியத்தைச் செய்த தங்கட்கு நான் ஆற்றவேண்டிய பெரும் தொண்டு—நன்றி—வணக்கம்—கடல் போன்ற பரப்புடைய பாலையருந்தியதற்கு சமமல்லவா? நீங்கள் இப்போது தரும் பால், எனக்குச் செய்த, நினைக்க முடியாத உதவியை இன்னும் அதிக விஸ்தாரமாக்குகின்றது. ஆதலால் என் கடப்பாடு மிகுகின்றது. இப்படியே நீங்கள் என்னைக் கடனாளியாக்கினால் நான் மஞ்சள் காகிதத்தைப் போட்டுவிட்டு உங்கள் முன்னால் படுத்துக்கொள்ள வேண்டியதாகத்தான் வரும்.

பாட்டி இலேசாகச் சிரித்தார்.

பின், சற்று நேரத்திற்கப்பால் விடைபெற்றுக்கொண்டு செல்வதற்காக எழுந்தேன். எழுந்ததும் என் கண்களில்—ஆம்........எங்கிருந்தோ பிரிவாற்றாமை என்னும் "பேய்" முகத்தை அமுத்த, கண்ணீர் ததும்பி விட்டது. ஆதலால் இடறிய குரலில் நான் 'போய் வருகிறேன்' என்றேன். இப்படி நான் நொய்மையைக் காண்பித்தது பிசகு தான்; என்றாலும் என்னால் அடக்க முடியவில்லை; என் செய்வேன்?

நான் மேற் சொன்னவாறு கூறிக்கொண்டே பாட்டியை நோக்க—ஆம் உண்மையாக அவர் முகத்திலும் சங்கடம் வந்து விட்டது. வாயும் அதுகாறும் கூத்தாடிக்கொண்டிருந்த புன்னகை நீங்க முகம் விகாரப்பட்டுக் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. அந்நிலையைக் காண என் மனம் அதிகமாகச் சோர்ந்தது என்று கூறவா வேண்டும்?

நான் அப்பால் வீட்டுக்குள் நோக்கினேன்! வாசகர்களே! இந்நோக்கு மங்கையர்க்கரசியின்பால் எய்யப்பட்டதன்றோ? பாட்டி அதனைக் குறிப்பாகத் தெரிந்துகொண்டு தன் வருத்தம் நிரம்பிய முகத்துடனே "மங்கையர்க்கரசி, ஐயா விடை பெற்றுக்கொள்கிறார்கள்" என்றார். என்றதும் வீட்டுக்குள்ளிருந்து "உம்ம்ம்" என்ற சத்தம் வந்தது. நான் கூர்மையாகச் சத்தம் வந்த இடத்தை நோக்கினேன். ஆ! என்ன ஆச்சரியம் அங்கு—கதவோரத்தில்—மங்கையர்க்கரசி நெடுநேரமாக நின்று, எங்கள் பேச்சு, தமாஷ், உபசாரம், நன்றி யறிவிப்பு ஆகிய எல்லாவற்றையும் கவனித்துக் கேட்டுக் கொண்டே இருந்திருக்கின்றாள். நான் பார்த்தபோது அவள் முகம் அழுகையால் உப்பிக் கண்களெல்லாம் கலங்கியிருந்தன. அவள் கண்ணை என் கண்களும் என் கண்ணை அவள் கண்களும் சந்தித்தன பரிதாப நிலைமையில்! சந்தித்தால் நாணம் இடைப் புகுந்து இரண்டையும் அப்புறப்படுத்தவன்றோ செய்யவேண்டும்? ஆ! அதுகாலை நாணம் வரவில்லை. அதற்குப் பதிலாக எங்களிருவர் கண்களும் எதுவோ இரகசியம்—சொந்த சமாசாரம்—பேசின. அது என்னவென்பது எனக்கும் தெரியாது—மங்கையர்க்கரசியும் அறியாள்.

(வணக்கம். அடுத்த வாரம் தொடர்கின்றேன்).

பிரஞ்சு தேச அரசியல்

நடைமுறையும் மக்களுரிமையும்

(எஸ். கே. சாமி)

சரித்திர வாயிலாய் 1870-ம் வருடம் ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் நடைபெற்ற போரின் பின்னர்தான் பிரான்சில் சுதந்திர ஆட்சி நிறுவப்பட்டதென்று தெரிகிறது. அவ் வாட்சி முறையை 1875-ம் ஆண்டில் பிரஞ்சு பாராளுமன்றமே (Parliament) நிரூபணம் செய்தது. 1884-ல் அமுலில் வந்த அவ்வாட்சிக்கு இன்று வரையிலும் மாற்றமில்லை.

நாகரிக நாடுகளின் ஆட்சி முறையில் மூன்று பகுதி காணப்படுவது போலவே பிரஞ்சு நாட்டிலும் 3 பிரிவுகள் காணப்படுகின்றன. அவை (1) சட்டசபை அதிகாரம் (Legislative Power) (2) நிர்வாக சபை அதிகாரம். (Executive Power) (3) நீதிபரிபாலனம் (Judicial Power) என்பவைகளாம்.


பிரான்சில் இருவித சபைகளுண்டு. அவை செனட்டு, டிபார்சுச் சபை (Senate & Chamber of Deputies) என்றழைக்கப்படும். செனட்டு சபையில் 40 வயது நிரம்பியவர்கட்கே அங்கத்தினராக நியமனம் பெறலாமென்ற திட்டமுண்டு. அச்சபையின் காலாவதி 9 வருடங்களாகும். "ஓட்டு"ப் பெற்றவர்களே அங்கத்தினராகலாம்; எனினும் சட்ட சபைகளிலும், மாகாண சபைகளிலு மிருந்தே இவ்வங்கத்தினர்கள் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பிரஞ்சு இந்தியாவின் சார்பாக ஓர் அங்கத்தினர் இச்சபையில் இடம் பெற்று வருகின்றார்.

டிபார்சு சபையில் (Chamber of Deputies) நிறைவேறிய மசோதாக்கள் அங்கீகாரத்திற்காக ஸெனட்டு சபைக்கு அனுப்பப்படுகின்றன. பொறுப்பு வாய்ந்த அச்சபையின் அங்கீகாரம்பெற்ற பின்னரே, மசோதாக்கள் நடை முறையில் கையாளப்படும். பொக்கிஷ விஷயங்களைத் தவிர (Except Finance) வேறு காரியங்களெல்லாம் ஸெனட்டு சபையின் அங்கீகாரம் பெறவேண்டுவது இன்றியமையாததாகும்.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட டிபார்சு சபையின் (Chamber of Deputies) அங்கத்தினர் பதவிக்கு 25 வயது நிரம்பியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 21 வயது நிரம்பிய எந்தப் பிரஞ்சுகாரனுக்கும் ஓட்டுக்கொடுக்கு முரிமையுண்டு. பிரஞ்சு இந்தியாவின் சார்பாக இச்சபையிலும் ஓர் அங்கத்தினர், இடம் பெற்று வருகின்றார். இச்சபையின் மொத்தம் அங்கத்தினர் தொகை 615. பொக்கிஷ விஷயங்களை (finance) இச்சபையிலேயே பேசி முடிக்கின்றனர்.

இவ்வங்கத்தினர்களுக்குக் கௌரமான ஓர் தொகையை நல்குவதோடு, பிரயாணச் செலவும் அரசாங்கத்தார் அளித்து வருகின்றனர். சிக்கலான முக்கிய காரியங்களை, இரு சபைகளும் ஒன்று கூடி வாதம் செய்து முடிவுக்குக் கொண்டு வரும். இப்படிக் கூடுவதைத்தான் பிரஞ்சு தேசிய சபை (French National Assembly) என்று கூறி வருகின்றனர். தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், பெரிய ராஜ்ய விஷயங்களை திருத்தியமைக்கும் அதிகாரமும், இவ்விதக் கூட்டுச் சபையின் விசேட உரிமையாகும். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்—இவையே இச்சபையின் மூலாதார வார்த்தைகள். இவ்வித வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே ஆட்சி முறை நடைபெற வேண்டு மென்ற அழுத்தமான சட்டமொன்றுண் டென்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

நிர்வாகக்கமிட்டியின் முழு அதிகாரம் (Executive power) பிரஞ்சு தேசத் தலைவருக்கும், அன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்குமே உண்டென்பது கவனிக்கத் தக்கது. தலைவரைத்



ஸ்ரீமதி ஜெ. எம். சென்குப்தா அவர்கள் சேலம் அகில இந்திய சுதேசிக் காட்சியைத் திறந்து வைப்பதற்காக வந்த வழியில், சென்னையில் வரவேற்கப்பட்டார். படத்தின் நடுவில் ஸ்ரீமதி குப்தா மலர்மாலைகளணிந்து நிற்கிறார்.—P. P. B.

தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, கூட்டுச் சபையின் (French National Assembly) தனிவுரிமையாகும். சபையின் அங்கத்தினர் ஒருவருக்காவது, வேறு கவுரவம் வாய்ந்த பிரஞ்சு தேசத்தாரொருவருக்காவது, தலைவர் பதவிக்கு அபேக்ஷகராய் நிற்கலாம். 7 வருடங்களுக்கொரு முறை தலைவர் தேர்தல் நடைபெறும். சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைப் புனராலோசனைக்காகச் சட்ட சபைக்கு அனுப்பும் அதிகாரமும் தலைவருக்குண்டு. தவிர, ஸெனட்டு சபையின் சிபார்சுச்சபையை (Chamber of Deputies) கலைக்கவும், சிறைத் தண்டனையை மாற்றவும், குறைக்கவும், நீடிக்கவும், அன்னிய அரசாங்கங்களோடு கடிதப் போக்குவரத்துகள் செய்யவும், தலைவருக்கு விசேட அதிகார முண்டென்பதை நேயர்கள் அறிதல் வேண்டும். ஆனால் ஏனைய அரசாங்கத்துடன் ஏதாவது திட்டம் செய்ய வேண்டுமெனில், நியம சபையின் அங்கிகாரம் பெற்ருக வேண்டும். தலைவருக்கு யோசனை கூற 13 பேரடங்கிய மந்திரி சபை யொன்றுண்டு. இதைத்தான் காபினெட் (Cabinet) என்று கூறுகின்றனர். சர்க்காரின் ஒவ்வொரு இலாகாவும் ஒவ்வொரு மந்திரியின் பொறுப்பி லடங்கியதாகும். மந்திரிகளுக்கு எல்லாச் சபைகளிலும் வாதம்செய்ய உரிமையுண் டெனினும், அவர்கள் அங்கத்தினர்களாக நியமனம் பெற்ற சபையிலேயே ஓட்டுக்கொடுக்கலாம்.


நீதிபரிபாலனம் சம்பந்தமாக பாமர மக்களை விசாரணை செய்வதற்கும், கௌரவமான உத்தியோகஸ்தர்களை விசாரணை நடத்துவதற்கும் தனித் தனியே இரண்டுவித நியாய சபைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. வியாபார விஷயமான விசாரணைகளைச் சரிவர நடத்துவதற்கு வேறு நியாய சபை யொன்று (Commercial Courts) ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவையெல்லாம் மிகவும் நேர்மையாகப் பார்வை யிடப்படுகின்றன.

பிரஞ்சு மக்கள் தம் நாட்டு ஆட்சி முறையில் எத்துணை ஆழம் கண்ணும் கருத்துமா யிருக்கின்ருர்களோ, அதுபோலவே பிரஞ்சு இந்தியாவின் ஆட்சி முறையிலும் கவனம் செலுத்துகின்ருர்கள். புதுச்சேரி, அல்லது பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, யானன், சந்திர நாகூர் இவை ஐந்தும் இந்தியாவிலிருக்கும் பிரஞ்சுப் பகுதிகள். இப்பகுதிகளின் ஆட்சிமுறை பிரஞ்சு நாட்டின் பாராளுமன்றத்தின் அனுமதி பெற்ற உத்தியோகஸ்தர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. பிரஞ்சு நாட்டின் சட்டதிட்டங்களே பிரஞ்சு இந்தியாவிலும் நடைபெற்று வருகின்றன.

பிரஞ்சு கவர்னரின் கீழ் பொதுக் காரியதரிசி (General Secretary) என்ற ஓர் உத்தியோகஸ்தருண்டு. அவரது தலைமைக் காரியாலயம், பாண்டிச்சேரியிலிருக்கின்றது. பிரஞ்சு இந்தியர்கள் வருடந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை யொன்றும், புதுச்சேரியில் நிறுவபட்டிருக்கின்றது. இச்சபையின் அங்கத்தினர்கள், முறையே புதுச்சேரி, காரைக்கால்,யானன்,சந்திரநாகூர்,மாஹி இவைகளிலிருந்து முறையே 12-8-2-4-2--ஆவர். பிரஞ்சு நாட்டிலும், பிரஞ்சு இந்தியாவிலும் பெண்களுக்கு ஓட்டுரிமையில்லை. இச்சபையின் முடிவான தீர்மானங்களை, பிரஞ்சு கவர்னருக்காவது பிரஞ்சு தேசத்தின் தலைவருக்காவது (President) திருத்தியமைக்க உரிமையில்லை.

பிரஞ்சு இந்தியாவில் மொத்தம் 17 நகர சபைகளுண்டு. ஒவ்வொரு நகர சபையும் 12 அங்கத்தினர்கள் அடங்கியதாகும். நகரசபைத் தலைவர் மிகவும் மேன்மையாக நடத்தப்பட்டு வருகின்ருர். பிரிட்டிஷ் இந்தியா நகரசபைத் தலைவரைவிட பன்மடங்கு அதிகாரம் பெற்றவராகவே பிரஞ்சு இந்தியா நகர சபைத் தலைவர் விளங்குகின்ருர். சில சந்தர்ப்பங்களில் பிரஞ்சு இந்தியா நகர சபைத் தலைவருக்குப்போலீஸ் அதிகாரமும் கையாளலாமென்ற சட்டமுண்டு.

பிரஞ்சு இந்தியா அரசாங்கத்தின் கல்விமுறை போற்றிப் பின்பற்றத் தக்கதாகும். கட்டாயக் கல்வி கையாளப்பட்டு வருகின்றது. பதின் மூன்று வயதுக்குக் கீழடங்கிய பாலர்களை பள்ளிக்கூடத்திற்கனுப்பாத பெற்ரோர்கள் சிறைத் தண்டனை யடையவேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்திவருகின்றது. அங்கு, பள்ளிக்கூடச்சம்பளம் கிடையா. உயர்தரக் கல்வி கற்பதற்கும் அரசாங்கம் பெரிதும் உதவிசெய்து வருகின்றது. நாட்டு நன்னிலைமையின் அடிப்படையாகிய இவ்விஷயத்தில் அரசாங்கம் கருதுவது புகழ்தற்குரியது.



ஆகஸ்டு 2ந்-தேதி திருச்சியில் மிஸ்டர் E. D. பிலிப்ஸ், R.D.O. அவர்களால் ஒரு கண்ணாஸ்பத்திரி திறந்து வைக்கப்பட்டது. —Pon.

இந்திய அரசியலை இந்தியர்களே நிர்ணயிக்க வேண்டும்

டாக்டர் அன்சாரி கூற்று

தற்போது இங்கிலாந்திலிருக்கும் டாக்டர் அன்சாரியை "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை நிருபர் பேட்டி கண்டபோது பின் வருமாறு கூறினர் :-

"நாட்டிலுள்ள தற்கால நிலை சீர்திருந்த வேண்டும், கவர்ன்மெண்டுக்கும் ஜனங்களுக்கு முள்ள வேற்றுமை கூடிய வரையில் தடுக்கப்படவேண்டும் என்பதற்காகவே காங்கிரஸ் தன் நியாயமான சட்ட மறுப்பிலிருந்து விலகிக் கொண்டது.

"நாட்டில் வேற்றுமை உணர்ச்சியும், அதிருப்தியும் ஸ்ரீ கான் அப்துல் காபூர் கானையும் மற்றும் அவரது துணைவர்களையும் சிறைபடுத்தியதாலேயே ஏற்பட்டன. மற்றும் ஜவஹர்லால் நேருவைச் சேர்ந்தாற்போல் சிறையில் வைத்ததையுமே அதிருப்திக்குள்ள மற்றொரு காரணம். அபேதவாதக் கட்சியின் தலைவர் என்ற ஹோதாவில் வரும் காங்கிரஸ் கூட்டத்திற்கு அவர் அவசியமிருக்க வேண்டும்."

மேலும் இந்திய சட்டசபையில் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு நிரந்தரமாக எதிர்க் கட்சியாயிருக்குமென்று டாக்டர் அன்சாரி அழுத்தமாகக் கூறினர்.

காங்கிரஸ் இந்தியாவின் சரியான பிரதிநிதித்துவ சபை அல்லவென்று சர்க்கார் சொல்வதற்குப் பதிலாக டாக்டர் அன்சாரி சொன்னதாவது :—

காங்கிரஸ் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அயர்லாந்து போன்ற தேசங்கள் பின்பற்றிய சட்ட வரம்புக்குட்பட்ட ஒரு முறையையே கையாளுகின்றது. அது ஒரு தேசிய ஆட்சித் திட்டத்தை அமைக்கவேண்டுமென்பது அதன் ஆசை. அரசாங்கம் ஏற்படுத்த நினைக்கும் சட்டத்திலிருந்து இந்தியர்களால் இந்தியாவிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டிய சட்டம் சிறிது முரணயிருக்கும். என்ருலும், அது இந்தியர்களாலேயே அவர்களுக்கு செய்யப்படவேண்டும்.

ஸ்ரீமதி கமலா நேரு

பண்டித ஜவஹர்லால் நேருவின் மனைவியாரான ஸ்ரீமதி கமலா நேரு அவர்கள் காச நோயினல் மிகவும் கவலைக்கிடமான நிலைமையி லிருப்பதாகவும் இந்தச் செய்தி சிறையிலுள்ள பண்டித ஜவஹர்லால் நேருவுக்குத் தெரியப்படுத்தி இருப்பதாகவும் தெரிகிறது.

கப்பலேறிய தங்கம்

பிரிட்டன் தங்க நாணயத்தை கைவிட்டதிலிருந்து நாளது தேதி வரை பம்பாயிலிருந்து ரூ. 1,96,49,10481 பெறுமான தங்கம் கப்பலேறிப் போயிருக்கிறது.



டாக்டர்கள் மனிதர்

பிணியும் அதனால் விளையும் அவமானத்தையும் தீர்க்க ஏற்படுவதாக பொது ஜனங்கள் எண்ணம். ஆனால் சில டாக்டர்கள் இரகசியமாகப் படும் பாட்டைச் சொல்ல முடியாது. தமிழ் நாட்டிலுள்ள ஒரு பிரபல டாக்டர் குழந்தை பிறப்பதற்கு மருந்து கொடுப்பதாக விளம்பரம் செய்து தடபுடல் செய்கின்றார். ஆனால் அவருக்குக் குழந்தையில்லை. வருஷத்தில் ஒரு தடவை ராமேசுவரத்திற்கும், மற்றொரு தடவை காசிக்கும், மூன்றாவதொரு தடவை கன்னியா குமரிக்கும் போவதாகக் கேள்வி. இந்த டாக்டரின் இனத்தைச் சேர்ந்தவர் போலும் மோரதாபாதிலிருக்கும் ஒரு வைத்தியர். இவருடைய மனைவி சமீபத்தில் ஒரு குழந்தையைப் பெற்றார். அக் குழந்தை சுருங்கக் கூறினால் மனித உருவத்திலேயே இல்லை. ஏதோ ஹநுமான் தப்பித் தவறி பெண்ணுருவத்தில் பிறந்து விட்டது போன்றிருந்தது. அதன் முழங்கால் முழுதும் கருமை நிறமுள்ள கூந்தல். முகத்தில் குண்டு கண். நகங்களெல்லாம் கூர்மையாக வளர்ந்து நீண்டு பார்க்க வருபவர் குடலைப் பிடுங்க அமைந்தது போலிருந்தன. கால்களும் கைகளும் இரண்டு மூன்று வருடம் பட்டினியிருந்த தேளையின் கை கால்களைப் போன்றிருந்தன. இவ்வளவு அழகு போதாதென்று நெற்றி முக்கால் முழு உயரம்; அதில் இரண்டு கொம்பு. அம்மம்மா! டாக்டரின் மனைவி இவ்வளவு அபூர்வமான குழந்தையைப் பெற்றாளென்றால் என்ன தமாஷ்! நல்ல வேளை! சிசுவைப் பேர்வைத்து பார்க்குமுன் அதுமார்க் அவதாரம் விண்ணுலகம் போய் விட்டது. ஆனால் பாவிகள்! பத்திரிகைக்காரர்கள் டாக்டரைச் சும்மா விட்டார்களில்லை. பத்திரிகைகளிலெல்லாம் எழுதி விட்டு விட்டார்கள்.

கொஞ்ச நாளாக இந்துமத

சாமிகள் அற்புதங்கள் நிகழ்த்துவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஊழியன் அன்பர்கள் அவ்வப்போது அவற்றைப் படித்திருக்கலாம். இவ்வாறு அற்புதங்கள் இந்த சமயத்தில் ஏற்படுவதற்குக் காரணம், ஹரிஜன இயக்கமும், காந்திஜீ பிரசாரமும், பார்லிமெண்டரி போர்டு வேலையுமாக இருக்கலாம் போலும். சமீபத்தில் திருப்பதி ஆலய மகந்துவிடமிருந்து வந்த ஒரு செய்தி விக்ரகமாகிய மகா விஷ்ணுவின் கையிலிருக்கும் சங்கமும் சக்ரமும் அசைகின்ற தென்று கூறுகிறது. இதற்கு வியாக்கியானம் சொன்னால் சனாதனிகள் நம்மேல் சீறி விழுந்தாலும் விழுந்து விடலாம். ஆனால் அவர்கள் அதனையொரு அற்புதமென்று தான் நினைக்கின்றார்களாம்.

சிக்காகோ நகரில்

புத்தகப்பிரசுர வேலைசெய்து வரும் வில்லார்டு இ. பானெர் என்பவருக்கும் அவர் மனைவிக்கும் அவ்வளவாக சிநேகமில்லையாம். அந்தப்பெண் என்ன காரணம் சொல்லி புருஷனிடமிருந்து விவாகரத்துச் செய்து கொள்ளலாமென்று நீண்டநாளாக யோசித்துக் கொண்டே இருந்தாள். ஆனால் வில்லார்டுக்கு அவளைவிட மனமில்லை. ஆதலால் பல வழியிலும் அவளைத் தம்மிடமிழுத்துக்கொள்ள வழிதேடிக்கொண்டே இருந்தார். ஒருநாள் அவளைத் திருப்திபடுத்துவதற்காகப் புதிதாய் பிரசுரம் செய்யப்பட்ட ஒரு புத்தகத்தை அனுப்பிக்கொடுத்தாராம். அப்புத்தகத்தின் பெயர் விவாக ரத்துச்செய்வதற்கான 201 வழிகள். இப்புத்தகத்தைப்படித்துப் பார்த்தாள் ஸ்ரீமதி வில்லார்டு. ஒரு மூலையில் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விஷய மிருந்தது. உடன் அதன்படி நடந்து புருஷனைத் துரத்தி விட்டாள்.

விளம்பரமே

வியாபார விருத்தி என்றால் இந்தியர்கட்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் வெளி நாட்டார்கள் விளம்பரத்தை உயிர்போல் மதிக்கிறார்கள். காலிபோர்னியா நகரிலுள்ள ஒரு மோட்டார் டயர் வியாபாரி வேடிக்கையான விளம்பர முறையொன்றைக் கையாடினாராம் தன்னிடமுள்ள பழைய டயர்களையெல்லாம் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி ஒரு பனைமரம் போலக்கி அதன் மீது உட்கார்ந்தானும். இந்த ஆச்சரியத்தைக் கண்டதும் ஏராளமான ஜனங்கள் வந்து கூடினர். அவர்களிடம் தம் விற்பனையையும் சரக்கின் நயத்தையும் பற்றிக் கூறினன். இதுபோல் இந்தியர் டயர் வியாபாரிகளும் அடுக்கிக் கீழே விழுந்து விடாதபடி ஏறி உட்கார்ந்தார்களானால் ஒரு விளம்பரமாகத் தானிருக்கும்.

தங்கம் தங்கமேன்று

தவிப்பவர்கள் ஆகாயத்தில் தங்கமிருக்கிற தென்றால் ஆச்சரியப்படமாட்டார்களா? காலிபோர்னியா பெர்கெலியிலிருந்து வரும் ஒரு செய்தியால் டென்வர் நகர எரிவெள்ளி ஆராய்ச்சிச்சாலையில் ஒரு எரிகல்லை யெடுத்துப் பரிசோதித்தார்களென்றும், அதில் தங்கப் பொடிகளிருக்கக் காணப்பட்ட தென்றும் தெரிகிறது. இந்தச் செய்தி மேனாட்டார் காதுகளை அடைந்ததானால் எரிவெள்ளிகள் பாடு திண்டாட்டம் தான். அதோடு பல தேசத்தாரும் எங்கு வானத்தில் சண்டை போடத் தொடங்கி விடுவார்களோ என்னமோ?

சிகாகோ நகரில்

ஒரு கலி கா லக் கும்பகர்ணன்—இல்லை; பெண்ணாதலால் கும்பகர்ணி என்று சொல்லலாம்— இருக்கிறாள். ராமாயண கும்பகர்ணன் ஆறுமாதந்தான் தூங்குவானும். இப்பெண் அப்படியல்ல; இரண்டுவருடம் தூங்குகிறாள். அதோடு தூக்கம் விழித்தும் பேசவில்லை—புராணப் பிரியர்கள் இவள்

ஜப்பான்—ரஷ்யா யுத்தம்

ஸ்ரீமதி லைலா ஜோஸ்யம்

இலங்கை, கொழும்பிலுள்ள ஸ்ரீமதி லைலா என்ற பெண்ணை, உலகில் அநேகர் தீர்க்கதரிசியாக கருதுகின்றனர். அப்பெண் கூறிய பல விஷயங்கள் அப்படியே பலித்துவிட்டன. ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியாவார் என்றும், மறு வருஷம் டால்பஸ், ஆஸ்திரியாவின் சர்வாதிகாரியாவரென்றும் அத்தீர்க்கதரிசி கூறியபடியே நிகழ்ந்தது. அப்பெண் இனி ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் யுத்தம் நடைபெறுமென்று அறிவித்துள்ளார்.

1928-ம் வருஷம் மேமீ ஸ்ரீமதி லைலா, பிரஞ்சு நாணய மதிப்பு ஸ்திரமாகி விடுமென்று கூறினர். சிறிது காலத்திற்குப் பிறகு சீனவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் ஏற்படு மென்பதையும் குறிப்பிட்டார். 1929-ம் வருஷம் நவம்பர் மாதம் நியூயார்க்கில் பண்டமாற்று மார்க்கெட் வீழ்ச்சியடையுமென்றும், இன்னும் பல விஷயங்களையும் குறிப்பிட்டார்.

ஜெர்மன் யுத்த பலன்

அப்பெண் மேலும் கூறியதாவது "ஜெர்மன் யுத்தத்தின் பலனை ஜெர்மனி மூன்று ராஜ்யங்களாகும். அந்த ராஜ்யங்களின் பெயர்கள் வருமாறு:— பவேரியா, உர்டென்பர்க், பிரஷ்யா, கெய்சரின் பேரன்மார்களில் ஒருவர் பிரஷ்யாவின் சிம்மாசனம் ஏறுவார். அந்தப் புதிய மன்னர் நீண்ட காலம் ஜீவித்திருக்க மாட்டார்."

கேள்வி:—கெய்சரின் பட்டத்து இளவசருக்கு ராஜ்யம் கிடைக்காதா?

பதில்:—அவர் நாஜி கட்சியினருடன் மிக்க நெருங்கிப் பழகி வருகிறார். அதனால் அவருக்குச் சிம்மாசனம் கிடையாது.

ஜப்பான்-ரஷ்யா யுத்தம்

கேள்வி:—ஜப்பான் பிரதேசத்தில் யுத்தம் நடக்குமா?

பதில்:—ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் யுத்தம் நடக்கும். அந்த யுத்தத்தில் ஜப்பானே வெற்றியடையும். அமெரிக்காவோ அல்லது எந்த ஐரோப்பிய வல்லரசோ குறுக்கிடாது. ஆகவே உலக யுத்தம் நடக்காது. ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நீண்ட காலத்திற்குப் பிறகு யுத்தம் நடக்கும்.

சீனவில் உள்நாட்டுக் கலகம்.

சீனவில் உள்நாட்டுக் கலகங்கள் அதிகரிக்கும். அந்நாட்டில் வடக்கே ஒன்றும், தெற்கே மற்றொன்றும், தென் கிழக்கே ஒன்றுமாக மூன்று ராஜ்யங்கள் ஏற்படும். அம்மூன்று ராஜ்யங்களுக்கும் ஒரே சக்ரவர்த்தி இருப்பார். தற்போது குஞ்சுகோவிலுள்ள சக்ரவர்த்தி, சீன சக்ரவர்த்தியாகிவிட முடியாது. நீண்ட காலத்திற்குப் பிறகு மஞ்சுகோவும் சீனவின் ஒரு பாகமாகிவிடும்.

ஸ்பெயின் அரசியல்.

ஸ்பெயின் தேசத்து மாஜிமன்னரான அல்பான்ஸோ மீண்டும் சிமாசனம் ஏறமாட்டார். அவரது மரணத்திற்குப் பிறகு, ஸ்பெயின் தேசத்தில் முடியரசு ஏற்படும். மாஜி மன்னரின் மூத்த குமாரர் சிம்மாசனம் ஏறுவார். அவர் 10 வருஷத்திற்குப் பிறகு தமது மனைவியிடமிருந்து பிரிந்து பெல்ஜியம் இளவரசியை விவாகம் செய்து கொள்வார். அதன் பிறகே அவருக்குச் சிம்மாசனம் கிடைக்கும்.

ராஜப் பிளவைக்கு மருந்து

இலங்கைத்தீவின் வடபாகத்தில் மருந்துச் சத்துள்ள ஊற்று காணப்பெறும். அந்த ஊற்று ஜலம் ராஜப் பிளவைக்குக் கைகண்டமருந்தாக இருக்கும். பூமியை 200 அடி தோண்டிய பிறகே அந்த ஜலம் கிடைக்கும். அதனை உலகின் பலபாகங்களுக்கும் ஏற்றுமதி செய்வார்கள்.

லாச்நெஸ் ஏரியிலுள்ள பிரம்மாண்டமான ஜெந்துக்களையும் இன்னும் 1 வருஷத்தில் பிடித்து விடுவார்கள். (அந்த ஜெந்துக்கள் ஜலத்தில் தோன்றி திடீரென்று கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடும்; அவை பூதங்கள் போன்றவையாகும்) உலகத்திலே அவ்விதமான ஜெந்துக்கள் இரண்டே இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஆணும், மற்றொன்று பெண்ணுமாகும். அவை ஒரு குட்டிபோடும். அக் குட்டியே முதலில் அகப்படும். பிறகு மற்றிரண்டும் அகப்படும். அந்த ஜெந்துக்களின் உடல் மிக்க நீளமானதாகும். வெண்மை நிறம், வால் நீலம்; சிறு தலைகளும், நீண்ட கழுத்தும் பெரிய கண்களும் உண்டு. ஜலத்தில் முளைக்கும் செடி கொடிகளைத் தின்றே ஜீவித்திருக்கின்றன.

சுயசரிதம்

ஸ்ரீமதி லைலா தமது சுயசரிதத்தைப் பற்றிக் கூறியதாவது:—"எனது தந்தை ஒரு இந்தியராவார்; எனது தாய் ஹங்கேரியா தேசத்தைச் சார்ந்தவர். எனது சிறு பிராயத்தின்போது நான் துருக்கி சர்க்கார் நிர்வாகத்திலுள்ள ஒரு தீவில் வாசம் செய்து வந்தேன். பிறகு பாரிஸ் நகரிலேயே தங்கினேன். நான் இப்பொழுது உலக யாத்திரை செய்து வருகின்றேன். அடுத்தவாரம் இந்தியா போய்ச்சேருவேன். "உலக மக்களின் ஒழுக்கமும் பழக்க வழக்கங்களும்" என்ற தலைப்புடன் புத்தகமொன்றை எழுத சமாசாரங்களைச் சேகரிக்க என்னைப்பிரஞ்சு சர்க்கார் சர்வதேசசரித்திர ஆராய்ச்சிச் சங்கத்தின் பிரதிநிதியாக அனுப்பியுள்ளனர்."

விஷயத்தைத் தெரிந்து கொண்டால் எட்டு முழம் குதிக்கலாம்; கும்பகர்ணன் இருந்தது உண்மையென்று கூவலாம். இப்பெண்ணின் பெயர் மிஸ். பட்ஷிரியா மாகையர். இவள் 1932-ம் வருடம் பெப்ரவரி மாதம் தூங்கத் திலாழ்ந்தார். 1934 வரையிலும் எழுந்திருக்கவில்லை. கடைசியில் கண் விழித்தாளாம்; எனினும் வாய்திறக்க வில்லை. டாக்டர்கள் பலர், இவளுக்கு என்ன நோய் வந்திருக்கிற தென்று சொல்ல முடியாமல் தத்தளித்தார்களாம். கடைசியில் சிலர் ஒழுங்காக ஆகாரத்தைக் கொடுத்து வந்தால் போதுமென்று கூறி ஆரஞ்சுப் பழம், முட்டை, பால் முதலியவற்றைச் சிபார்சு செய்தார்களாம். அவ்வுணவு கொடுக்கப்பட்டதும் கும்பகர்ணியின் உடம்பு கொழுக்கத் தொடங்கியது. (ராமாயணக் கும்பகர்ணன் தூங்கும்போது உணவு உட்கொண்டதாகச் சரித்திரம் கூறவில்லை.) ஆதலால் டாக்டர்களில் ஒருவரிருவர் உணவைக் குறைக்கச் சொன்னார்களாம்.

ஊக்கமாக இருப்பதற்கு இது அறிகுறி போலும்.

தற்பொழுதுள்ள குறைந்த விலையில் ரப்பரை வாங்கி வருவது நலமென்று நமது வாடிக்கைக்காரர்களுக்கு நாம் நினைப்பூட்டுகிறோம். இப்படிச் செய்வதால் நல்ல லாபமும், ரப்பர் விலையில் ஏற்றமும் ஏற்படுவதோடு, மார்க்கட் விலையும் உறுதியாகும்.



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஷூ ஆடி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஷூ ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஜூலை	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஷூ சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி.

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0

உண்டியல் விலை.

ஸ்டெர்லிங் விற்பனை	157¼
„ 30 நாள் தவணை வாங்குவது	150

தங்கம், வெள்ளி.

சென்னை, ஆகஸ்டு 7-உ

சவரன் (சில்லரை)	21—10—6
„ மொத்தமாக	21—10—3
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—5—9
மூளா தங்கம்	33—14—0
வெள்ளி	
1 ரூபா எடைக்கு	0—10—0
100 ரூபா எடைக்கு	59—0—0

ரப்பர்.

கொழும்பு, ஆகஸ்டு 4உ

கிரேப் ரப்பர் விலை	37⅜ சென்ட்
ஷீட் ரப்பர்	35 „

லண்டன், ஆகஸ்டு, 7உ

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. விற்பனை சுமார்.

ஸ்பாட் ரப்பர் பவுண்டு 1-க்கு விலை 7 7/16 பென்ஸ்.

லண்டன் கடிதம்

லண்டனிலிருந்து ஜுலை 26-ந்தேதியிட்டு வெளிவந்த ஒரு கடிதமாவது:—

நாம் முன்னமேயே கூறியது போல் ரப்பர் மார்க்கெட் வியாபாரம் மந்தமாகவே யிருக்கிறது. ரப்பர் விலை ஐரோப்பாவில் நிரந்தரமாகவில்லை. ரப்பர் கையாளுவோர்களின் தன்மையால் இதனை நிரந்தரமாகக் கூறுவதற் கியலாதிருக்கிறது. வேனிற் காலத்தில் ஒரு சிறிது

கப்பல்.

ரங்கூன்

அரோண்டா ஆகஸ்டு 10-ந் தேதி புறப்படும்.

நூர்ஜஹான்: ஆகஸ்டு 11-ந் தேதி புறப்படும்.

மெயில் கப்பல் வெள்ளிக்கிழமை தோறும் போகும்.

மலேயா

எரின்புரா: ஆகஸ்டு 8-ந் தேதி வந்து 10-ந் தேதி புறப்படும்.

ரஜூலா : ஆகஸ்டு 11-ந் தேதி வந்து சேரும். ஆகஸ்டு 14-ந் தேதி மீண்டும் புறப்படும்.

தூத்துக்குடி, கொச்சி, பம்பாய்

கோஹினூர் : ஆகஸ்டு 6-ந் தேதி சென்னைக்கு வரும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

காம்பெயின் : ஆகஸ்டு 7-ந் தேதியும்

ஜெனரல் மெட்ஜிங்கர் : செப்டம்பர் 4-ந் தேதியும்

காமிசெயர் ராமேல் : அக்டோபர் 2-ந் தேதியும் சென்னை வந்து சேரும்.

லண்டன்

ஆஸ்திரேலியா : ஆகஸ்டு 14-ந் தேதி வரும்.

மேனு : செப்டம்பர் 11-ந் தேதி வரும்.

டோமலா : அக்டோபர் 9-ந் தேதி வந்து 10-ந் தேதி புறப்படும்.

கிளான்மக்னப் : ஆகஸ்டு 16-ந் தேதி வந்து 18-ந் தேதி புறப்படும்.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.